கலிவரின்

# லிலிபுட் பயணம்

வித்துவான் ந. சண்முகம்

24 பவுண்டு (20"×30") வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டது.

APPROVED BY THE MADRAS TEXT-BOOK COMMITTE

*For class use in Secondary & High Schools*
*(Vide Fort St. George Gazette Supplement to Part I-B*
*dated 18-5-60' Page 17)*

ஸி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ்

சென்னை-1.

பதிப்புரிமை] 1960 [விலை ரூ. 1=00.

## இந்நூலின் மூலம்....

என் பயணத்தைப்பற்றி இளைஞர்களாகிய நீங்கள் அறிவது அவசியமென்பது என் ஆவல். உங்கள் சிந்தனைத் திறனும் செயல் வன்மையும் பெறும் என் பயணத்தின் மூலம் அறிந்த செய்திகளை உணர்ந்து ஊக்கம் அடையுங்கள். பிரயாணம் ஒரு கலை என்பது உண்மை என்பதனை உணர்வீர்கள். நான் கண்டவற்றை உங்களுக்குத் தெரிவிக்கிறேன். பிற நாட்டுச் செய்திகளைத் தெரிவிக்கும்போது தனித்தமிழில்பேசவில்லையே என்று தயங்காதீர்கள். கருத்தை யுணர்ந்து களிப்படையலாம், என்னுடன் வருக.

**கலிவர்.**

# [ 1 ]

என் தகப்பனுர் நாட்டிங்காம் ஷையரில் சிறிதளவு நிலம் வைத்திருந்தார். அவருக்குப் பிறந்த ஐந்து பிள்ளைகளுள் நான் மூன்ருவது பிள்ளை. எனக்குப் பதினுன்காவது வயது நடக்கையில் என்னை என் தந்தை கேம்பிரிட்ஜ் பட்டணத்திலுள்ள ஒரு பெரிய பள்ளிக் கூடத்துக்குக் கல்வி பயில அனுப்பினுர். நான் அப் பட்டணத்தில் மூன்று ஆண்டுகள் இருந்து, மிகவும் ஊக்கத்துடன் கற்று, கல்வியில் தேர்ச்சி யடைந்தேன். பிறகு நான் லண்டன் நகரத்திலிருந்த ஜேம்ஸ் பேட்ஸ் என்னும் பெயர் போன ஒரு வைத்திய நிபுணரிடம் வேலை கற்றுக்கொண்டு நான்கு ஆண்டுகள் இருந்தேன். என் தந்தை எனக்கு அடிக்கடி சிறிது பொருளுதவி புரிந்து வந்தார். அந்தப் பணத்தை நான் கப்பலோட்டும் வித்தைகளையும், பிரயாணத்திற்கு இன்றியமையாத கணிதங்களையும் கற்பதில் செலவு செய்தேன். ஏனென்ருல், நான் ஒரு காலத்தில் கடற் பிரயாணம் செய்வேனென்னும் எண்ணம் என் மனத்தில் அல்லும் பகலும் குடிகொண் டிருந்தது. பேட்ஸ் என்னும் தனவானை விட்டதும், நான் என் தகப்பனுரிடம்வந்தேன்.

அங்கே அவருடைய உதவியாலும், என் சிறிய தந்தையாகிய ஜான் உதவியாலும், மற்றுமுள்ள உறவினர்கள் உதவியாலும் நான் நாற்பது பவுன் சம்பாதித்தேன். அன்றியும் நான் லேடன் பட்டணத்தில் வசிப்பதற்கு ஆண்டுக்கு முப்பது பவுன் எனக்கு அவர்கள் கொடுப்பதாகவும் வாக்களித்தார்கள். லேடன் பட்டணத்தில் இரண்டரை ஆண்டுகள் மருந்துக்கு வேண்டிய பொருள்களின் தன்மைகளைக் கற்றேன். ஏனென்றால் அவைகள் நீடித்த பிரயாணஞ் செய்யப் பயன்படுமென்று அறிந்தேன்.

லேடன் பட்டணத்திலிருந்து நான் திரும்பி வந்தவுடனே, சேனாதிபதி சுவாலோ கேப்டன் ஆபிரகாம் பேனல் துரைக்கு வைத்தியனாக என்னை என்னுடைய எசமானராகிய பேட்ஸ் கனவான் சிபார்சு செய்தார். அவருடன் மூன்றரை யாண்டுகள் இருந்தேன். இருந்த பொழுது லெவன்ட் பட்டணத்திற்கும், வேறு சில இடங்களுக்கும் இரண்டு மூன்று பிரயாணங்கள் செய்தேன். நான் திரும்பி வந்ததும் லண்டனில் தங்கிவிடுவதாக மனதைத் திடஞ் செய்துகொண்டேன். அவ்விடத்தில் என்னை வசிக்கும்படி பேட்ஸ் கனவான் சொன்னார். அங்கே அநேக பிணியாளிகளை என்னிடம் வைத்தியம் பார்த்துக் கொள்ளவும் அறிமுகஞ் செய்தார். ஜுரியில் ஒரு சிறிய வீட்டில் ஒரு பாகத்தைக் குடியிருக்க நான் எடுத்துக் கொண்டேன். பிறகு நான் ஒரு பெண்மணியை மணம் புரிந்துகொண்டேன்.

ஆனால் என் நல்ல முதலாளியாகிய பேட்ஸ், இரண்டு ஆண்டுகள் சென்றதும் பொன்னுலகம் புக்கதாலும், எனக்கு நண்பர்களும் மிகக் குறைவாக

இருந்தபடியாலும், என்னுடைய தொழில் தாழ்ந்த நிலைமைக்கு வர ஆரம்பித்தது. ஆகையினால் என் மனைவியோடும், மற்றும் எனக்கு அறிமுகமான நண்பர்களோடும் கலந்து யோசனை செய்ததில், நான் மறுபடியும் கடற் பிரயாணம் செய்ய வேண்டுமென்றுர் தீமானித்துக்கொண்டேன். பிறகு நான் ஆறு ஆண்டுகள் இரண்டு கப்பல்களில் வைத்தியனுக இருந்தேன். அப்பொழுது கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் பிரயாணங்கள் செய்தேன். கொஞ்சம் பணமும் சேமித்தேன். நான் என் ஓய்வு காலத்தை மேலான நூலாசிரியர்கள் எழுதிய புத்தகங்கள் வாசிப்பதில் கழித்தேன். நான் கப்பலில் சென்றபொழுது வெளிதேசத்து மக்களுடைய செய்கைகளையும், குணங்களையும், மொழிகளையும் கவனித்தேன். அவர்களைப் பற்றிய செய்திகள் எப்பொழுதும் என் ஞாபகத்திலிருந்தன.

இந்தப் பிரயாணங்களில் கடைசிப் பிரயாணம் பயன் கொடுக்காததால், கடற் பிரயாணங்களில் வெறுப்படைந்து, வீட்டிலேயே தங்கிவிட வேண்டும் என்ற எண்ணங் கொண்டேன். நான் ஜூரியிலிருந்து பெட்டர்லேனுக்கும், பெட்டர்லேனி லிருந்து வேப்பிங்கிக்கும் கப்பலோட்டிகளிடத்தில் ஏதாவது வேலை சம்பாதிக்கலாம் என்று எண்ணி உறைவிடத்தை மாற்றினேன் : ஆனால் அது ஒன்றும் பயன்படவில்லை. எனக்கு நல்ல காலம் வருமென்று மூன்று ஆண்டுகள் எதிர் பார்த்துக்கொண் டிருந்த பிறகு, கேப்டன் வில்லியம் பிரிட்சார்ட்வினிடத்திலிருந்து ஒரு இலாபகரமான வேலை கிடைத்தது. அவர் தென் சமுத்திரங்களுக்குப் பிர

யாணம் செய்துகொண் டிருந்தார். நாங்கள் பிரிஸ்டல் பட்டணத்திலிருந்து 1699-ஆம் ஆண்டு மே திங்கள் 4-ஆம் நாள் பிரயாணப்பட்டோம். முதலில் எங்கள் பிரயாணம் மிகவும் நலமாகவே யிருந்தது.

நாங்கள் அந்தச் சமுத்திரங்களிலிருந்து கிழக்கிந்தியத் தீவிற்குப் போகும் வழியில் பெரும் புயல் காற்று வந்து எங்களை வாண்டிமன்ஸ்லாண்டுக்கு வடமேற்காய் அடித்துக்கொண்டு போய்விட்டது. கப்பலிற் சென்றவர்களில் பன்னிரண்டு மனிதர்கள் அதிகத் துன்பத்தாலும், தகுந்த உணவு இல்லாமையாலும் இறந்துவிட்டார்கள். மற்றவர்கள் மிகவும் பரிதபிக்கத் தக்க நிலைமையில் இருந்தார்கள்.

அக்காலம் மூடுபனிக் காலமாயிருந்தபடியால் கப்பலோட்டிகள் கப்பலுக்கு நூறுகஜ தூரத்தில்தான் ஒரு கற்பாறையைக் கண்டார்கள். அவர்கள் கற்பாறையைக் கண்டது நவம்பர் மாதம். அப்போதுதான் அந்தப் பக்கங்களில் கோடை கால ஆரம்பம். அப்பொழுது புயல் அதிக வலிவாய் அடித்ததால் கப்பல் கற்பாறையின் மேல் மோதி உடைந்துவிட்டது. உடனே கப்பலில் அப்பொழுதிருந்தவர்களில் நானும், இன்னும் ஐந்து பேரும் கப்பலிலிருந்த படகுகளில் ஒன்றைச் சமுத்திரத்தில் இறக்கி, அதில் ஏறிக்கொண்டோம். ஏறிக் கொண்டு கப்பலை விட்டு வேறு திசையில் மூன்று மைல் தூரம் படகை ஓட்டிக்கொண்டு போனோம்.

பிறகு எங்களால் சிரமப்பட்டுப் படகை ஓட்ட முடியவில்லை; ஏனென்றால் இதற்கு முன்னமே கப்பலில் மிகவும் தொல்லைப்பட்டதால், இளைத்துக் களைப்

புற்றேம். ஆகையால் அலைகள்தான் எங்கள்மேல் இரக்கம் வைத்து எங்களைக் காப்பாற்ற வேண்டு மென்று நாங்கள் எல்லாம் வல்ல இறைவனை வழிபட் டோம். அரைமணி நேரத்திற்குள் வடக்கே யிருந்து திடீரென்று வந்த ஒரு புயலால் படகு கவிழ்ந்துவிட்டது. படகிலிருந்த ஐந்து பேரும், கப்பலில் விடப்பட்ட மனிதர்களும் என்ன கதி யானூர்களென்று என்னுல் சொல்ல முடியாது ; ஆனுல் அவர்களெல்லாம் இறந்து விட்டார்களென்று நான் தீர்மானித்துக்கொண்டேன். என் மட்டில், என் நல்லூழ் எவ்வாறு சென்றதோ அவ் வாறு நீந்திக்கொண்டு போனேன்.

அதாவது காற்று எந்தத் திக்கில் என்னைத் தள்ளிக்கொண்டு சென்றதோ அந்தத் திக்கே நீந்திச் சென்றேன். நான் அடிக்கடி என் கால்களை விட்டுவிட் டேன். ஆனுல் தரையை என் கால்கள் எட்டவில்லை. என் வலிவு எல்லாம் குறைந்து என்னுல் அதற்குமேல் நீந்த முடியாமற் போனபொழுது தண்ணீருக்குள் நெடுந்தூரம் சென்று விட்டேன். ஆனுல் அந்தச் சமயம் காற்று மிகவும் குறைந்துவிட்டது. பிறகு கொஞ்சம் சமாளித்து மறுபடியும் நீந்திப் போகையில் அங்கு ஆழம் அதிகமில்லை யென்று தெரிந்தது. ஆகையால் அவ்விடத்திலிருந்து சமுத்திரக்கரைக்கு இருந்த ஒரு மைல் தூரமும் நான் நடந்தே போனேன்.

கடற்கரையோரம் வருகையில் இரவு எட்டுமணி யிருக்கும். அவ்விடத்திலிருந்து நேராய் நான் அரை மைல் தூரம் சென்றேன் ; ஆனுல் யாதொரு வீட்டை யும் மனிதர்களையும் நான் காணவில்லை. அவ்விடத்தில் வீடுகள் இருப்பதாக யாதொரு அடையாளமும் காணப்

படவில்லை. ஒருவேளை நான் அதிக கேவலமான நிலைமையி லிருந்ததால் வீடுகளைக் கவனியாமலும் இருந்திருக்கலாம். நான் சொல்லமுடியாத இளைப்பா யிருந்ததாலும், காலம் நல்ல கோடைக்காலமா யிருந்ததாலும், தூக்கம் என் கண்களை அதிகமாகச் சுழற்றியது. ஆகையால், அவ்விடத்தில் மிருதுவாயிருந்த புல்லின்மேல் படுத்துக்கொண்டேன். அங்கு நான் என் வாழ்நாளில் தூங்கியிராத அப்படிப்பட்ட தூக்கம் தூங்கினேன்.

ஏறக்குறைய ஒன்பது மணிநேரம் துயின்றேனென்று தெரியவந்தது. ஏனென்றால் நான் விழித்துக்கொண்டதும் பொழுதைப் பார்த்தால் வெள்ளை வெளேரென்று வெளிச்சமாய், சூரியன் புறப்பட் டிருந்தது. நான் எழுந்திருக்க முயன்றேன் ; ஆனால் இப்படி அப்படி அசைய முடியவில்லை. ஏனென்றால் நான் மல்லாந்து படுத்துக்கொண் டிருந்ததால், என் இரண்டு கால்களும் கைகளும் ஒவ்வொரு பக்கத்திலும் நன்றாகக் கட்டப்பட் டிருப்பதையும், நீளமும் அடர்த்தியுமுள்ள என் மயிர் அம்மாதிரியாகவே கட்டப்பட் டிருப்பதையும் உணர்ந்தேன். அப்படியே என் உடம்பில் குறுக்காக அக்குளிலிருந்து தொடைவரையில் மெல்லிய கயிறுகள் கட்டப்பட் டிருப்பதையும் பார்த்தேன். நான் நிமிர்ந்தபடியே மேலேயே பார்க்கவேண்டியதா யிருந்தது. சூரியன் வரவர அதிக வெம்மையா யிருந்தபடியால் என்னால் என் கண்களைத் திறக்கக்கூட முடியவில்லை.

என் பக்கத்தில் ஒரு குழப்பமான ஓசை கேட்டது. ஆனால், நான் படுத்துக்கொண் டிருந்த நிலைமையில் ஆகாயம் தவிர வேறொன்றையும் பார்க்க முடியவில்லை.

கொஞ்சநேரத்திற் கெல்லாம் உயிருள்ள ஏதோ ஒரு பிராணி என் இடது காலிலிருந்து மெதுவாக நேராய் மார்பின் மேல் நடந்து மோவாய்க்கட்டைக்கு அருகில் வந்துவிட்டதை உணர்ந்தேன். என்னால் கூடிய வரையில் நான் கண்களை கீழே சாய்த்துப் பார்த்தபொழுது, அது ஆறு அங்குலத்திற்கும் குறைந்த உயரமுள்ளதாய், கையில் அம்பும் வில்லும், முதுகில் அம்பறாத் தூணியும் உடைய ஒரு மனித உருவமாகக் காணப்பட்டது. இதைப் போன்ற நாற்பதுக்குக் குறையாத மனிதர்கள் அதற்குப் பின்னால் வருவதைக் கண்டேன்.

இவர்களைக் கண்டதும் என் ஆச்சரியம் சொல்ல முடியாததாயிருந்ததால், நான் ஒரு பெரிய கூச்சலிட்டேன். கூச்சலைக் கேட்டுப் பயந்து அவர்களெல்லாம் திரும்பி ஓடிப்போய்விட்டார்கள். அவர்களில் சிலர், பக்கமாய் பூமியில் குதித்தபடியால் காயமடைந்தார்கள். எனக்கு இது பின்னர் தெரியவந்தது. எப்படியிருந்தபோதிலும், அவர்கள் உடனே திரும்பி மறுபடியும் என்மேல் ஏறிச் சென்றார்கள். அவர்களில் ஒருவன் பயமில்லாமல் என் முகம் வரையில் வந்து, முகத்தை நன்றாகப் பார்த்து, இரண்டு கைகளையும் கண்களையும் ஆச்சரியத்துடன் தூக்கிச் 'சில்' லென்ற தெளிவான குரலில் 'ஹெகினடீகல்' என்று உரத்துக் கூச்சலிட்டான். மற்றவர்களும் அதே வார்த்தையை அநேக முறை திருப்பிச் சொன்னார்கள். ஆனால் அதற்கு என்ன பொருளோ எனக்குத் தெரியாது.

இதுகாறும் நான் மிகத் துன்பத்துடன் படுத்துக் கொண்டிருந்தேன். கடைசியாகத் தேகத்தைத் தளர்ச்சி செய்ய முயற்சி செய்து, பிறகு நான் இடது கையில்

கட்டியிருந்த கயிறுகளையும் முறுக்குகளையும் அறுத்து விட்டேன். அப்பொழுதே விரைவாகத் தலையை இழுத்து இடதுபக்கம் என் தலை மயிரில் கட்டியிருந்த கயிறு களையும் கொஞ்சம் தளர்ச்சி செய்துகொண்டேன். இப்படிச் செய்ததால் எனக்கு நோய் அதிகம் உண் டானது ; ஆனால் தலையை இரண்டு அங்குலம் திருப்ப இடம் உண்டாயிற்று. ஆனால் நான் அந்த மனிதர்களைக் கையால் பிடிப்பதற்கு முன்னம் இரண்டாம் தடவையும் ஓடிப்போய் விட்டார்கள். அதற்கு மேல் சல்லென்ற உரத்த சப்தம் ஒன்று கேட்டது.

இந்தச் சப்தம் அடங்கினதும் அவர்களில் ஒருவன் 'டோல்கோ பேஞக்' என்று உரக்கக் கூச்சலிட்டான். இந்தச் சப்தம் கேட்ட அந்த நொடியிலேயே நூறுக்கு மேற்பட்ட அம்புகள் என் இடது கையிற் பாய்ந்தன. அவைகள் அத்தனையும் ஊசிகளாகக் குத்தின. மேலும் அந்த மனிதர்கள், நாம் ஐரோப்பாவில் பீரங்கிகள் வெடிப்பது போல் ஒரு வெடி போட்டார்கள். அதனால் அவர்களில் அநேகர் (எனக்குத் தெரியாமற் போனா லும்) என் உடம்பின்மேல் விழுந்தார்கள். மற்றும் சிலர் என் முகத்தின் மேல் விழுந்தார்கள். உடனே அவர்களை நான் என் இடது கையால் மூடிக்கொண்டேன். அவர் கள் அம்புகள் விடுவதை நிறுத்தினதும் எனக்கு நோக் காடும், வருத்தமும் உண்டாயின.

பிறகு என் தேகத்தை இன்னும் கொஞ்சம் தளர்ச்சி செய்துகொள்ள முயன்றபொழுது, அவர்கள் முன் விட்டதைப் பார்க்கிலும் ஒரு பெரிய பீரங்கியை வெடித்தார்கள். அவர்களில் சிலர் என்னைப்பக்கங்களில் ஈட்டிகளால் குத்துவதற்கு முயன்றார்கள். ஆனால் நான்

அடர்த்தியான ஒரு மேல்சட்டையைப் போட்டுக்கொண்டிருந்தபடியால் அதற்குள் இந்த ஈட்டிகள் நுழைய முடியவில்லை. நான் பேசாமல் அந்த இடத்திலேயே இரவு வரையில் படுத்துக்கொண்டிருந்து, பிறகு என் இடது கை முன்னமே அவிழ்க்கப்பட்டிருந்ததால், சுலபமாய் அவ்விடத்தை விட்டு எழுந்து போய்விடலாமென்று நினைத்தேன். இவ்வாறு செய்வதுதான் உத்தமமான வழி என்று என் அறிவிற்குத் தோன்றியது. ஆனால் அவர்கள் பெரியபடை எடுத்துக்கொண்டு சண்டைக்கு வந்தால், அவர்களுக்குத் துணையாக வருபவர்களும் அதே உயர மிருந்தால், நான் அவர்களுக்குச் சரியான விரோதிதானென்று நினைத்தேன்.

ஆனால் நான் நினைத்ததெல்லாம் வேறு மாதிரியாய் முடிந்துவிட்டது. அவர்கள் நான் ஒன்றும் செய்யாமல் இருப்பதைக் கண்டு, என்மேல் ஓர் அம்பும் யாரும் விடவில்லை. ஆனால் நான் கேட்ட ஓசையினால் அவர்கள் முன்னிருந்த தொகையில் அதிகமானார்கள் என்பதை அறிந்தேன். எனக்கு நான்கு கஜ தூரத்தில் என் வலதுசெவிக்கு நேராய் மக்கள் வேலை செய்யும் பொழுது கேட்கும் ஓசையைப் போல், " தட்டுத்தட்டு " என்ற ஒலி ஒருமணி நேரத்திற்குமேல் என் செவியிற் கேட்டுக்கொண்டிருந்தது. என் வலது பக்கம் கட்டியிருந்த கயிறுகளும், முறுக்குகளும் எவ்வளவு தூரம் இடங்கொடுக்குமோ அவ்வளவு தூரம் அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கையில், தரையிலிருந்து ஏறக்குறைய ஒன்றரை அடி உயரமும், நான்கு பேர் இருக்கப் போதுமான இடமும், அதன் மேல் ஏறுவதற்கு வசதியாக பக்கத்தில் இரண்டு மூன்று ஏணிகளுடன் கூடிய ஒரு

மேடையும் அமைத்து இருந்தது.

அந்த மேடையின் மேலிருந்து, நல்ல தகுதியுடைய ஒரு மனிதன் என்னிடம் அதிக நேரமாக ஏதேதோ சொன்னான். ஆனால் எனக்கு அதில் ஓரெழுத்தும் விளங்கவில்லை இவைகளெல்லாம் சொல்லுவதற்கு முன் அவன் மூன்று முறை "லேங்க்ரோ டீஹல்சன்" என்று கூவினான். இந்த வார்த்தைகளுக்கும், இதற்கு முன் ஒருவர் சொன்ன வார்த்தைகளுக்கும் பொருள் இன்னதென்று பிறகு நான் அறிந்துகொண்டேன். பிறகு ஐம்பது மனிதர்களுக்குமேல் என் இடப்பக்கம் வந்து, அங்கே கட்டியிருந்த கயிறுகளை அறுத்தார்கள். அறுத்ததும் நான் என் தலையை வலப்பக்கம் திருப்பி, அம் மேடையின்மேல் பேசப்போகிற மனிதனுடைய உருவத்தையும், செய்கைகளையும் பார்க்க எனக்கு வசதியா யிருந்தது. அவன் மத்திய வயதினனாகவும், தன் கூடவந்த மூன்று பேர்களை விட உயரமாகவு மிருந்தான்.

அம் மூவர்களில் ஒருவன் அவனுடைய மெய்க் காப்பாளன். அவன் அவனுக்குப் பின் புறத்தில் நின்றிருந்தான். அவன் என் நடு விரலைவிடக் கொஞ்சம் பெரியவனாக இருந்தான். மற்ற இருவரும் அவனுடைய இரு பக்கங்களிலும், அவனுக்குப் பாதுகாப்பாக நின்றார்கள். அவன் ஒவ்வொரு பாகத்திலும், ஒரு சிறந்த நாவலனைப் போல் பிரசங்கஞ் செய்தான். அவன் பேசியதில் பயமுறுத்துகிற வாக்கியங்களும், வாக் குறுதி, இரக்கம், அன்பு இவைகளைக் காட்டுகிற வார்த் தைகளும் இருந்தன. நான் கொஞ்சம் வார்த்தைகளில் மிகவும் அடக்கமாய்ப் பதில் சொன்னேன். அப்

பொழுது நான் என் வலது கையையும், இரண்டு கண்களையும் சூரியனுக்கு நேராகக் காண்பித்து, அந்தச் சூரியனைச் சான்றுக்கு அழைத்தது போல் சொன்னேன். எனக்குப் பசி அதிகமா யிருந்தது. பொறுக்க முடியவில்லை.

ஆகையால் அடிக்கடி என் விரலை வாயில் வைத்து அவர்கள் எனக்குப் பசி அதிகமா யிருக்கிற தென்று அறியும்படி செய்தேன். ஹர்கோ என்னும் ஒரு பிரபு நான் சொன்னதை அறிந்துகொண்டார். மேடையிலிருந்து கீழே இறங்கி, என்னுடைய பக்கங்களில் அநேக ஏணிகள் வைக்க வேண்டுமென்று கட்டளை யிட்டார். ஏணிகளின் மேல் நூறு பேருக்குமேல் ஏறி என்வாயி னிடத்திற்கு அநேக கூடைகள் நிறைய மாமிசம் எடுத்துக்கொண்டு வந்தார்கள். இவைகளை அவர்களின் அரசர் என் நிலையை முதலில் கேள்விப்பட்டதும் அனுப்பினன். அக் கூடைகளில் அநேக மிருகங்களுடைய மாமிசம் இருக்கக் கண்டேனாலும், அவைகள் எந்த மிருகங்களுடைய மாமிசம் என்று உருசியால் கண்டறிய முடியவில்லை. அவைகள் நன்ருய்ப் பதப்படுத்தப்பட் டிருந்தன. அவைகளில் இரண்டு மூன்றை ஒரு வாயில் சாப்பிட்டேன். துப்பாக்கிக்குண்டு அவ்வளவு பருமனை ரொட்டித் துண்டுகள் மூன்றை ஒரு வாயில் சாப்பிட்டேன்.

அவர்கள் என் பசியைப் பார்த்து ஆச்சரியப்பட்டுத் தங்களால் கூடிய வரையில் எனக்கு ரொட்டியும், மாமிசமும் கொடுத்தார்கள். பிறகு நான் தண்ணீர் வேண்டுமென்று ஒரு சைகை செய்தேன். நான் சாப்பிட்டதைப் பார்த்திருந்த அவர்கள் எனக்குக் கொஞ்

சம் தண்ணீர் போதாதென்று தெரிந்துகொண்டார்கள். அவர்கள் அதிக புத்திமான்களா யிருந்தபடியால் அவர்களால் மிகவும் பெரிதாக நினைக்கப்பட்ட ஒரு பீப்பா நிறைய மதுவினைக் கொண்டுவந்து, பத்துப் பதினைந்து பேராக அதிக முயற்சியுடன், அந்தப் பீப்பாவை என் கையின்மேல் ஏற்றினார்கள். நான் அதை உடனே தூக்கி அதிலிருந்த மதுவினை ஒரே வாயாகக் குடித்துவிட்டேன். இவ்வாறு நான் செய்தது ஒரு பெரிய காரியமல்ல ; ஏனென்றால் அந்தப் பீப்பா மது நம்முடைய அரை அவுன்சாகத்தானிருக்கும். ஆனாலும் நம் தேசத்து மதுவினைக் காட்டிலும் அது அதிக உருசியா யிருந்தது.

பிறகு அவர்கள் இன்னொரு பீப்பா நிறையக் கொண்டு வந்தார்கள். அதையும் ஒரே வாயாகக் குடித்துவிட்டு, அவர்களை இன்னும் கொண்டுவரும்படி குறிப்புக் காட்டினேன். ஆனால் அவர்களிடத்தில் அதற்குமேலில்லை. நான் இவ்வாறு ஆச்சரியங்கள் செய்யவே அவர்களெல்லாம் ஆனந்தம் மேலிட்டு, என் மார்பின்மேல் ஏறிக்கொண்டு "ஹேகினாடீகல்" என்று சப்தம் செய்து கொண்டு நாட்டியம் செய்தார்கள். அவர்கள் என் அருகிலிருந்த மக்களை எல்லாம் விலகிவிடும்படி கட்டளையிட்டுக் காலி பீப்பா இரண்டையும் கீழே போடும்படி எனக்குக் குறிப்புக் காட்டினார்கள்.

அவர்கள் மக்களை விலகிப் போகும்படி சொன்னபொழுது, " போராக் மெவோலா " என்று உரத்துக் கூவினார்கள். இந்தப் பீப்பாய்களை ஆகாயத்தில் பார்த்ததும், அங்கிருந்தவர்கள் யாவரும் "ஹேகினாடீ

கல்.'" என்று உரக்கச் சப்தம் செய்தார்கள். ஏனென்ருல் நான் அந்தப் பீப்பாய்களைக் கீழே போட்ட பொழுது, அவைகள் அவர்களுக்கு ஆகாயத்தில் வெகு தூரத்திலிருந்து வந்தன போல் தோன்றின. அவர்கள் என் உடம்பின்மேல் முன்னும் பின்னும் போய்க்கொண்டிருந்தபொழுது, அவர்களில் முதலில் என் கைக்கு அகப்பட்ட நாற்பது ஐம்பது பேரைப் பிடித்துத் தரையின்மேல் வீசி எறியலாம் என்ற எண்ணம் எனக்கு அடிக்கடி உண்டாயிற்று. ஆனல் நான் அவர்களுக்கு மரியாதை செய்வதாக வாக்களித்தேன். இந்த வாக்குறுதி அப்படிப்பட்ட எண்ணங்களை என் மனதிலிருந்து உடனே அகற்றிவிட்டன.

மேலும் எனக்கு அவர்கள் செய்த உதவி, எனக்காக அவர்கள் செலவு செய்த பணம், இவைகளினுல் நான் அவர்களுக்கு என் நன்றியறிதலைக் காட்டவேண்டியவனு யிருந்தேன். எப்படியானுலும், அந்தச் சிறிய மக்களுடைய தைரியத்தைப்பற்றி எனக்குண்டான ஆச்சரியம் இப்படிப்பட்டது என்று சொல்ல முடியாது. என் ஒரு கை கட்டிலிருந்து அவிழ்க்கப்பட்டிருக்கும் பொழுது, அவர்கள் என் தேகத்தின்மேல் ஏறுவதும், நடப்பதுமாக இருந்தார்கள். மிகப் பெரிய பிராணியாக நான் அவர்களுக்குக் காணப்பட்டேன்! அவர்களுக்கு என்மேல் ஏறி நடப்பதற்கு என்ன பயங்கரம் உண்டாயிருக்க வேண்டும்! ஆனல் அவர்கள் கொஞ்சமேனும் பயப்பட்டவர்களாகத் தோன்றவில்லை. மீண்டும் சிறிது நேரம் கழிந்தபின், நான் உணவுக்கு யாதொரு சைகையும் செய்யாதிருப்பதைக் கண்டு, தங்கள் அரசனுக்கு அவர்கள் என்ன சங்கதி தெரி

வித்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

உடனே என் எதிரில் அரசனுல் அனுப்பப்பட்ட உன்னத நிலைமையையுடைய ஒரு மனிதன் காணப்பட்டான். இந்த மனிதன் என் வலது கால் பக்கமாய் ஏறி, என் முகத்தின் அருகில் வந்தான். இவன் பின்னுல் இவனுடைய பரிவாரங்களில் பன்னிரண்டு பேர் வந்தார்கள். இவர்களும் இவன் அருகே வந்து காவலாக நின்றார்கள். இவன் அரசனுல் அனுப்பப்பட்ட ஓர் உறுதிமொழிப் பத்திரத்தை என் கண்களின் அருகில் கொண்டுவந்து காண்பித்து, அரைமணி நேரம் வரையில் கோபமில்லாமல், ஆனுல் வைராக்கியத்துடன் என்னிடம் பேசினுன். அவன் என்ன சொன்னுனென்று எனக்கு ஒன்றும் தெரியவில்லை. பிறகு நான் அவன் பேசியதற்குப் பொருள் இன்னதென்று அவர்களால் அறிந்தேன். அதாவது கீழ் வருமாறு அம் மனிதன், " நாங்கள் உன்னை அரைமைல் தூரத்திலுள்ள எங்கள் தலைமைப் பட்டணத்திற்குக் கொண்டு போவோம். இது நானுகச் சொல்வது அல்ல; அரசன் ஆணை யென்றறிக " என்று கூறினுன்.

பிறகு, கட்டவிழ்க்கப்பட் டிருக்கும் என் இடது கையைத் தூக்கி, என் முகத்தின் அருகிலிருக்கும் தலைவர், அவர் தம் பரிவாரம் ஆகிய இவர்களுக்குத் தீங்கு நேரிடாதபடி என் வலதுகை, தலை, தேகம் இவைகளைக் காட்டி, என் கட்டுகளை யெல்லாம் அவிழ்த்து விடும்படி சைகை செய்தேன். இதை அவர் அறிந்ததாகத் தெரியவந்தது. ஏனென்றுல், அவர் இது முடியாது என்று தலையை ஆட்டிக் கையினுல் நான் சிறைச்சாலைக்குப் போகவேண்டு மென்று பொருள்படும்படி

ஒருவிதமான குறிப்பு செய்தார். ஆனாலும் அவர், எனக்குப் போதுமான நல்ல உணவும், மதுவும் தாங்கள் கொடுப்பதாகவும், தகுந்த உபசாரம் செய்வதாகவும் வேறு குறிப்புக்கள் காட்டினார். அதன்மேல் நான் என் கட்டுகளை எல்லாம் அவிழ்க்க முயன்றேன். உடனே என் கைகளின் மேலும், முகத்தின் மேலும் அவர்கள் அநேக அம்புகளை எய்தார்கள். அவை எனக்கு உபத்திரவத்தை உண்டாக்கின. மேலும் அவர்கள் தொகையில் அதிகரித்துக்கொண்டே வந்தார்கள்.

இதைப் பார்த்து நான் அவர்கள் விருப்பப்படி என்னை என்ன செய்தாலும் செய்யலாமென்று சைகைகள் காட்டினேன். அதன்மேல் ஹர்கோவும் அவர் கூட இருந்தவர்களும் அதிகமரியாதையுடனும், மகிழ்ச்சியான முகத்துடனும் பிரிந்துவிட்டார்கள். கூடிய சீக்கிரத்தில், அவர்களெல்லாம் அடிக்கடி "பெப்லாம் செலான்" என்று கூவினார்கள். உடனே அநேக மக்கள் என் இடப் பக்கம் வந்து கட்டை அவிழ்த்தார்கள். அவிழ்த்ததும் நான் வலப் பக்கம் திரும்ப இடங் கிடைத்தது. இதற்கு முன் என் முகத்திலும் இரண்டு கைகளிலும் ஒருவிதமான தைலத்தைப் பூசினார்கள். அது இனிப்பான வாசனையைக்கொடுத்தது. அன்றியும் பூசிய ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் அம்பினால் எனக்குண்டான நோய்களை எல்லாம் அது போக்கிவிட்டது. இதனாலும், நான் அவர்களிடம் சாப்பிட்ட இனிப்பான உணவாலும் எனக்குத் தூக்கம் வந்து விட்டது. நான் எட்டு மணி நேரம் நன்றாகத் தூங்கினேன். வைத்தியர்கள் அரசன் ஆணைப்படி எனக்குக் கொடுத்த மதுவில் தூக்கம் வருவிக்கும் ஒரு மருந்தைக் கலந்து கொடுத்து

இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

நான் முதலில் புல்லின்மேல் தூங்கிக்கொண் டிருந்ததை அந்த மக்களில் சிலர் கண்டவுடனே, ஒரு தூதுவன் மூலம் இந்தச் செய்தியை அரசன் அறிந்திருப்பான் என்று தோன்றுகிறது. ஆலோசனை மண்டபத்தில் அரசன் யோசனைசெய்து, நான் முன்சொன்னவாறு என்னை அவர்கள் கயிற்றால் கட்டவேண்டுமென்றும், எனக்குப் போதுமான மாமிசமும், மதுவும் அனுப்பவேண்டுமென்றும், என்னைத் தலைமைப் பட்டணத்துக்குத் தூக்கிக்கொண்டு போக ஒரு யந்திரம் செய்யவேண்டுமென்றும் கட்டளை யிட்டதாகத் தெரிய வந்தது. அவர்கள் இவ்விதமான ஏற்பாடு செய்ததால் தங்களுக் குண்டாகும் ஆபத்துக்குத் தாங்கள் சிறிதும் அஞ்சவில்லை எனத் தெரியவந்தது.

மேற்கூறிய ஏற்பாட்டை அப்படிப்பட்ட சமயத்தில் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள எந்த அரசனும் செய்யமாட்டான் என்பதில் எனக்கு ஐயமே யில்லை. எப்படி யிருப்பினும், அது மிகவும் அறிவும், அறமுமுடைய ஏற்பாடு என்பது என் எண்ணம். ஏனென்றால், இவர்கள் என்னைக் கண்டதும், தங்கள் ஈட்டிகளாலும், அம்புகளாலும் என்னைக் கொல்ல முயன்றிருந்தால், முதலில் எனக்கு உடம்பில் நோய் உறைத்தவுடனே கோபம் அதிகரித்து அதனால் வலிவும் அதிகரித்து என்னைக் கட்டியிருந்த கயிறுகளை யெல்லாம் அறுத்துவிட் டிருப்பேன். அதன் பிறகு, அவர்களால் என்னை எதிர்க்க முடியாதாதலால், அவர்கள்மேல் நான் இரக்கம் என்பதைக் காட்டியிருக்க மாட்டேன்.

இந்த மக்கள் கணிதக்கலையில் மிக்க வல்லவர்கள்.

யந்திரக்கலையில் அரசனுடைய உதவியாலும், ஆதரவாலும் நல்ல ஆற்றலை அடைந்தவர்கள். அரசனே கல்விமானென்று பெயர் வாய்ந்தவன். இந்த அரசன் மரங்களையும், பெரிய சாமான்களையும் எடுத்துக்கொண்டு போகும் வண்டிக்காகச் சக்கரங்களின் மேல் அநேக யந்திரங்களை நிறுத்தியிருந்தான். அவன் அடிக்கடித் தன் பெரிய சண்டைக்கப்பல்களைத் தேக்கு வளர்கிற காடுகளில் செய்து, அங்கிருந்து சமுத்திரத்திற்கு முந்நூறு, நானூறு கஜ தூரத்திற்கும் இந்த யந்திரங்களின் மேல்தான் கொண்டுவருவது வழக்கம்.

உடனே ஐந்நூறு தச்சர்களும், எஞ்சினியர்களும் அவர்களிடமிருந்த எல்லா யந்திரங்களைவிடப் பெரிய தாய் ஒரு யந்திரம் தயார் செய்ய ஆரம்பித்தார்கள். அது இருபத்திரண்டு சக்கரங்களின்மேல் நிறுத்தப் பட்டுத் தரையிலிருந்து மூன்று அங்குல உயரமும், ஏழு அடி நீளமும், மூன்று அடி அகலமும் உடைய ஒரு மரத்தினால் செய்யப்பட்டது. இந்த யந்திரம் என் அருகில் வந்ததும், அவர்களிட்ட ஒரு ஓசையால் அது புறப்பட்டு நான்கு மணி நேரமாயிற்று என்று அறிந்தேன். நான் படுத்துக்கொண்டிருந்தபொழுது அவர்கள் இந்த இயந்திரத்தை எனக்கு நேராகக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். ஆனால் அவர்களுக்கு முதன்மையான துன்பம் என்னைத் தூக்கி அதன்மேல் வைப்பதே. ஓர் அடி உயரமுள்ள எண்பது கம்பிகள் இதற்காக நிறுத்தப்பட்டன. கோணி தைக்கும் நூல் அளவு கனத்த வெகு வலிவான கயிறுகள் என் கழுத்து, தேகம், கை, கால்கள் இவைகளைச் சுற்றிக் கட்டப்பட்டன. இவைகளில் கொக்கிகளும் பூட்டப்பட்டன.

பலசாலிகளில் தொளாயிரம் பேர் கம்பிகளின் மேல் பூட்டப்பட்ட அநேக கம்பிகளால் இந்தக் கயிறுகளை இழுக்க நியமிக்கப்பட்டார்கள். பிறகு மூன்று மணி நேரத்திற்குள் நான் தரையிலிருந்து எழுப்பப்பட்டு, இயந்திரத்தின் மேல் வைக்கப்பட்டேன். அதில் என்னை வேகமாய்க் கயிறுகளால் கட்டிவிட்டார்கள். இவைகளை எல்லாம் நான் பின்னால் கேள்விப்பட்டேன். ஏனென்றால், மதுவில் கலந்து கொடுத்த மருந்து, தூக்கத்தை உண்டுபண்ணுகிற பொருளாதலால், எனக்கு நல்ல தூக்கத்தை உண்டுபண்ணிவிட்டது. சக்கரவர்த்தியினுடைய நாலரை அங்குலம் உயரமுள்ள பெரிய குதிரைகள் பதினைந்தாயிரம் அங்கிருந்து அரை மைல் தூரத்திலுள்ள தலைமைப் பட்டணத்திற்கு என்னை இழுத்துச் செல்லக் கொண்டு வரப்பட்டன.

நாங்கள் பிரயாணப்பட்ட நான்கு மணி நேரத்திற்குள் நான் விபரீதமாய்த் திடீரென்று விழித்துக்கொண்டேன். இதற்குக் காரணம் என்னவென்றால் இயந்திரத்தில் ஏதோ ஒருபாகம் கெட்டுப்போய்விட்டபடியால் அதைச் சரிப்படுத்துவதற்கு வண்டியை அவர்கள் நிறுத்தினார்கள். நிறுத்தின பொழுது, அவர்களில் இரண்டு மூன்று பேர் நான் தூங்கும்பொழுது, எவ்வாறு தோன்றுகிறேனென்று பார்க்க ஆசைப்பட்டார்கள். ஆசைப்பட்டு இயந்திரத்தின்மேலேறி, மெதுவாக என் முகத்தினருகில் வந்தார்கள். அவர்களில் ஒருவன் தன் கையிலிருந்த ஈட்டியை அரைப் பாகம் வரையில் என் இடது மூக்குத் துவாரத்தில் விட்டான். அது என்மூக்கில் ஒரு வைக்கோல் விடப்பட்டது போல் தேகத்தைக் கூசப்பண்ணி ஒரு பெரிய தும்மலை உண்டு

பண்ணிற்று. பிறகு அவர்கள் எனக்குத் தெரியாமல் ஓடிப்போய் விட்டார்கள்.

இப்படி நான் திடீரென்று விழித்துக்கொண்டதன் காரணத்தை அறிய எனக்கு மூன்று வாரங்கள் ஆயின. நாங்கள் அன்று முழுவதும் பிரயாணஞ் செய்து, அன்றிரவு ஓரிடத்தில் தங்கிவிட்டோம். அப்பொழுது என் ஒவ்வொருபக்கத்திலும் ஐந்நூறுபேர் நின்றார்கள். அதில் பாதிப் பேர் தீவர்த்திகளுடனும் பாதிப் பேர் வில், அம்புகளுடனும், நான் அப்படி இப்படி அசைய முயன்றால் என்னைக் காயப்படுத்தத் தயாராயிருந்தார்கள். மறுநாள் பொழுது விடிந்ததும் நாங்கள் மறுபடியும் பிரயாண மானோம். ஏறக்குறைய பகல் பன்னிரண்டு மணிக்குப் பட்டணத்து வாசற்படிகளுக்கு இருநூறு அடி தூரத்திற்குள் இருந்தோம். சக்கரவர்த்தியும், அரசாங்கத்தி லிருந்த பெரியோர்களும் என்னைக் காணவந்தார்கள். ஆனால் சக்கரவர்த்தி என் உடம்பின்மேலேறிப் பார்க்கும் ஆபத்துக்கு உள்ளாகாதபடி அவருடைய பெரிய உத்தியோகஸ்தர்கள் அவரை என்மேல் ஏறிப் பார்ப்பதைத் தடை செய்தார்கள்.

வண்டி நிறுத்தப்பட் டிருந்த இடத்தில் சக்கரவர்த்தியின் அரசாங்கம் முழுமைக்கும் பெரியதென்று சொல்லப்பட்ட ஒரு பழைய கோயில் இருந்தது. இந்தக் கோயிலில் சில ஆண்டுகளுக்கு முன் செய்யத்தகாத கொலை யொன்று செய்யப்பட்டபடியால், கோயில் தற்சமயம் அவர்களால் நினைக்கப்பட வில்லை. இதிலிருந்த ஆபரணங்களும், சாமான்களும் வேறு இடத்திற்குக் கொண்டுபோகப் பட்டன. ஆகையால் அவர்கள் இதைப் பொதுவான உபயோகத்திற்கு

வைத்துக் கொண்டார்கள். இந்தக் கோயிலில்தான் நான் இருக்கவேண்டுமென்று அவர்கள் தீர்மானஞ் செய்து கொண்டார்கள். வடக்குப் பக்க மிருந்த வாசற்படி நான்கடி உயரமும், இரண்டடி அகலமும் இருந்தது. அதற்குள் நான் சுலபமாய் நகர்ந்து போகக் கூடும். அந்த வாசற்படியின் இரண்டு பக்கத்திலும் தரையிலிருந்து ஆறு அங்குல உயரமுள்ள இரண்டு சாளரங்கள் இருந்தன.

இடது பக்கமிருந்த சாளரத்தின் வழியாய் சக்கரவர்த்தியின் கம்மாளன், ஐரோப்பாவில் பெண் பிள்ளைகள் கைக் கடியாரத்தில் தொங்கவிட்டுக் கொள்ளும் சங்கிலிகளைப் போன்ற சங்கிலிகள் தொண்ணூற்றொன்று கொண்டு வந்தான். இந்தச் சங்கிலிகள் என் இடதுகாலில் முப்பத்தாறு ஆமைப் பூட்டுகளால் பூட்டுப் போடப்பட்டன. அக் கோயிலுக்குள் இருபது அடி உயரமுள்ள ஒரு கோபுரம் இருந்தது. கோயில் ஐந்தடி உயரத்திற்குக் குறையாம லிருந்தது. சக்கரவர்த்தி, அநேக உயர்ந்த பிரபுக்களுடன், என்னைப் பார்க்க அந்தக் கோபுரத்தின்மேல் ஏறிக்கொண்டார். பல்லாயிர மக்கள் பட்டணத்திலிருந்து என்னைப் பார்க்க அதிக ஆவலாய் வந்தார்கள்.

அநேக காவலாளிகளிருந்தும் பட்டணத்திலிருந்து வந்த மக்களில் ஆயிரத்திற்குக் குறையாமல் ஏணிகளின் உதவியால் என் தேகத்தின் மேல் ஏறினார்கள். ஆனால் என் தேகத்தின்மேல் ஏறுகிறவர்கள், மரண தண்டனை அடைவார்க ளென்று அரசன் ஆணை பிறந்தது. என்னால் கட்டுகளை அவிழ்த்துக் கொள்ள முடியாததைக்கண்டு, வேலையாட்கள், என்னைக் கட்டப்

பட்டிருந்த கயிறுகளை எல்லாம் அறுத்துவிட்டார்கள். பிறகு என் ஆயுளிலும் அனுபவியாத வருத்தத்தோடு நான் எழுந்து நின்றேன். பிறகு நான் எழுந்து நடப்பதைக் கண்டு அந்த மக்களுக்குண்டான ஆச்சரியமும், அவர்கள் செய்த சந்தடியும் இப்படிப்பட்டதென்று என்னால் சொல்ல முடியாது. என் காலைப் பிடித்திருந்த சங்கிலி என்னை முன்னும் பின்னும் அரை வட்டமாக அசைய இடந்தந்தது. நான் என் தேக முழுமையையும் மேற் கூறிய கோயிலில் வைத்துப் படுத்துக்கொள்ள அதில் இடமிருந்தது.

[ 2 ]

அந்தக் கோயிலில் நான் படுத்துக்கொண் டிருந்த பொழுது, என்னைச் சுற்றிப் பார்த்தேன். அப்படிப் பார்க்கையில் நான் அதுவரையில் பார்த்திராத வெகு அழகான ஒரு தோற்றத்தைக் கண்டேன். அந்த நாடு முழுவதும் ஒரு பெரிய தோட்டமாகவும், அதிலிருந்த நிலங்களெல்லாம் பூங்காக்களாகவும் எனக்குக் காணப் பட்டன. அந் நிலங்கள் ஒவ்வொன்றும் சாதாரணமாய் நாற்பது அடி அகலமும், நாற்பது அடி நீளமும் இருந் தது. அந்த நிலங்களில் சிற்சில இடங்களில் மரங்கள் காணப்பட்டன. அவைகளில் அதிக உயர்ந்த மரம் ஏழு அடிக்குமேல் இல்லை. நான் இடப்பக்கமாய் அந்தப் பட்டணத்தைப் பார்த்தபொழுது. அது நாடக மேடை யில் பலவித நிறங்கள் கொடுத்திருக்கும் ஒரு நகரத் தின் திரையைப்போலத் தோன்றிற்று.

நான் நல்ல காற்றை உட்கொள்ளும் பொருட்டு என் வீட்டுக்கு வெளியே வந்தேன். அரசர் அரண் மனையிலிருந்து முன்னமே குதிரையின்மேல் என்னிடத் திற்கு வந்துகொண் டிருந்தார். அவர் என்னிடம் வந்ததும், குதிரை அவர் உயிரினுக்கே ஆபத்தை உண்டு பண்ணிற்று. ஏனென்றால், அந்தக் குதிரை நன்றாகப் பழக்கப்பட்டிருந்த போதிலும், என்னைப் போன்ற அவ்

வளவு பெரிய உருவத்தை அதுவரையில் பார்த்த தில்லே யாதலாலும், என்னைக் கண்டதும் அதற்கு, ஒரு மலேயே தன் எதிரே நடந்து வருவது போல் தோன்றிய தாலும் மருண்டு காலே உதறிக்கொண்டு கீழே விழுந்து விட்டது.

ஆனால் அரசர் குதிரை சவாரி செய்வதில் மிக்க வல்லவராதலால், தன் வேலேக்காரர்களில் சிலர் ஓடி வந்து குதிரையின் கடிவாளத்தைப் பிடிக்கும் வரையில் அவர் குதிரையின் மேலேயே இருந்து, பிறகு கீழே இறங்கினர். அவர் இறங்கியதும் வெகு வியப்புடன் என்னைச் சுற்றிப் பார்த்தார். ஆனால் அவர் என் அருகே வருவதற்குப் பயந்து, என்னைக் கட்டியிருக்கும் சங்கிலிக்கு அப்பால் கொஞ்சம் தூரத்தில் இருந்து கொண்டே என்னைப் பார்த்தார். அவர் தன்னுடைய வேலேக்காரர்களே நோக்கி எனக்குச் சாப்பாடும், மது வும் கொடுக்கும்படி கட்டளே யிட்டார்.

அவர்கள், சாப்பாட்டை ஒருவிதமான வண்டியில் வைத்து, அந்த வண்டியைத் தள்ளிக்கொண்டு என் னிடம் வந்தார்கள். வண்டி என் கைக்கு எட்டிய வுடனே, அவர்கள் தொலேவில் ஓடிவிட்டார்கள். இவ் வாறு அவர்கள் கொண்டுவந்த வண்டிகளே யெல்லாம் வெகு சீக்கிரத்தில் நான் காலி செய்துவிட்டேன். அவைகளில் இருபதில், நிறைய மாமிசமும் பத்தில் நிறைய மதுவும் இருந்தன. மாமிச வண்டிகள் ஒவ்வொன்றிலு மிருந்தது எனக்கு இரண்டு, மூன்று வாய்களாயின. பத்து வண்டி மதுவையும் ஒரே வாயாய்க் குடித்துவிட்டேன்.

அரசியும், அரச குமாரர்களும், அரச குமாரத்தி

களும், அநேக தோழிகளும் கொஞ்ச தூரத்தில் வெவ் வேறு நாற்காலிகளில் ஒரு பக்கமாய் உட்கார்ந்தார் கள். ஆனால் அரசனுக்குக் குதிரையினால் நேரிட்ட இன்னலைப் பார்த்ததும், உடனே அவர்களெல்லாம் நாற்காலிகளை விட்டு எழுந்து, அரசனிடம் வந்தார்கள். அவர் தன் அரசாங்கத்திலிருந்த மனிதர்களைவிட என் னக் அளவு உயரம் அதிகமாய் இருந்தார். அதுவே, அவரைப் பார்த்தவர்களுக்குப் பயத்தை உண்டுபண் ணும். அவருடைய மூக்கு வில்வளைவாயும், முகம் பள பளவென்று சிவப்பாயும், உடம்பின் உறுப்புக்கள் ஒன்றுக்கொன்று பொருத்தமாயும், பார்வை கம்பீர மாயும் இருந்தன. அவருடைய முகக்குறிப்பு, தாம் வலிவும் ஆண்மைத் தனமும் உள்ளவ ரென்பதைக் காட்டிற்று. அவருக்கு அப்பொழுது இருபத்தொன் பது வயது இருக்கலாம்; அதில் ஏழு ஆண்டுகால மாக அதிக மகிழ்ச்சியுடனும், எங்குச் சென்றாலும் வெற்றியுடனும் இராச்சியத்தை ஆண்டுவருகிறார். அவரை நான் சரியாகப் பார்ப்பதற்கு என் முகத்தை அவர் முகத்திற்கு நேராய்த் திருப்பிக்கொண்டேன்.

மேலும் அவர் எனக்கு மூன்று கஜ தூரத்தில்தான் நின்றுகொண் டிருந்தார். இது தவிர, அவரை நான் அநேக முறை என் கையில் வைத்துக்கொண் டிருந் தேன்; ஆதலால் அவரைப்பற்றிச் சரியாக விரித் துரைப்பேன். அவர் சாதாரண இலேசான உடை யைத் தரித்துக்கொண் டிருந்தார். அந்த உடை ஆசியாக் கண்டத்தி லிருப்பவர் நாகரிகத்திற்கும், ஐரோப்பாக் கண்டத்தி லிருப்பவர் நாகரிகத்திற்கும், இடைப் பட்ட ஒருவித நாகரிகமாக இருந்தது. தலையில் ஆபர

ணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு பொன் முடியைத் தரித்துக்கொண் டிருந்தார். அவர் தம் முடியில் ஒரு இறகு வைத்திருந்தார். நான் ஒருக்கால் சங்கிலிகளை அறுத்து விட்டால், அவர் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள, கத்தியை உருவித் தம் கையில் பிடித்துக் கொண்டிருந்தார்; அந்தக் கத்தி ஏறக்குறைய மூன்று அங்குல நீளமிருந்தது. அதன் பிடியும், உறையும் பொன்னுல் செய்யப்பட்டு வைரங்களால் இழைக்கப் பட் டிருந்தன. அவர்குரல் தெளிவாயும், இனிமையாக வும் இருந்தது.

அரசகுடும்பத்துப் பெண்களும், அரசியல் அதி காரிகளும், வெகு நேர்த்தியான உடைகளை உடுத்திக் கொண் டிருந்தார்கள்; ஆகையினுல், அவர்கள் நின்று கொண் டிருந்த இடம், ஒரு பாவாடையைத் தரையில் பரப்பி, அதில் பொன்னுலும், வெள்ளியாலும் செய்த உருவங்கள் வைத்துச் சித்திரவேலை செய்தாற் போல் தோன்றிற்று. சக்கரவர்த்தி அடிக்கடி என்னிடம் பேசி ஞர்; அவருக்கு அப்போதைக் கப்போது நான் பதில் சொல்லிக்கொண்டு வந்தேன். ஆனுல் நாங்கள் இரு வரும் ஒருவர் சொன்னதில் மற்றொருவர் ஓர் எழுத்தும் அறிந்தோமில்லை. அங்கு அநேக பாதிரிகளும், நியாய வாதிகளும் வந்திருந்தார்கள். அவர்கள், தாங்களே என்னிடம் பேசும்படி சக்கரவர்த்தியால் கட்டளையிடப் பட்டார்கள். நான் எனக்குத் தெரிந்த மொழிகளிலெல் லாம் பேசிப்பார்த்தேன். ஆனுல் ஒன்றும் பயன்பட வில்லை. நான் அவர்களிடம் பேசிய மொழிகளாவன: டச்சு, லேடின், பிரெஞ்ச், ஸ்பேனிஷ், இடாலியன் முத லியவைகளாம்.

பிறகு இரண்டு மணி நேரங் கழிந்தபின், எல்லா அதிகாரிகளும் ஊருக்குள் சென்றார்கள். என்னை நோக்கிக் கீழ்மக்கள் கைதட்டிக் கலகம் செய்வதையும், கேலி செய்வதையும் தடுக்க ஒரு பலமான படை நிறுத் தப்பட்டது. அவர்களில் சிலர் நான் என் வீட்டின் கதவின் பக்கத்தில் உட்கார்ந்துகொண் டிருந்தபொழுது, வெட்கமில்லாமல் தங்கள் இறுமாப்பினால் என்மேல் சில அம்புகளை ஏவினார்கள். அவைகளில் ஒன்று என் இடது கண்ணுக்கு வெகு அருகாமையில் வந்தது. அப்பொழுது படைத்தலைவர் இந்தச் செய்கைக்கு முதற்காரணமா யிருந்த அறுவரைப் பிடித்து, அவர் கள் கால்களையும் கைகளையும் கட்டி அவர்களை என்னி டத்தில் கொடுத்து விடுவதைவிடக் கொடூரமான தண் டனை வேறு இல்லை என நினைத்து, அவ்வாறே மேற் சொல்லிய அறுவரையும் நடத்தி என்னிடம் அனுப் பும்படி வீரர்களுக்குக் கட்டளை யிட்டார்.

போர்ச் சேவகர்களில் சிலர், என் கைக்கு எட்டும் படி அந்த அறுவரையும், தங்கள் ஈட்டிகளின் நுனியி னால் குத்தித் தள்ளினார்கள். நான் அந்த அறுவரை யும் என் வலது கையில் எடுத்து, அவர்களில் ஐந்து பேரை என் மேல் சட்டையின் பையில் போட்டு, ஒரு வனை மாத்திரம் கையில் வைத்துக்கொண்டு, அவனை உயிரோடு சாப்பிடப் போவது போல் ஒருவிதமாக என் தேகத்தை அசைத்தேன். அப்பொழுது அவன் பயங்கரமாய்க் கதறினான். படைத்தலைவரும், அவர் அதிகாரிகளும், நான் என் பேனாக்கத்தியை எடுத்த தைப் பார்த்து மிகவும் மனம் வருந்தினார்கள். ஆனால் நான் அவர்கள் பயத்தைப் பின்வருமாறு செய்து நீக்கி

னேன். அதாவது நான் அவனைச் சாந்தமாய்ப் பார்த்து, உடனே அவனைக் கட்டியிருந்த கயிறுகளை அறுத்து, மெதுவாகத் தரையில் விட்டேன். அவன் ஓட்டமாய் ஓடிவிட்டான்.

நான் மற்றவர்களையும் ஒவ்வொருவராகப் பையிலிருந்து எடுத்து இம்மாதிரியாகவே செய்தேன். போர் வீரர்களும், பொது மக்களும் நான் காட்டிய அன்பான செயலைப் பார்த்து மிகவும் ஆனந்தமடைந்தார்களென அறிந்துகொண்டேன். இந்தச் செய்தியை அவர்கள் அரசனிடத்திலும், மற்ற அதிகாரிகளிடத்திலும் சொன்னார்கள். இரவானதும் நான் சிறிது வருத்தத்துடன் என் வீட்டுக்குள் நுழைந்து, அங்கே தரையின் மேல் படுத்துக்கொண்டேன். நான் இன்னும் பதினைன்கு நாள் இவ்வாறுதான் நித்திரை செய்யவேண்டுமென்று என் மனத்தைத் திடஞ் செய்து கொண்டேன். ஏனென்றால் சக்கரவர்த்தி பதினைன்கு நாளுக்குள் எனக்கு ஒரு படுக்கை செய்யும்படி தன் வேலையாட்களுக்குக் கட்டளையிட்டார்.

சாதாரண அளவுள்ள அறுநூறு படுக்கைகள், வண்டியில் என் வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டன. அவைகளைக் கொண்டு எனக்கு ஒரு படுக்கை தயார் செய்ய வேலைகள் நடந்தன. அந்தப் படுக்கைகளில் நூற்றைம்பதை ஒன்றாய்ச் சேர்த்து ஒரு படுக்கை தைக்கப்பட்டது. அப்படித் தைக்கப்பட்டது, என் படுக்கைக்குச் சரியாய் இருந்தது. இந்தப் படுக்கைக்கு நான்கு மடிப்புக்கள் இருந்தன. இதைப் போட்டுக்கொண்டும் எனக்குச் சௌக்கியம் உண்டாகவில்லை. ஏனென்றால் அந்தத் தரையில் சிறிய மெதுவான கற்கள் இருந்தன.

ஆகையால், தரை உறுத்தியது. இந்த அளவைக் கொண்டு அவர்கள் எனக்குத் துப்பட்டிகளும் சமக்காளங்களும் செய்து கொடுத்தார்கள். வெகுநாளாகத் துன்பங்களை அனுபவித்துக்கொண் டிருக்கும் ஒரு மனிதனுக்கு இவைகள் எவ்வளவோ சௌக்கியமாக இருந்திருக்கு மென்பதை நீங்களே உணரலாம்.

என் வரவு அந்த இராச்சியம் முழுமையும் பரவி விட்டபடியால், அநேக மக்கள் பல இடங்களிலிருந்து என்னைப் பார்க்க வந்தார்கள். வந்த மக்களில் பணக்காரர்களும், சோம்பேறிகளும், ஏழைகளுமாகிய பலரும் இருந்தனர். நாட்டுப் புறங்களெல்லாம் காலியாய் விட்டன வென்றே சொல்லலாம். ஆகையால், அநேக மக்கள் வீட்டுக்காரியங்களைப் பார்க்காமலும் வயல்களை உழுது பயிரிடாமலும் இருந்திருப்பார்களென்று எனக்குத் தோன்றிற்று. சக்கரவர்த்தி, என்னை முன்னமே பார்த்து விட்டவர்கள், திரும்பி அவரவர்கள் வீடு போய்ச் சேரவேண்டு மென்று, கட்டளை யிட்டார், மேலும், அரண்மனையிலிருந்து அனுமதி பெருத எவரும் என் வீட்டுக்கு ஐம்பது கஜ தூரத்திற்கு அப்பாலேயே இருக்கவேண்டும் என்றும் கட்டளையிட்டார். அவ்வளவு தூரத்திலிருந்து என்னைப் பார்க்க ஒருவராலும் முடியாததலால் அநேக மக்கள் அரண்மனையிலிருந்து அனுமதி பெற்றுக்கொண்டு என்னைப் பார்க்க வந்தார்கள்.

இதனல் இராச்சியத்தின் வருவாய் அதிகரிக்கவும் ஏதுவாயிற்று. இதற்குள் சக்கரவர்த்தி என்னை எவ்வாறு நடத்தவேண்டு மென்று அநேக முறை ஆலோசனை மண்டபத்தில் யோசனை செய்தார். எனக்கு

அவர்களுள் உயிர்த்தோழனாயிருந்த ஒருவன் என்னால் அரசாங்கத்திற்கு தொல்லைகள் அநேகம் இருந்தனவென்று என்னிடம் பின்னால் சொன்னான். என் கட்டை அவர்கள் அவிழ்த்துவிட அஞ்சினார்கள். என் உணவிற்கு அதிகம் செலவாகிறபடியால் இராச்சியத்தில் என்னால் பஞ்சம் உண்டாகுமென்று நினைத்தார்கள். சில வேளைகளில் எனக்கு உணவு கொடுக்காமல் என்னை இறக்கச் செய்யலாமென்றும், மற்றும் சில வேளைகளில் என் முகத்திலும் கைகளிலும் நஞ்சுடைய அம்புகளை விட்டு என்னைக் கொல்லலாம் என்றும் தீர்மானஞ் செய்தார்கள். ஆனால் இவ்வாறு செய்தால் என் பிணம் அதிக நாற்றத்தை உண்டு பண்ணி, அதனால் தலைமைப் பட்டினத்தில் பிளேக் நோயை உண்டு பண்ணும் என்றும், பிறகு அந்த நோய் நாடு முழுமையும் பரவிவிடும் என்றும் அவர்கள் பயப்பட்டார்கள்.

சக்கரவர்த்தியும் மற்ற பெரிய அதிகாரிகளும் ஆலோசனை மண்டபத்தில் இவ்வாறு பலவிதமாக என்னைப் பற்றி ஆலோசனை செய்துகொண்டிருக்கும் போது, என்னைப் பாதுகாக்க விடப்பட்ட சேனையிலிருந்து அநேக வீரர் அவ்விடம் சென்றார்கள். அவர்களில் இரண்டு பேர் மாத்திரம் உள்ளே போக உத்தரவு பெற்றார்கள். இவர்கள் உள்ளே சென்றதும், சக்கரவர்த்தியினிடத்தும் அங்கிருந்த மற்றவர்களிடத்தும், கீழ்மக்களில் ஆறுபேர் குற்றவாளிகளென்பதையும், அவர்களைக் கால்களையுங் கைகளையுங் கட்டி என்னிடம் கொடுத்ததையும் நான் அவர்களுக்கு ஒரு தீங்கும் செய்யாமல் அவர்களை அன்பாக நடத்தியதையும் எடுத்துச்

சொன்னார்கள். இதைக் கேட்டதும் சக்கரவர்த்தியும் மற்றவர்களும் மிகவும் மகிழ்ந்து எனக்கு அனுகூலமாக ஒரு நல்ல ஏற்பாடு செய்தார்கள். அதாவது, பட்டணத்தைச் சுற்றி ஆயிர கஜ தூரம் வரையில் உள்ள ஒவ்வொரு கிராமத்துக் குடித்தனக்காரர்களும், ஆறு மாடுகளும் நாற்பது ஆடுகளும், இவைகளுக்குத் தகுந்த ரொட்டிகளும், குடிவகைகளும் தினந்தோறும் கொடுக்க வேண்டும் என்பதும், அவைகளின் விலையை சக்கரவர்த்தி ஒவ்வொருவருக்கும் கொடுத்துவிட வேண்டும் என்பதுமேயாகும்.

ஏனென்றால், இந்த அரசன் தனக்காக ஏற்பட்டிருக்கும் நிலங்களில் வரும் வருமானத்தையே அனுபவிக்க வேண்டியவன்; ஏதோ அபூர்வமாகச் சில சமயத்தில்தான் அரசன் குடிகளின்மேல் வரி போட வேண்டும். குடிகள் சண்டைகளில் மாத்திரம் தங்கள் செலவாக யுத்தஞ் செய்யவேண்டும். இது அப்பட்டணத்து வழக்கம். மேலும், அறு நூறு மனிதர்கள் என் வீட்டு வேலைக்காரர்களாக அனுப்பப்பட்டார்கள். அவர்களுக்கு அரசாங்கத்தாரால் தகுந்த சம்பளமும், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கூடாரமும் போட்டுக் கொடுக்கப்பட்டன. அரசன் அந்தத் தேசத்து நாணயத்திற்கு ஏற்றபடி எனக்கு உடுப்புக்கள் தைக்க அறு நூறு தையற்காரர்களை ஏற்பாடு செய்தான். நன்றாய்த் தேர்ச்சியடைந்த ஆறு பண்டிதர்கள் எனக்கு அவர்கள் மொழியைக் கற்பிக்க என்னிடம் அனுப்பப்பட்டார்கள். கடைசியாக சக்கரவர்த்தியின் குதிரைகளும், பெரிய பிரபுக்களின் குதிரைகளும், சக்கரவர்த்தியின் படையிலிருந்த குதிரைகளும் பயம் ஒழிய, என்முன் கொண்டு

வரப்பட்டுப் பழக்கஞ் செய்யப்பட்டன. ஏறக்குறைய மூன்று வாரங்களுக்குள் நான் அவர்கள் மொழியைக் கற்றுக் கொண்டு அப்பண்டிதர்களுக்கும் திருப்தி யளித்தேன்.

இதற்குள் சக்கரவர்த்தி என்னை வந்து அடிக்கடி பார்த்துக்கொண்டுபோனார். அவர் எனக்குத் தங்கள் மொழியைக் கற்பிக்கும் பண்டிதர்களின் திறமையை வியந்து, அவர்களுக்கு வேண்டிய உதவி செய்யத் தயாரா யிருந்தார். சக்கரவர்த்தியும் நானும் ஒரு வாருகப் பேச ஆரம்பித்தோம். நான் பண்டிதர்களி டத்தில் 'என்னைத் தாங்கள் சிறைச்சாலையி லிருந்து விட்டுவிட வேண்டும்' என்பதை அவர்கள் மொழியில் முதலில் கற்றுக்கொண்டு அந்த அரசன்* என்னைப் பார்க்க வரும்பொழுதெல்லாம் முழங்காலிட்டு வணங் கிச் சொல்லிக்கொண்டு வந்தேன். அவர் அதற்கு "நீ என்னைக் கேட்பது பொதுவாக விரைவில் கொடுக் கத் தக்கதல்ல. என் மந்திரி முதலானவர்களிடம் இதைப்பற்றி ஆலோசிக்காமல் இதைப்பற்றி நான் எண்ணவே கூடாது. நீ 'லூ மாஸ் கெல்மின் பெஸ்ஸோ டெஸ்மார் லான் எம்போசர்' என்று முதலில் சொல்லவேண்டும்" என்று என்னிடம் சொன் ஞர். அதன்பொருள் "நீ என்னிடத்திலும், என் குடி களிடத்திலும் சமாதானமாய் இருக்கிறேனென்று உறுதிமொழி தரவேண்டும்."

இதுவன்றி அவர் என்னை, என் பொறுமையாலும் தந்திரமான நடத்தையாலும் தம் நல்ல எண்ணத்தை யும், தம் குடிகளின் நல்ல எண்ணத்தையும் சம்பா தித்துக்கொள்ளும்படி எனக்குப் புத்தி சொன்னுர்.

மேலும் அவர் என் தேகம் முழுவதையும் சோதனை செய்யும்படி சில அதிகாரிகளுக்குக் கட்டளை யிட்டால், அதை நான் இழிவாக நினைக்கக்கூடாது என்று என்னைக் கேட்டுக்கொண்டார். ஏனென்றால், அவர் என்னிடத்தில் சில சண்டை ஆயுதங்கள் இருக்கக்கூடும் என்றும் அவைகள் என்னைப்போன்ற ஒரு பிரமாண்ட மான மனிதனிடம் இருந்தால் பொதுமக்களுக்கு ஆபத்து நேரிடுமென்றும் சொன்னார். அதற்கு நான் சொன்னதாவது, ''மகிமை தங்கிய சக்கரவர்த்தியின் விருப்பத்திற்கு நான் தடை சொல்லவில்லை. என் உடுப்புகளை யெல்லாம் இதோ கழற்றி விடுகிறேன். என் பைகளை எல்லாம் இதோ திறந்து காண்பிக் கிறேன் பார்த்துக்கொள்ளுங்கள்'' இதை நான், பாதி வார்த்தைகளாலும், பாதி சைகைகளாலும் அவருக் குத் தெரிவித்தேன்.

அவர் எனக்குப் பதில் மொழி சொன்னதாவது ''இராச்சியத்தின் சட்டப்படி, என் அதிகாரிகளில் இருவர் உன் தேக முழுமையும் ஆராயவேண்டும். இது உன் சம்மதியும் உதவியும் இல்லாமல் முடியாது. உன்னைப் பற்றி எனக்கு நல்ல எண்ணம் இருக்கிறபடி யால், அவ்விருவரையும் உன்னை நம்பி உன் கையில் ஒப்புவித்து விடுகிறன். உன்னிடமிருந்து என்னென்ன எடுக்கப்படுகின்றனவோ அவைகளெல்லாம் நீ ஊரை விட்டுப் போகும் பொழுது உன்னிடம் திருப்பிக் கொடுத்துவிடப்படும்? அல்லது நீ அவைகளுக்கு என்ன விலை சொல்லுகின்றாயோ அதைக் கொடுத்துவிடப் படும்;'' இதைக்கேட்டு நான் அந்த இரண்டு அதிகாரி களையும் என் கையில் எடுத்து என் மேல்சட்டையின்

பையொன்றில் விட்டேன்; பிறகு எல்லா பைகளிலும் எடுத்தெடுத்து விட்டேன். ஆனால் என் சொக்காயி லிருந்த இரண்டு சிறு பைகளில் மாத்திரம் அவர்களை விடவில்லை; யாருக்கும் தெரியாத மற்றொரு பை இருந் தது. அதிலும் விடவில்லை.

ஏனென்றால், அவைகளில் எனக்கு மாத்திரம் உப யோகப்படும் சில பொருள்களை நான் வைத்திருந்தேன். அவர்களை விடாத இரண்டு சிறு பைகளில் ஒன்றில் என் வெள்ளிக் கைக்கடிகாரமும், மற்றொன்றில் சில சவரன் களையுடைய ஒரு சிறு பையும் இருந்தன. அந்த இரண்டு அதிகாரிகளும், காகிதம், பேனா மைக்கூடு முதலிய வற்றை எடுத்துக்கொண்டு வந்திருந்தபடியால் அவர் கள் என் பைகளில் புதியதாய்ப் பார்த்த பொருள்களை யெல்லாம் தாங்கள் கண்டபடியே ஒரு காகிதத்தில் கீழ் வருமாறு எழுதினார்கள். இக்காகிதத்தைநான்சக்கரவர்த் தியிடம் கொடுக்க வேண்டுமென்றும் அவர்களைக் கீழே விட்டுவிட வேண்டுமென்றும் என்னைக் கேட்டுக்கொண் டார்கள். அவர்கள் எழுதியதை நான் அப்படியே பதத் திற்குப் பதம் பின்னால் கீழ்வருமாறு நமது மொழியில் மொழி பெயர்த்துக் கொண்டேன்.

'பெரிய மலைமனிதனது பெரிய மேற்சட்டையின் பையில், நாங்கள் நன்றாய்ச் சோதனை செய்த பிறகு, தாங்கள் அரண்மனையின் முதன்மையான அறையில் கீழே போடுவதற்குப் போதுமான ஒரு பெரிய கனத்த துணியைக் கண்டோம். இடது பையில் ஒரு பெரிய வெள்ளிப் பெட்டகம் மூடியோடு இருக்கக் கண்டோம். அதை எங்களால் தூக்க முடியவில்லை. நாங்கள் அதைத் திறப்பதற்கு விரும்பி எங்களில் ஒருவன்

அதற்குள் காலை வைத்தான் ; உடனே, அவன் காலில் அரைப் பாகம் ஒருவிதமான தூளில் அகப்பட்டுக் கொள்ள, அத் தூள்களில் சில பறந்து வந்து எங்கள் முகத்தின் மேல் விழ அவைகள் எங்கள் இருவரையும் அநேக முறை தும்மும்படிச் செய்தன. மலைமனிதனுடைய அந்த மார்புச் சட்டையில் ஒன்றின் மேல் ஒன்றாய் மடித்து ஒரு வலிவான கயிற்றால் கட்டப்பட்டுக் கறுத்த உருவங்கள் செதுக்கப்பட்டு மூன்று மனிதர்கள் பருமானமுள்ள வெண்மையான மெல்லிய பொருளையுடைய ஒரு பெரிய மூட்டையைக் கண்டோம்.

அந்த உருவங்களை நாங்கள் எழுத்துக்கள் என்றே எண்ணுகிறோம். ஒவ்வோர் எழுத்தும் நம்முடைய உள்ளங்கையின் அரைப்பாகம் அவ்வளவு பெரிதாயிருந்தது. இடது பக்கத்தில் ஒருவிதமான யந்திரம் இருந்தது. அதன் பின்புறத்தில் நுங்கள் அரண்மனையிலுள்ள கம்பங்களைப் போன்ற இருபது நீண்ட கம்பிகள் பரப்பப்பட்டிருந்தன. அதனால் மலைமனிதன் தன் தலையைச் சீவிக்கொள்கிறானென்று நினைக்கிறோம். நாங்கள் சொல்வதை அவன் அறிந்துகொள்ளச் செய்வது எங்களுக்கு மிகவும் கடினமான காரியமாக இருந்தபடியால், உண்மையை அறிய நாங்கள் அவனை அடிக்கடி கேள்வி கேட்டுத் தொந்தரவு செய்யவில்லை. பெரிய பையில் தூணைவிட பெரிய வலிவான ஒரு தேக்கு மரத் துண்டில் கட்டப்பட்டு, ஒரு மனிதன் உயரம் நீளமுடைய இரும்பினால் செய்யப்பட்ட ஒரு குழாயான கம்பத்தைக் கண்டோம்.

கம்பத்தின் ஒரு பக்கத்தில் பெரிய இரும்புத் துண்டுகள் ஒட்டிக்கொண்டிருந்ததால், அவைகள் ஏ

விதமான உருவங்களாகக் காணப்பட்டன. அவ்வுருவங்களை நாங்கள் என்ன செய்வதென்று எங்களுக்குத் தெரியவில்லை. இடது பையில் இதே மாதிரியான மற்றொரு யந்திரம் இருந்தது. வலது பக்கத்தின் சிறிய பையில் வெவ்வேறு அளவுடைய வெள்ளை உலோகத்தாலும், சிவப்பு உலோகத்தாலும் செய்யப்பட்ட அநேக உருண்ட தட்டையான துண்டுகள் இருந்தன. வெள்ளைத் துண்டுகளில் சில எங்களிருவராலும் தூக்க முடியாத அவ்வளவு பெரியதாகவும் கனமாகவும் இருந்தன. வெள்ளைத் துண்டுகளெல்லாம் வெள்ளியாற் செய்யப்பட்டிருந்தன. இடது பையில் ஒழுங்கினமாய் அமைக்கப்பட்ட இரண்டு கறுத்த தூண்கள் இருந்தன. நாங்கள் மலைமனிதனுடைய பையின் அடியிலிருந்தபடியால், அவைகளின் உச்சியில் எங்களால் சுலபமாய் ஏற முடியவில்லை. அவைகளில் ஒன்று மூடப்பட்டிருந்தது.

மற்றொன்றின் மேல்நுனியில் எங்கள் தலைகளைப் போல் இரண்டு பங்கு பருமனுடைய ஒரு வெண்மையான உருண்டைப்பொருள்காணப்பட்டது. இவ்விரண்டிற்கும் உள்ளே எ.:கினல் செய்யப்பட்ட ஒரு பெரிய தட்டு அடைக்கப்பட்டிருந்தது. இவைகளைப் பார்த்ததும் நாங்கள் இவைகள் அபாயகரமான யந்திரங்கள் என்று நினைத்து மலைமனிதனை அவைகளை நன்றாய் எடுத்துக் காட்டும்படி சொன்னோம். அவன் அவைகளை மூடிகளிலிருந்து எடுத்து, ஒன்று தன் தேகத்தில் முகச்சவரம் செய்துகொள்ள உதவுவதென்றும், மற்றொன்று மாமிசத்தைத் துண்டாக வெட்ட உபயோகப்படுவதென்றும் சொன்னான். இன்னும் நாங்கள் உள்ளே

நுழையக்கூடாத இரண்டு பைகளிருந்தன. அவைகளை அவன் சிறு பைகளென்று சொல்லுகிறுன்.

வலது சிறு பையின் வெளியே ஒரு பெரிய வெள்ளிச் சங்கிலி, அதிலிருந்த விசித்திரமான யந்திரத்துடன் தொங்கிக்கொண் டிருந்தது. சங்கிலியின் நுனியில் என்ன இருக்கிறதென்று மலைமனிதனை பையிலிருந்து அதை யெடுத்துக் காண்பிக்கச் சொன்ஞேம். அது ஒரு பாகம் வெள்ளி போலவும், மற்ருெரு பாகம் ஒளியூடுருவுகிற உலோகம் (கண்ணுடி) போலவும் இருக்கிற ஒரு கோளமாகக் காணப்பட்டது. ஒளியூடுருவும் பக்கத்தில் நாங்கள் சில அற்புதமான உருவங்கள் சுற்றி யெழுதப்பட் டிருந்ததைக் கண்டோம். நாங்கள் அவைகளைத் தொடலாமென்று நினைத்தோம். ஆனல் நாங்கள் அவைகளைத் தொட எங்கள் கைகளை அருகில் கொண்டுபோகும்பொழுது மத்தியில் தெளிவான பொருள் ஒன்று (கண்ணுடி) கைகளைத் தடுத்துவிட்டது. அவன் இந்த யந்திரத்தை எங்கள் காதினிடத்தில் கொண்டுவந்தான்.

அது நீர் யந்திரத்தைப் போல் இடைவிடாது சந்தடி செய்தது. நாங்கள் அது ஏதோ நாம் அறியாத மிருகமாகவாவது, அல்லது அவன் வணங்கும் தெய்வமாகவாவது இருக்க வேண்டுமென்று யோசித்தோம். ஆனலும், நாங்கள் அது அவன் வணங்கும் தெய்வமென்றேதான் துணிந்தோம். ஏனென்ருல் அவன் அதனிடம் யோசனை செய்யாமல் எந்தக் காரியமும் செய்வதில்லையென்று எங்களிடம் சொன்னுன். அவன் அதைத் தன் 'தேவவாணி' யென்றும், தனக்கு நடக்கப்போகும் சங்கதிகள் இப்படிப்பட்டனவென்று சொல்லு

மென்றும் சொன்ஞன். இடது சிறு பையிலிருந்து செம் படவனுக்குப் போதுமான ஒரு வலையை யெடுத்தான்.

அந்த வலையை ஒரு பையைப் போல் மூடவும் திறக்கவும் அவனுல் முடிந்தது. அந்த வலை அவனுக்கு ஒரு பையாகவே உபயோகப்பட்டது. ஏனென்ருல், அதில் மஞ்சள் உலோகத்தின் துண்டுகள் இருந்தன. அவையே உண்மையான பொன்னுயிருந்தால் அதிக விலை பெறும். தங்கள் கட்டளைகளின்படியே அம்மலை மனிதனுடைய பைகளை யெல்லாம் சுறுசுறுப்பாய் நாங்கள் ஆராய்ந்ததில், அவன் ஒரு பெரிய மிருகத்தி னுடைய தோலால் செய்யப்பட்ட கச்சை யொன்றைத் தன் இடுப்பில் கட்டிக்கொண்டும், அதிலிருந்து இடது பக்கமாய், ஐந்து மனிதர்கள் உயரம் நீளமுடைய ஒரு கத்தியைத் தொங்கவிட்டுக் கொண்டும் இருந்தான். அவன் வலது பக்கத்தில் இரண்டு சிற்றறைகளையுடைய ஒரு பை தொங்கிக்கொண் டிருந்தது.

அந்தச் சிற்றறைகள் ஒவ்வொன்றும் தங்கள் குடி கள் மூன்றுபேர் இருக்க இடங்கொடுக்கும். இந்தச் சிற்றறைகளில் ஒன்றில் நமது தலையின் அளவில் கனமுடைய உலோகத்தால் செய்யப்பட்ட பந்துக ளிருந்தன. அவைகளைத் தூக்க அதிக வலிவானவர் கள்தான் வரவேண்டும். மற்ருெரு சிற்றறையில் கறுத்த தானியக்குவியல் ஒன்றிருந்தது. அவைகள் அவ்வளவாகக் கனமாயில்லை. ஏனென்ருல், அவை களில் ஐம்பதுக்கு மேற்பட்டதை எங்கள் உள்ளங் கையில் வைத்துக்கொள்ள இயன்றது. நாங்கள் மலை மனிதன் பைகளில் ஆராய்ச்சி செய்தவை ஒன்றையும் விடாமல் இதில் எழுதிவைத்தோம்.

இந்தக் கடிதத்தைச் சக்கரவர்த்தியின் முன் அவர் அதிகாரிகளில் ஒருவர் வாசித்தானதும் அவர் தம் அதிகாரிகள் கடிதத்தில் குறித்தவண்ணம் என்னை என் பைகளிலிருந்து எல்லாப் பொருள்களையும் அவரிடம் கொடுத்துவிடும்படி மிகவும் அன்பாய்ச் சொன்னார். முதலில் அவர் என்னை என் பட்டயத்தை எடுக்கச் சொன்னார். நான் பட்டயம், உறை முதலிய அனைத்தையும் வெளியே எடுத்தேன். இதற்குள் சக்கரவர்த்தி நானிருந்த இடத்திற்குக் கொஞ்ச தூரத்தில் அதிக தேர்ச்சியடைந்த தம் போர்வீரர்களில் மூவாயிரம் பேரை, வில்லுடனும் அம்புடனும் தயாரா யிருக்கும்படி கட்டளையிட்டார். என் கண்கள் சக்கரவர்த்தியின் முகத்துப் பக்கமே திரும்பியிருந்தபடியால், நான் இவ்வுபாயத்தைக் கவனிக்க இடமில்லை.

பிறகு சக்கரவர்த்தி என் பட்டயத்தை உறையிலிருந்து எடுக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டார். நான் அவ்வாறே செய்தேன் ; அப்பட்டயம் கடல் நீரால் கொஞ்சம் துருப்பிடித்திருந்தாலும் சில இடங்களில் மாத்திரம் பளபளவென்று ஒளி வீசியது. இதைக் கண்டு போர்வீரர்களெல்லாம் பயத்தாலும், வியப்பாலும் ஒரு பெரிய கூச்சல் போட்டார்கள். ஏனென்றால், நான் பட்டயத்தை என் கையில் வீசின பொழுது, அது சூரிய ஒளியினால் அவர்கள் கண்களுக்குப் பேரொளி தந்தது. சக்கரவர்த்தி வெகு தைரிய சாலியா யிருந்தபடியால் நான் எண்ணியதற்குக் குறைவாகவேதான் பயப்பட்டார். பிறகு அவர், என்னைப் பட்டயத்தை உறையிலேயே போட்டு, என்னால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு மெதுவாக அதைக்

கீழே வைக்கும்படியாக எனக்குக் கட்டளையிட்டார். பிறகு என்னை எடுக்கும்படி சொன்னவை இரும்பாற் செய்த குழாயான கம்பங்கள்; அவை, என் பையில் வைத்துக் கொள்ளும் கைத்துப்பாக்கிகள்.

நான் அவைகளை வெளியே எடுத்து, சக்கரவர்த்தியின் விருப்பப்படி என்னால் கூடியவரையில் அவைகளின் உபயோகத்தை அவருக்கு எடுத்து விளக்கினேன். பிறகு, கைத்துப்பாக்கியில் மருந்துபோட்டு, சக்கரவர்த்தியைப் பயப்படாம லிருக்கும்படி சொல்லி, பையிலிருந்த மருந்துப் பொடிகள் நனையாம லிருந்ததால், துப்பாக்கியால் ஒரு வெடிபோட்டேன். இவ்விடத்தில், என் பட்டயத்தை அவர்கள் பார்த்தபொழுது எனக்குண்டான வியப்பைக் காட்டிலும் மிகவும் அதிக வியப்பு உண்டாயிற்று. ஏனென்றால், நூற்றுக் கணக்கான மக்கள் தாங்கள் மரணமடைந்தாற்போல் தரையில் மயங்கி விழுந்தார்கள். ஆனால் சக்கரவர்த்தி தாம் கீழே விழாமற் சமாளித்துக் கொண்டாலும் தம் உணர்வு வர சில நிமிடங்களாயின. பிறகு, நான் என் இரண்டு கைத்துப்பாக்கிகளையும், மருந்து குண்டுகள் வைக்கப்படும் பையையும் கீழே மெதுவாக வைத்தேன்.

இதை வைப்பதற்கு முன்னே, நான் சக்கரவர்த்தியினிடம் மருந்துகளிலும், குண்டுகளிலும் ஒரு நெருப்புப் பொறிகூடப் படாமல் வெகு பத்திரமாக வைக்கும்படி பார்க்கவேண்டுமென்றும், தவறி ஒரு பொறி பட்டுவிட்டால் மாளிகை முழுமையும் தீப்பற்றிப் பாழாய்விடுமென்றும் சொன்னேன். அம்மாதிரியாகவே என் கைக் கடியாரத்தையும் சக்கரவர்த்தியினிடம் ஒப்பு

வித்துவிட்டேன். அவர் அதைக் கண்டு மிகவும் வியந்து, தம் காவலாளிகளில் இரண்டு பேரை அதன் வளை யத்தை ஒரு மெல்லிய கட்டையில் நுழைத்துத் தங்கள் தோள்களின்மேல் அதைத் தூக்கிக்கொண்டு போகும் படி கட்டளையிட்டார்.

சக்கரவர்த்தி, கைக் கடியாரம் செய்த இடை விடாத சப்தத்தையும், நிமிடங்காட்டி முள் சுற்றி வரு வதையும் பார்த்து அளவில்லா ஆச்சரியத்தை யடைந் தார். இந்த முள்ளின் அசைவை அவர்களால் நன்றாய்ப் பார்க்க இயன்றது; ஏனென்றால் நம்முடைய பார் வையைவிட அவர்களுடைய பார்வை அதிகக் கூர்மை யானது. அவர் அதைப் பற்றித் தம் தேசத்திலிருந்த எல்லா வித்துவான்கள் கருத்தையுங் கேட்டார். அவர் கள் தங்களுக்குத் தோன்றியவாறு அநேக விதமான கருத்துக்களைக் கூறினர். பிறகு நான் பித்தளை, வெள்ளி நாணயங்களையும், பணப்பையையும் அதி லிருந்த பெரிய பொன் துண்டுகளையும், பேனாக் கத்தி யையும், சவரக் கத்தியையும், சீப்பையும், வெள்ளிப் பொடி டப்பியையும், கைக்குட்டையையும், நாட்குறிப் புப் புத்தகத்தையும் சக்கரவர்த்தியிடம் கொடுத்து விட்டேன்.

என் பட்டயம், கைத் துப்பாக்கிகள், மருந்துப் பை இவைகளெல்லாம் வண்டிகளில் சக்கரவர்த்தியின் கிடங்குக்குக் கொண்டு போகப்பட்டன. மற்ற சாமான் களெல்லாம் என்னிடமே திருப்பிக் கொடுத்துவிடப் பட்டன. நான் முன் சொன்னபடியே ஒரு பையை மாத்திரம் அவர்கள் பார்க்கும்படி நடந்துகொள்ள வில்லை. அதில் நான் மூக்குக் கண்ணாடியும், தொலை

நோக்கிக் கண்ணாடியும், இன்னும் எனக்கு உபயோகப் படும் சில பொருள்களும் வைத்திருந்தேன். இந்தப் பொருள்கள் அந்த மக்களுக்கு ஒருவிதத்திலும் உப யோகப்படா வென்றும் அவைகள் என்னை விட்டுச் சென்றால் தொலைந்து விடுமென்றும் அல்லது பாழாய் விடுமென்றும் நினைத்து, அவர்கள் கண்டுபிடிக்காமற் படி செய்து கொண்டேன்.

[ 3 ]

நான் சக்கரவர்த்தியினிடத்திலும், மற்றைய குடிகளிடத்திலும் நடந்துகொண்ட நல்ல நடத்தையாலும், தாழ்மையாலும் அவர்கள் என்னைச் சிறைச்சாலையிலிருந்து சீக்கிரத்தில் விடுதலை செய்து விடுவார்களென்று நம்பியிருந்தேன். மேலும் என்னால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு முயற்சிகளும், நல்ல செய்கைகள் பலவும் எப்பொழுதும் செய்து கொண்டு வந்தேன். அக்குடிகள் வரவர என்னிடத்தில் பயப்படாமலிருக்க ஆரம்பித்தார்கள். நான் சில வேளைகளில் கீழே படுத்துக்கொண்டு அவர்களில் ஐந்து ஆறு பேரை என் சிரசின்மேல் நாட்டியம் செய்யவிடுவது வழக்கம். கடைசியாய்ச் சிறு பிள்ளைகளும், சிறு பெண்களும் என் தலையில் ஏறிக்கொண்டு தாங்கள் கண்பொத்தியாட்டம் பயமின்றி விளையாடும்படியான தைரியத்தை யுடையவர்களானார்கள்.

இவ்வாறு அநேக சிறு பிள்ளைகளும், சிறு பெண்களும் கண் பொத்தியாட்டம் என் தலையில் ஏறிக்கொண்டு விளையாடுவது வழக்கம். நான் இப்பொழுது

அவர்கள் மொழியைப் பேசினுல் தெரிந்துகொள்வதி லும், அவர்களிடம் மறுமொழி பகர்வதிலும் அவர் களுக்குத் திருப்தி யளித்தேன். சக்கரவர்த்தி, தாங் கள் வேறு தேசத்து மக்களைக்காட்டிலும் தங்கள் புத் திக் கூர்மையாலும், கைப்பழக்கத்தாலும், மேன்மை யடைந்திருந்த தம் தேசத்து அநேக விதமான காட்சி களையும், வித்தைகளையும், ஆட்டங்களையும் எனக்குக் காட்ட விரும்பினுர். எல்லா வித்தைகளிலும் கயிறு நாட்டியந்தான் எனக்கு அதிக மகிழ்ச்சியை உண்டு பண்ணியது. அதாவது தரையிலிருந்து பன்னிரண்டு அங்குல உயரத்தில் ஏறக்குறைய இரண்டடிநீளமுள்ள கயிறு கட்டி அதன்மேல் நாட்டியம் செய்வதாம்.

இந்த விளையாட்டைப் பற்றி நான் இன்னும் அதிக மாய்ச் சொல்ல விரும்புகின்றேன். இவ்விளையாட்டு பெரிய பதவிகளையும் அரண்மனையில் ஒரு பெரிய நன்மையையும் அடைய விரும்பியவர்களால் விளை யாடப்படுவது வழக்கம். அவர்கள் இளமையிலேயே இதில் பழகுவார்கள். அவர்கள் அநேகமாய் உயர்ந்த குடியில் பிறந்தவர்களுமல்லர்; போதுமான கல்வியறிவு உடையவருமல்லர். கல்வியையும், உயர் குடிப்பிறப்பையும் ஒரு சிறிதும் கவனியாது, ஏதா கிலும் ஒரு பெரிய பதவி, மரணத்தாலாகிலும் அவ மானத்தாலாகிலும் காலியாஞல், மேற்கூறிய மனிதர் கள் கயிறு நாட்டியம் என்னும் ஆட்டம் வைக்கும்படி சக்கரவர்த்திக்கு மனுவொன்றெழுதுவார்கள்.

சக்கரவர்த்தியும் குடிப்பிறப்பையும், கல்வியையும் சிறிதேனுங் கவனியாமல் அவர்கள் கேட்டுக்கொண்ட படியே அந்த ஆட்டத்தை வைப்பார். அந்த ஆட்டத்

தில் எவன் எல்லோரையும்விட உயரமாக விழாமல் குதித்து விளையாடுகிறானோ அவனுக்குத்தான் அந்தப் பதவி கிடைக்கும். அடிக்கடி மந்திரிகள்கூட அந்த ஆட்டத்தில் தங்கள் சாமர்த்தியம் இன்னும் குறைய வில்லையென்று சக்கரவர்த்தியின் முன் காட்ட விரும்பி, மேற்கூறிய ஆட்டத்தை வைத்துத் தாங்கள் ஆடிக்காட்டுவது வழக்கம். நிதி காப்பாளராகிய பிளிம்னாப் என்பவர் அந்த இராச்சிய முழுமையிலும் இருந்த பிரபுக்கள் எல்லாரைக் காட்டிலும் நேரான கயிற்றின்மேல் ஒரு அங்குலம் அதிக உயரமாகக் குதித்து விளையாடுவதற்கு அரசரிடமிருந்து அனுமதி வாங்கிக்கொண்டார்.

இங்கிலாந்திலுள்ள சாதாரண மூட்டை நூல் கனத்திற்கு அதிகப்படாத கயிற்றினால் கட்டி நிறுத்தப் பட்ட ஒருமரத் தகட்டின்மேல் அவர் அநேகமுறை குட்டிக்கரணம் போடுவதைக் கண்டேன். சக்கரவர்த்தியி னுடைய அந்தரங்க காரியங்களுக்கெல்லாம் முதன்மை யான காரியதரிசியும் என் சினேகிதருமாகிய ரெல்டிர சல் என்பவர் அந்த விளையாட்டில் நிதி காப்பாளருக்கு அடுத்தபடி கெட்டிக்காரர் என்பது என் கருத்து. மற்ற பெரிய அதிகாரிகளெல்லாம் அந்த விளையாட்டில் ஒரு வருக்கொருவர் தோற்புக் கெலிப்பு இல்லாமலிருந்தார் கள். இவ்விதமான விளையாட்டுக்களால் மரணத்திற் கேதுவான இடையூறுகள் அநேகம் நேரிட் டிருந்தன. அவைகளில், தங்கள் அவயவங்களை இழந்த அநேகர் பெயர்கள் ஒரு புத்தகத்தில் எழுதப்பட் டிருந்தன. இரண்டு மூன்று அதிகாரிகள் தங்கள் அவயவங்களில் ஒன்றை இழந்ததை நானே என் கண்ணால் பார்த்தேன்.

மந்திரிகள் யாவரும் தங்கள் தங்கள் திறமையைக் காட்ட மேற்கூறிய ஆட்டம் வைக்கப்பட்டால் அதனுல் விளையும் ஆபத்து, எல்லாவற்றையும்விட மிகவும் அதிகம். ஏனென்ருல், அவர்களில் ஒவ்வொருவரும் மற்றவர்களைவிட அதிகத் திறமையாளரென்று சக்கர வர்த்திக்குக் காட்டிக்கொள்ளும் பொருட்டு மிகவும் முயன்று தங்களால் கூடியவரையில் அதிக உயரம் குதித்து விளையாட முயல்வராதலால் ஒவ்வொரு வரும் ஒரு முறையாகிலும் கீழே விழாமலிருந்ததே இடையாது. அவர்களில் சிலர் இரண்டு மூன்று முறை யும் கீழே விழுவார்கள். நான் இந்தத் தேசத்துக்கு வருவதற்கு இரண்டொரு ஆண்டுகட்குமுன் பிளிம்னுப் அதாவது நிதி காப்பாளார் கீழே விழுந்தபோது தரையில் தற்செயலாய் இருந்த அரசருடைய மெத் தைகளில் ஒன்று தாங்காமலிருந்திருந்தால், அவர் கழுத்து நிச்சயமாய் முறிந்துவிட்டிருக்கும் என்று நான் கேள்விப்பட்டேன்.

விழா நாட்களில் சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி யார், முதன் மந்திரி இவர்கள் முன்னிலையில் மாத் திரம் இன்னெரு விதமான ஆட்டம் நடத்தப்படுவது வழக்கம். சக்கரவர்த்தி, மேஜையின்மேல் ஆறு அங் குலம் நீளமுள்ள அதிக நேர்த்தியான பட்டு நூல்கள் மூன்று வைப்பார்; ஒன்று நீல நிறமாயும், ஒன்று சிவப்பு நிறமாயும், ஒன்று பச்சை நிறமாயும் இருக்கும். சக்கரவர்த்தி தமக்குச் சில அதிகாரிகள்மேல் அதிக விருப்பமிருந்து, அவர்களுக்குத் தாம் ஒரு கௌரவம் கொடுக்க வேண்டுமென்று எண்ணினுல், அவரைத் தன் இரகசிய மண்டபத்திற்கு வரவழைத்து, ஒரு விசித்

திரமான ஆட்டம் வைத்து, அதில் அவர்களை விளையாடும்படி செய்து மேற்கூறிய அந்தப் பட்டு நூல்களை அவர்களுக்கு வெகுமானமாகக் கொடுப்பார்.

நான் இவ்விதமான விளையாட்டை பழைய உலகத்திலாகிலும் புது உலகத்திலாகிலும் பார்த்ததே இல்லை. அவ்விளையாட்டு பின்வருமாறு நடைபெறும். சக்கரவர்த்தி தம் கைகளில் ஒரு தடியை அதன் இரண்டு நுனிகளும் அடிவானத்திற்கு நேராக இருக்கும்படி பிடித்துக் கொள்வார். அப்பொழுது விளையாடவந்த அதிகாரிகள் ஒவ்வொருவராக அரசனிடம் வந்து தடியின் உயர்வு தாழ்வுக்குத் தகுந்தபடி சில வேளைகளில் அந்தத் தடியை முன்னும் பின்னும் குதித்துத் தாண்டுவார்கள் ; சில வேளைகளில் அதன் கீழ் முன்னும் பின்னும் நுழைந்து செல்வார்கள். சில சமயங்களில் தடியின் ஒரு நுனியைச் சக்கரவர்த்தியும் மற்றொரு நுனியை முதன் மந்திரியும் பிடித்துக் கொள்வார்கள் ; சில சமயங்களில் முழுமையும் தாமே பிடித்துக்கொள்வதுமுண்டு.

எவனொருவன் மற்றெல்லாரையும்விடச் சுறுசுறுப்பாக விளையாடி தடியைத் தாண்டுவதிலும், அதன்கீழ் நுழைந்து செல்வதிலும் எல்லாரையும்விட அதிகதூரம் போய் இருக்கிறானோ அவன் நீல நிறமுடைய பட்டு நூலை அரசனிடமிருந்து இனாமாகப் பெறுவான். அவனுக்கு அடுத்தவன் சிவப்பு நிறமுடைய பட்டு நூலையும், அவனுக்கு அடுத்தவன் பச்சை நிறமுள்ள பட்டு நூலையும் பரிசிலாகப் பெறுவார்கள். இப்படிப்பட்ட நூல்களை அந்த அதிகாரிகள் தங்கள் அரைகளில் இரண்டு மூன்று சுற்று கட்டிக்கொள்வார்கள். மேற்

கூறிய மூன்று விதமான நூல்களில் ஏதாகிலும் ஒன்றைத் தன் அரையில் கட்டிக்கொண் டிராத அதிகாரியை அந்த அரசர் அரண்மனையில் நாம் பார்ப்பது அரிது.

சேனையிலிருக்கும் குதிரைகளும், அரசன் லாயத்திலிருக்கும் குதிரைகளும் தினந்தோறும் என் எதிரில் கொண்டுவந்து பழக்கப்பட்டு வந்ததால் அவைகளெல்லாம் என்னிடமிருந்த பயமும் கூச்சமும் நீங்கி என் பாதங்களின் அருகில் தைரியமாய் வர ஆரம்பித்தன. நான் என் கைகளைத் தரையில் வைத்துக்கொண் டிருந்தால் குதிரைச் சவாரி செய்வோர் தங்கள் குதிரைகளை அவைகளின்மேல் ஓட்டுவார்கள். அரசனுடைய வேட்டையாட்களில் ஒருவன் பந்தயக் குதிரையின்மேலேறிக்கொண்டு என் பாதங்களிடத்தில் வந்து, அவைகளில் போட்டிருந்த ஜோடுகளையும் மேற்ஜோடுகளையும் துரிதமாய் எடுத்துக்கொண்டு சென்றான். நான் அரசனை மகிழ்விக்க ஒரு விபரீதமான வழி கண்டுபிடித்தேன்.

அதாவது : இரண்டடி உயரமும் சாதாரண பிரம்பின் கனமுமுள்ள அநேகத் தடிகள் எனக்கு வரவழைத்துக் கொடுக்கும்படி நான் அரசனைக் கேட்டுக்கொண்டேன். அம்மாதிரியாகவே அரசனும், காட்டைப் பாதுகாத்து வரும் பெரிய அதிகாரிக்குக் கட்டளையிட, அவன் மறுநாள் காலையில் வேண்டிய தடிகளை எட்டுக் குதிரைகள் பூட்டிய அநேக வண்டிகளில் ஏற்றி, அரசன் கட்டளையின்படி என்னிடம் கொண்டுவந்து ஒப்புவிக்கத் தனக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகள் ஆறு பேருக்குக் கட்டளையிட, அவர்கள்

உடனே என்னிடம் மேற்கூறிய வண்டிகளில் கொண்டு வந்து சேர்த்தார்கள். அத்தடிகளில் ஒன்பதை எடுத்து அவைகளை நாற்கோண வடிவாகப் பூமியில் இரண்டரை அடி சதுரம் வலிவாக நிறுத்தினேன்; வேறு நான்கு தடிகளை எடுத்துப் பூமியிலிருந்து இரண்டடி உயரம் ஒவ்வொரு மூலையிலும் முன் நிறுத்திய தடிகளுக்கு நேராகக் கட்டினேன்.

பிறகு நான் என் கைக்குட்டையை எடுத்து நேராக நிற்கும் ஒன்பது தடிகளிலுங் கட்டி, அதை நன்றாக எல்லாப் பக்கங்களிலும் பரப்பினேன். மற்ற நான்கு தடிகளும் கைக்குட்டையிருக்கு மிடத்திலிருந்து ஐந்து அங்குல உயரமிருந்தபடியால் அவைகள் ஒவ்வொரு பக்கத்திற்கும் கம்பமாக உபயோகப்பட்டன. இந்த வேலை முடிந்ததும், நான் சக்கரவர்த்தியைத் தம் படையிலிருந்த உயர்ந்த குதிரைகள் இருபத்து நான்கு கொண்டுவந்து இந்த மைதானத்தில் பழக்கத் தம் வேலைக்காரர்களுக்கு உத்தர வளிக்கும்படி கேட்டுக் கொண்டேன். சக்கரவர்த்தியும் என் வேண்டுகோளுக்கு இணங்கிக் கொண்டுவரும்படி கட்டளையிட, பல குதிரைகள், முதுகில் சண்டை ஆயுதங்கொண்ட போர் வீரர்களோடு என்னிடம் வந்து சேர்ந்தன.

அவைகள் வந்து சரியாக நின்றதும், அவைகளெல்லாம் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டன. பிறகு போர்வீரர்களெல்லாம் நான் செய்துவைத்திருக்கும் மைதானத்தில் ஒவ்வொருவராக என்னால் ஏற்றப்பட்டு ஒருவரோடொருவர் விளையாட்டுச் சண்டைபோட ஆரம்பித்தார்கள். அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் கூர்மையில்லாத அம்புகள் விட்டதும், தங்கள் கத்தி

களை உருவிக்கொண்டதும், சிலர் திரும்பியோட அவர் களைச் சிலர் துரத்திப் பின்சென்றதும், ஓடினவர்கள் மறுபடியும் இவர்களைத் துரத்தியடித்ததும் ஆகிய இவைகளை எல்லாம் பார்த்து நான் என்றுமடையாத இன்பமடைந்தேன். நான் அதுவரையில் பார்த்திராத வித்தைகளை எல்லாம் அவர்கள் அவ் விளையாட்டுச் சண்டையில் காட்டினார்கள். போர் வீரர்களையும் குதிரைகளையும் கீழே விழாமல் செய்தவை மேற்கூறிய ஒன்பது தடிகளல்லாத மற்றைய நான்கு தடிகளே.

இந்த விளையாட்டைப் பார்த்துச் சக்கரவர்த்தி பேரானந்தம் அடைந்ததால், இதையே அடிக்கடி நடத்துமாறு உத்தரவு செய்தார். மேலே மைதானத்தில் விளையாடும் போர்வீரர்களுக்குத் தாம் ஒரு கட்டளையிட ஒருமுறை சக்கரவர்த்தி தம்மை மெதுவாக மேலே தூக்கிக் காட்ட எனக்குக் கட்டளையிட்டார். இந்த விளையாட்டைச் சரியாகப் பார்க்கச் சக்கரவர்த்தினி யாரும் அதிக விருப்பங் கொண்டார். என் நல்ல காலம் இவ்விளையாட்டுகளில் எந்த விதமான ஆபத்தும் ஒருவருக்கும் நேரிடவில்லை. ஆனால் ஒரே ஒரு முறை சேனைத் தலைவர்களில் ஒருவருடைய முரட்டுக் குதிரை தன்னுடைய குளம்பினால் புரண்டி என் கைக் குட்டையில் ஒரு பொத்தலை உண்டாக்கியது.

அப்பொழுது அந்தப் பொத்தலில் அக் குதிரையின் பாதம் சிக்கிக்கொள்ள, குதிரையும் அதன்மேலேறியிருந்த போர்வீரனும் கவிழ்ந்து விழுந்தார்கள்; ஆனால் உடனே நான் அவர்களிருவரையும் காப்பாற்றினேன். பிறகு பொத்தலை ஒரு கையால் மூடிக்கொண்டு, மற்றொரு கையால் மேலிருந்த சேனையை நான் எவ்

வாறு மேலே ஏற்றினேனே அவ்வாறே கீழே இறக்கி விட்டேன். ஆனால் கீழே விழுந்த குதிரைக்கு மாத்திரம் இடது தோளில் இழுத்துக்கொண்டது. நல்லகாலம், அதன்மேல் ஏறியிருந்த போர்வீரனுக்கு ஒரு காயமும் படவில்லை. நான் என் கைக்குட்டையை என்னால் கூடிய வரையில் சரிப்படுத்திக் கொண்டேன். இருந்தாலும், இப்படிப்பட்ட ஆபத்தான வேளைகளில் அதை நம்பக் கூடாதென்று தீர்மானித்துக்கொண்டேன்.

நான் சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெற்றுக் கொள்ள மூன்று நாட்கள் இருந்தபொழுது, ஒருநாள் மேற்கூறிய விளையாட்டுக்களால் சக்கரவர்த்தியை ஆனந்தப்படுத்திக்கொண் டிருந்த சமயத்தில் விரைவாய்ச் செல்லுந் தூதன் ஒருவன் அரசனிடம் வந்து, மலைமனிதன் முதல் முதலில் இருந்த இடத்தில் அவருடைய குடிகளில் சிலர் குதிரைச் சவாரி செய்தபொழுது அதிசயமான வடிவத்தையுடைய ஒரு பெரிய கறுத்த பொருளை அவ்விடத்தில் கண்டதாகவும், அது அதன் ஓரங்களி லெல்லாம் உருண்டையாக அகலமாக்கப்பட் டிருந்ததாகவும், அந்த ஓரங்களின் அகலம் அவருடைய படுக்கையறை அகலம் இருந்ததாகவும், அது அதன் நடுவில் ஒரு மனிதன் உயரம் உயர்த்தப்பட் டிருந்ததாகவும் அது புல்லின்மேல் அசைவின்றிக் கிடந்ததால் அவர்கள் முதலில் நினைத்தபடி அது உயிருள்ள பிராணி அல்லவென்றும் சொன்னான்.

அன்றியும், அவர்களில் சிலர் அதைச் சுற்றி அநேக முறை நடந்து போனதாகவும், அவர்கள் ஒருவர் தோளின்மேல் ஒருவராக ஏறி அதன் உச்சியிற் சென்றதாகவும், உச்சி தட்டையாகவும் சமமாகவும் இருந்த

தாகவும், அங்கிருந்து அதை உற்றுக் கவனித்தபொழுது அதற்குள்ளே குழாயாக இருந்ததாகவும், அது மலை மனிதனுடையதாகவே இருக்கவேண்டுமென்று அவர்கள் நினைப்பதாகவும், சக்கரவர்த்திக்கு விருப்பமிருந்தால் அதை யெடுத்துக்கொண்டு வர அவர் அவ்விடம் ஐந்து குதிரைகள் அனுப்பினல் அவர்கள் அதை அவரிடம் கொண்டுவருவதாகச் சொல்லுவதாகவும் அவரிடம் சொன்னன். இதைக் கேட்டு நான் குதிரைச் சவாரி செய்தவர்கள் சொன்னது இன்ன பொருள் என்று உடனே தெரிந்துகொண்டேன்.

நான் முதலில் எவ்விடத்தில் படுத்து நித்திரை செய்தேனே அவ்விடத்திற்கு நான் வருவதற்கு முன்னே, எங்கள் கப்பல் உடைந்ததால் நான் மனமிகக் கலங்கி என் தொப்பியைத் தலையில் ஒரு கயிற்றினல் கட்டிக்கொண்டேன். பிறகு நான் நீந்திக்கொண்டு வந்த பொழுதெல்லாம் அது ஒட்டிக்கொண்டே வந்து நான் தண்ணீரை விட்டு நிலத்திற்கு வந்தபொழுது கீழே விழுந்துவிட்டாற் போலிருக்கிறது. இதை நான் நீந்தி வரும் வழியில் கயிறு தற்செயலாய் எனக்குத் தெரியாமல் அறுந்து, தொப்பி சமுத்திரத்தில் விழுந்துவிட்டிருக்குமென்று எண்ணிக்கொண்டேன். பிறகு நான் சக்கரவர்த்திக்கு அது இப்படிப்பட்டதென்றும் தெரிவித்து அதை என்னிடம்கொண்டுவரும்படி தன்னுடைய வேலைக்காரர்களுக்குக் கட்டளையிடும்படி அவரை வேண்டிக்கொண்டேன்.

அப்படியே சக்கரவர்த்தி தம் வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட, மறுநாள் காலையில் அது என்னிடம் கொண்டு வரப்பட்டது. ஆனல் அது அவ்வளவாக

நல்ல நிலைமையில் இருக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் அதன் ஓரத்தில் இரண்டு சந்துகள் செய்து, அந்தச் சந்துகளில் இரண்டு கொக்கிகளை முடுக்கி அக்கொக்கிகளைக் குதிரைகளின் இடுப்பில் ஒரு நீண்டகயிற்றால் கட்டி அதை என்னிடம் இழுத்துக் கொண்டு வந்தார்கள். அது சுமார் நம்முடைய அரை மைல் தூரத்திலிருந்து கொண்டுவரப்பட்டது. ஆனாலும் அந்தத் தேசத்துத் தரை மேடு பள்ளம் இல்லாமலும் சமமாகவும் இருந்தபடியால் அது நான் நினைத்ததற்கு அதிகக் குறைவாகத்தான் பழுதாக்கப்பட் டிருந்தது.

இது நடந்த இரண்டாம் நாள் சக்கரவர்த்தி லிலிபுட் பட்டணத்தில், பல இடங்களிலிருந்த சேனைகளையெல்லாம் ஒன்றுசேர்த்துத் தயார் செய்யும்படி தம் அதிகாரிகளுக்கு ஆணையிட்டார். ஏனென்றால், இவைகளைக் கொண்டு ஒரு விபரீதமான வேடிக்கை செய்ய விரும்பினார். அதாவது, அவர் என்னை என்னால் கூடியவரையில் என் இருகால்களையும் அகலமாகப் பரப்பச் சொல்லி, அவருடைய சேனைத் தலைவரை (இந்தச் சேனைத் தலைவர் வெகுநாளாகத் தம் தொழிலில் அனுபவப்பட்டவர். எனக்கும் மிக வேண்டியவர்) சேனைகளை யெல்லாம் கிட்ட நெருங்கிக் கொள்ளும்படி செய்யவும், என் கீழே அவைகளை எல்லாம் புறப்பட்டுப் போகும்படி செய்யவும் கட்டளையிட்டார். காலாட்கள் இருபத்து நான்கு இணைகளாகவும், குதிரையாட்கள் பதினாறு இணைகளாகவும், முரசு முழக்கத்துடன், விதம் விதமான நிறமுடைய கொடிகள் பறக்க, ஈட்டிகளுடன் சென்றன.

இந்தச் சேனையின் அணி வகுப்பில் மூவாயிரங்

காலாட்களும், ஓராயிரம் குதிரையாட்களும் இருந்தனர். பிறகு நான் விடுதலையை யடைய சக்கரவர்த்திக்கு அநேக மனுக்களும், விண்ணப்பங்களும் அனுப்பி னேன். அதன் பிறகு அவர் முதலில் மந்திரி ஆலோசனை மண்டபத்திலும், பிறகு, ஆலோசனைச் சங்கத்தார் மண்டபத்திலும் தெரிவித்தார். ஆலோசனைச் சங்கத் தார்களில், ஓரிருவர் தவிர மற்றவர் அனைவரும் என்னை விடுதலை செய்ய இணங்கினார்கள். ஒருவர் யாதொரு காரணமுமின்றி எனக்கு விரோதியாய் ஏற்பட்டு விட்டார். ஆனாலும் என்னை விடுதலைசெய்ய மற்றவர்களெல்லாம் இசைந்தபடியால் அரசர் என்னை விடுதலைசெய்யக் கட்டளையிட்டுவிட்டார்.

அந்த மந்திரி அந்தத் தேசத்துப் போர்ச்சேவகர் களுக்கெல்லாம் தலைவர். அவர் அரசருடைய முழு நம்பிக்கைக்கு உரியவர். அவர் அரசியற் காரியங்களி லெல்லாம் நன்றாகப் பழக்க முடையவர். ஆனாலும், கடுகடுப்பாகப் பேசும் இயல்பும் சிலவேளை சிடுமூஞ்சி யாகக் காணப்படும் தன்மையும் பொருந்தியவர். எப் படி யிருந்தபோதிலும், கடைசியாய் என் விடுதலையின் பொருட்டு அவரைச் சில ஏற்பாடுகள் யெழுதும்படி எல்லோரும் கேட்டுக்கொண்டார்கள். அவரும் சில திட்டங்கள் எழுதினார். அவ் வேற்பாடுகளின் படியே நான் நடக்கவேண்டுமென்று என்னைச் சக்கரவர்த்தி முதலானவர்கள் உறுதிமொழி கூறச் சொன்னார்கள்.

மேற்கூறிய ஏற்பாடுகள் எழுதப்பட்ட கடிதத்தை அவர் இரண்டு துணைக் காரியதரிசிகளோடும் நல்ல மதிப்புடைய அநேக பெரிய அதிகாரிகளோடும் என் னிடம் வந்து கொடுத்தார். அதில் எழுதப்பட் டிருந்த

ஏற்பாடுகளை யெல்லாம் எனக்குப் படித்துக் காண்பித்த பிறகு, நான் அவைகளுக்கு இணங்கியதும், முதலில், என்னை எங்கள் தேசத்து வழக்கப்படிக்கும் பிறகு அவர்கள் தேசத்து வழக்கப்படிக்கும் சத்தியம் செய்யும்படி ஏற்படுத்தினார்கள். அவர்கள் தேசத்து வழக்கமாவது, நான் என் வலது பாதத்தை இடது கையால் பிடித்துக்கொண்டு வலது கையின் நடுவிரலை உச்சந்தலையிலும் கட்டைவிரலை வலது செவியில் நுனியிலும் வைத்துக்கொண்டு சத்தியம் செய்ய வேண்டியதாகும்.

வாசிப்பவருக்கு அவர்க ளெழுதும் நடை ஒருவாறாக இருக்கவேண்டுமென்றும், அவர்கள் செய்த ஏற்பாடுகள் புதுமையாக இருக்கவேண்டுமென்றும் எண்ண முண்டாகு மாதலால் நான் அக்கடிதத்தில் எழுதப்பட் டிருந்ததை என்னால் கூடியவரையில் அவர்கள் மொழியினின்றும் நமது மொழியில் சரியாக மொழிபெயர்த்தேன். எல்லா வல்லமையுடைய லிலிபுட் சக்கரவர்த்தி, தம் தேசங்களுக்கெல்லாம் ஆனந்தமாகவும் பயங்கரமாகவும் விளங்கும் ஆற்றல் வாய்ந்தவர். நாடு ஐயாயிரம் பிளஸ்டர்க்ஸ் விஸ்தீரணமுடையது. (அஃதாவது நம்முடைய கணக்குக்குப் பன்னிரண்டு மைல்.)

எல்லாரையும்விட அதிக உயரமுடையவர். அவர் தலையை ஒருவாறு அசைத்தால் மற்ற அரசர்களெல்லாம் கிடுகிடென்று நடுங்குவார்கள். அவர், இன்முகமும் எல்லாவிதமான சௌகரியமும், பிறர்க்கு உபகாரஞ் செய்யும் அருங்குணமும், மற்ற அரசர்கட்கு ஆண் சிங்கம் போன்ற வீரமும், பகைவர்களை அலற

வைக்கும் படை ஆற்றலும், அடைக்கலம் அடைந்த வரை ஆதரிக்கும் இயல்பும் கம்பீரமும் வாய்ந்த ஒரு மேலான வீரர். மகா மாட்சிமை தங்கிய சக்கர வர்த்தியார் கீழ்வரும் ஏற்பாடுகளுக்கு லிலிபுட் பட்ட ணத்திற்குப் புதிதாக வந்திருக்கும் மலைமனிதன் இணங்கி நடக்கவேண்டுமென்று கட்டளை பிறப் பித்தார்.

1. மலைமனிதன் எங்கள் தேசத்திலிருந்து எங் கள் பெரிய முத்திரையையுடைய சுதந்தரச் சீட்டின்றி வெளியே போகக்கூடாது.

2. அவன் எங்கள் தலைநகரத்திற்கு எங்களால் அனுப்பப்படும் தூதன் கொண்டு வரும் அனுமதி யின்றி வருவதற்கு எண்ணலாகாது. அந்தக் காலத் தில் பட்டணத்திலுள்ள மக்களெல்லாம் தாங்கள் தங் கள் வீடுகளிலேயே இருக்கும்படி இரண்டுமணி நேரத் திற்கு முன்னதாகவே அறிவிக்கப்படுவார்கள்.

3. அவன் எங்கள் பெரிய சாலைகளிலன்றி வேறு சிறு சாலைகளில் நடக்கலாகாது. புற்றரையிலாவது தானியம் பயிரிடப்பட் டிருக்கும் நிலத்திலாவது படுத் தல், நடத்தல் முதலிய காரியங்கள் ஒன்றும் செய்ய லாகாது.

4. அவன் மேற்கூறிய சாலைகளில் நடக்கும் பொழுது எங்களுடைய குடிகளையாவது அவர்களு டைய குதிரைகளையாவது வண்டிகளையாவது மிதித்து விடாமல் வெகு பத்திரமாக நடத்தல் வேண்டும்.

5. ஏதேனும் ஒரு செய்தி ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு வெகு விரைவில் செல்லவேண்டு மானால் மலைமனிதன் அந்தத் தகவல் அடங்கிய கடி

தத்தைத் தன் பையில் வைத்து, குறிப்பிட்ட இடத்திற்கு மாதத்திற்கு ஒருமுறை போதல்வேண்டும்.

6. பிளிவஸ்கோ தீவிலுள்ள எங்கள் விரோதிகளை, எங்களுக்கு உதவியாய் எப்போது வேண்டுமோ, அப்பொழுது முறியடிக்கவேண்டும். எங்களை எதிர்த்துப் படை யெடுக்கத் தயார் செய்பவர்களினுடைய சண்டைக் கப்பல்களை யெல்லாம் எங்கள் நலனுக்காக அழித்துவிடவேண்டும்.

7. அவன் தன் ஓய்வுகாலத்தில் எங்கள் தொழிலாளிகள் சில பெரிய கற்களை முக்கியமான மலர் வனச் சுவரின் மேலும் மற்றும் அரசருடைய கட்டடங்களின் மேலும் தூக்கி வைக்கும்பொழுது அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

8. அவன் இரண்டு மாதங்களுக்குள் தன்னுடைய நடையினுல் எங்கள் தேசத்தின் முழு சுற்றளவைச் சரியாக எடுத்து எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

9. மேற்கூறிய ஏற்பாடுகளுக் கெல்லாம் மலை மனிதன் ஒத்துக்கொள்வதாக உறுதி கூறினுல், அவனுக்குத் தினந்தோறும் 1728 குடிகளுக்குப் போதுமான சாப்பாடும் மதுவும் கொடுக்கப்படும். அரசரைத் தடையில்லாமல் அவன் பார்க்கவும் கூடும். இன்னும் பலவிதமான கௌரவங்களும் அவன் அடையக்கூடும். இந்தப்படிக்கு எங்கள் மாளிகையில் இந்தச் சீட்டு எங்கள் அரசாட்சியின் தொண்ணூற்றொன்ருவது மாதம் பன்னிரெண்டாம் நாளில் எழுதிக் கொடுக்கப்பட்டது.

இந்த ஏற்பாடுகளில் சில் எனக்கு விருப்பமில்

லாதவையா யிருந்தாலும் நான் அவைகளை உற்சாகத் தோடும் திருப்தியோடும் ஏற்றுக்கொண்டு உறுதி கூறி னேன். எனக்கு இழிவாகக் காணப்படும் சில ஏற் பாடுகள் என் விரோதியின் தூண்டுதலாலேயே செய் யப்பட்டன. நான் சத்தியஞ் செய்தானதும் என் கால் களில் பூட்டப்பட் டிருந்த சங்கிலிகளின் பூட்டுகள் திறக்கப்பட்டன ; நான் விடுதலை அடைந்தேன். இந்த சமயத்தில் சக்கரவர்த்தியாரே என் பக்கத்தி லிருக்கும் படியான கௌரவத்தை யடைந்தேன். பிறகு நான் அவர் பாதங்களில் விழுந்து வணங்கினேன். அவர் அநேக நல்ல சொற்கள் சொல்லி என்னை எழுந்திருக் கும்படி கட்டளை யிட்டார். பிறகு, அவர் எனக்கு முன் னமே கொடுத்திருக்கும் கௌரவங்களுக்கும் நான் தகுதியுடையவனுக நடந்து கொள்வேனென்பது தம் நம்பிக்கை யென்று சொன்னுர்.

முன்னே கூறப்பட்ட ஒன்பதாவது ஏற்பாட்டில் சக்கரவர்த்தியார் கட்டளைப்படி எனக்குத் தினந்தோ றும் 1728 மனிதர்களுக்குப் போதுமான சாப்பாடும், மதுவும் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட் டிருக் கிறது. அந்தக் கணக்கை அவர்கள் எவ்வாறு அறிந் தார்களென்பதை இனி கூறுகிறேன். இதை நான் சிறிது காலங்கழிந்தபின் அரண்மனையிலிருந்த எனக்கு நிரம்பவும் வேண்டிய ஒரு நண்பரைக் கேட்டபொழுது அவர் பின்வருமாறு என்னிடம் சொன்னுர். சக்கரவர்த் தியாரின் கணித வல்லுனர்கள் என் தேகத்தின் உய ரத்தைக் கணக்கெடுத்துக்கொண்டு அவர்கள் உயரத் தையும் என் உயரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் என் உயரம் அவர்கள் உயரத்திற்குப் பன்னிரெண்டு

பங்கு அதிகமாக இருக்கக்கண்டு, மேலும் அவர்கள் தேகத்தின் அளவையும் என் தேகத்தின் அளவையும் ஆலோசித்து, அவர்கள் மனிதர்களில் 1728 பேரை என் தேகம் பிடிக்குமென்று அறிந்து, குறைந்தது அந்த 1728 பேருக்கு வேண்டிய உணவு எனக்கு வேண்டும் என்று கணக்கெடுத்தார்கள். அதனால் அந்தத் தேசத்து மக்களின் புத்திகூர்மையும், கருத்தும், ஆராய்ச்சியும், திட்டமும் இப்படிப்பட்டவை யென உணரலாம்.

[ 4 ]

நான் விடுதலை யடைந்ததும் லிலிபுட் தேசத்திற்குத் தலைமைப் பட்டணமாகிய மில்டென்ட்டோவைப்போய்ப் பார்ப்பதற்குச் சுதந்தரம் கொடுக்கும்படி சக்கரவர்த்தியாரைக் கேட்டேன். அவர் அதை எனக்கு வெகு எளிதாகக் கொடுத்தார். ஆனால் அவர் தம் தேசத்துக் குடிகளுக்காவது, அவர்களுடைய வீடுகளுக்காவது ஒரு தீங்கும் நேரிடாதபடி என்னை வெகு கவனமாகப் போய்ப் பார்க்கும்படி எனக்கு அறிவித்தார். மக்கள் நான் மில்டென்ட்டோவைப் பார்க்கப் போகும் செய்தியை அரசர் ஆணையால் முன்னதாகவே அறிவிக்கப்பட்டார்கள். அந்தப் பட்டணத்தைச் சுற்றி இருந்த சுவர் 2½ அடி உயரமும், 11 அங்குல அகலமும் இருந்தது. ஆதலால் நான்குசக்கர குதிரை வண்டியும், குதிரைகளும் மிகவும் பத்திரமாய் அதைச் சுற்றிலும் போகலாம். சுவருக்குப் பத்தடி தூரத்தில் வலிவான கோபுரங்கள் அப்பட்டணத்திற்குப் பாதுகாப்பாகக் கட்டப்பட் டிருந்தன.

மேற்பக்கமாக இருந்த பெரிய வாசற்படியைத் தாண்டி, அந்தப் பட்டணத்திலுள்ள முக்கியமான

இரண்டு வீதிகளில் மேற்சட்டை போட்டுக்கொண்டால் அதன் ஓரங்கள் அவ் வீதிகளிலுள்ள வீடுகளின்மேல் உராய்ந்து அவைகளின் கூரைகளையும் தாழ்வாரங் களையும் பாழாக்கிவிடுமென்று பயந்து அதைத் தரித் துக்கொள்ளாமல் மார்புச்சட்டையை மாத்திரம் தரித் துக்கொண்டு, மிகவும் மெதுவாகச் சென்றேன். நான் வீதிகளில் வரும்பொழுது ஒருவரும் வெளியே வராமல் தங்கள் வீடுகளிலேயே இருக்கவேண்டு மென்று கண் டிப்பான அரசர் ஆணை இருந்தபோதிலும், வேடிக்கை பார்க்க யாராகிலும் இருக்கப்போகிறார்களென்று நான் வெகு கவனமாக நடந்து போனேன். உப்பரிகைகளின் சாளரங்களிலும், வீடுகளின் மேலும் என்னைப் பார்ப் பதற்குப் பொதுமக்கள் கூட்டம் கூடி இருந்தனர். இவ் வளவு மக்கள் திரளை நான் அதுவரையில் செய்த பிர யாணங்கள் ஒன்றிலும் பார்க்கவில்லை.

அப்பட்டணம் சம சதுரமாக இருந்தது, அதன் ஒவ்வொரு பக்கமும் 500 அடி நீளமுள்ள சுவர்கள் இருந்தன. அதன் குறுக்காகச் செல்லும் இரண்டு பெரிய வீதிகள் அதை நான்கு பாகங்களாகப் பிரித் தன. அவைகள் ஒவ்வொன்றும் 5 அடி அகலம் இருந் தன. நான் இவ்வீதிகளில் சென்றபொழுது அநேக சந்துகள் இருந்தன. அவைகள் பன்னிரண்டு அங்குல அகலத்திலிருந்து பதினெட்டு அங்குல அகலம் வரை யில் இருந்தபடியால், அவைகளில் நுழைந்து போக என்னால் முடியவில்லை. அந்தப் பட்டணத்தில் ஐந்து லட்சம் மக்கள் வசித்திருந்தார்கள். வீடுகள் மூன்று அடுக்கிலிருந்து ஐந்து அடுக்கு வரையில் இருந்தன. கடைகளும் கடைத் தெருக்களும் நன்றாக அமைக்கப்

பட்டிருந்தன். சக்கரவர்த்தியின் மாளிகை மேற்கூறிய இரண்டு பெரிய வீதிகளும் சந்திக்கு மிடத்தில் பட்டணத்தின் மத்தியில் இருந்தது. அந்த மாளிகையைச் சுற்றி இரண்டு அடி உயரமுள்ள ஒரு சுவர் இருந்தது.

சுவருக்கும் கட்டடத்திற்கும் இடையே இருபது அடி நீள மிருந்தது. நான் இந்தச் சுவரைத் தாண்டிப் போக மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியாரிட மிருந்து உத்தரவு பெற்றேன். சுவருக்கும் கட்டடத்திற்கும் மத்தியில் இடம் அதிக விசாலமாக இருந்தால், நான் மாளிகையின் ஒவ்வொரு பக்கத்தையும் நன்ருகப் பார்த்தேன். வெளி அரண்மனை நாற்பது அடி சதுரமுள்ளது; அதற்குள் வேறு இரண்டு அரண்மனைகள் இருந்தன. மாளிகையின் உட்புறத்தில் சக்கரவர்த்தியின் அறைகள் இருந்தன. அவைகளைப் பார்க்க நான் மிகவும் விரும்பினேன்; ஆனல், மாளிகையில் ஒரு சுற்றிலிருந்து மற்ருெரு சுற்றுக்குப் போகும் பெரிய வாசற்படிகள் 18 அங்குல உயரமும் 7 அங்குல அகலமும் இருந்தபடியால், அவைகளைப் பார்க்க முடியவில்லை.

வெளி அரண்மனையிலிருந்த கட்டடங்கள் 5 அடி உயரம் இருந்தன. அவைகளின் சுவர்க்ள் வெட்டப்பட்ட கற்களால் வலிவாகக் கட்டப்பட்டு, நான்கு அடி கனமுள்ளவையா யிருந்தும் அவைகளின் அடுக்குகள் பாழாகாதபடி நான் அவைகளைத் தாண்டுவது அசாத்தியமான காரியமாயிருந்தது. அப்பொழுது சக்கரவர்த்தியார் தம் மாளிகையின் சிறப்பை நான் பார்க்க வேண்டுமென்று விரும்பினுர். ஆனல், அப்பொழுது அவர் விருப்பப்படி மாளிகைக்குள் இருக்கும் சிறப்புகளை என்னல் பார்க்க முடியவில்லை. ஆகையால் என்

இடத்திற்குத் திரும்பிப் போய், பிறகு அங்கிருந்து பட்டணத்திற்கு நூறு கஜ தூரத்திலுள்ள அரசருடைய மலர்வனத்திற்குப்போய், அங்கிருந்த மிகப் பெரிய மரங்களில் சிலவற்றை என் பேனுக்கத்தியினுல் வெட்டி, இந்த மரங்களினுல் என்னைத் தாங்கத்தக்க மூன்று அடி உயரமுள்ள இரண்டு பீடங்கள் செய்தேன். இது செய்வதற்கு எனக்கு மூன்று நாட்கள் ஆயின.

நான் மறுபடியும் தலைமைப் பட்டணத்துக்கு வரும் செய்தி பட்டணத்திலுள்ள மக்கள் இரண்டாம் முறை முன்னதாகவே அரசர் உத்தரவால் தெரிவிக்கப்பட்டார்கள். நான் என் கைகளில் இரண்டு ஆசனங்களோடு மறுபடியும் பட்டணத்திற்குள் போனேன். அரசருடைய வெளி அரண்மனைப் பக்கம் வந்ததும் நான் ஒரு ஆசனத்தின் மேல் நின்றுகொண்டு மற்றொரு ஆசனத்தைக் கையில் வைத்துக்கொண்டேன். இதை அரண்மனையின் கூரையின் மேல் தூக்கி இந்த அரண்மனைக்கும் இரண்டாவது அரண்மனைக்கும் மத்தியிலுள்ள 8 அடி அகலமுள்ள இடத்தில் மெதுவாக வைத்தேன். பிறகு நான் கட்டடத்தை ஒரு ஆசனத்திலிருந்து மற்றொரு ஆசனத்தில் கால்வைத்துத் தாண்டி முதலில் நான் நின்றுகொண்டிருந்த ஆசனத்தை என் கையில் வைத்திருந்த வளைவான தடியால் தூக்கிக்கொண்டேன்.

இந்தத் தந்திரத்தால் நான் உள் அரண்மனைக்குச் சென்றேன். நான் அவ்விடத்தில் ஒரு பக்கம் சாய்வாகப் படுத்துக்கொண்டு என் முகத்தை அரண்மனையின் நடு அடுக்கில் எனக்காகத் திறக்கப்பட்டிருக்கும் சாளரங்களின் வழியாகத் திருப்பிக்கொண்டு மிகவிசித்திரமான அநேக அறைகளைப் பார்த்தேன். அங்கே

சக்கரவர்த்தியாரும், சக்கரவர்த்தினியாரும் வெவ்வேறு அறைகளில் முதன்மையான வெவ்வேறு வேலைக்காரர் களோடு இருந்ததைக் கண்டேன். சக்கரவர்த்தினியார் தமக்கு என்மே லிருக்கும் அன்பினுல் என்னைக் கண்டதும் புன்சிரிப்புக்கொண்டு, பலகணி வழியாய் தம் கையை நான் முத்திகொடுக்கும் பொருட்டு நீட்டினுர். பிறகு, நான் விடுதலை அடைந்து ஏறக்குறைய பதினுன்கு நாட்கள் ஆனதும் ஒருநாள் காலையில் முக்கியமான காரியங்களுக்கு முதல் காரியதரிசியானவர் ஒரு வேலைக்காரரோடு என் வீட்டுக்கு வந்தார். அவர் தம்முடைய குதிரைவண்டியைக் கொஞ்சந் தூரத்தில் நிறுத்தி வைக்கும்படி கட்டளையிட்டுப் பிறகு என்னிடம் வந்து தம்மோடு ஒருமணிநேரம் உரையாட வேண்டுமென்று என்னைக் கேட்டுக்கொண்டார்.

அவருடைய நற்குணத்திற்கும், திறமைக்கும் எனக்குச் செய்த அநேக நன்மைகளுக்கும் நான் அவர் விருப்பத்திற்கு உடனே உடன்பட்டேன். நான் சொல்லுவதை அவர் சுலபமாகக் கேட்பதற்காக கீழே படுத்துக்கொள்ள விருப்பமுற்றேன். ஆனுல் அவர் நான் அவ்வாறு செய்வதை விட, உரையாடல் முடியும் வரையில் அவரை என் கையில் வைத்துக்கொள்வது உத்தமம் என்று கூறினுர். நான் அவ்வாறே செய்ய இசைந்தேன். அவர் கீழ் வருமாறு என்னிடம் பேசினுர். "லிலிபுட்தேசம் அந்நிய தேசத்தாருக்குத் தோன்றுவது போல் அவ்வளவு மேலான நிலைமையில் தற்சமயம் இருக்கவில்லை. நாங்கள் எங்களுக்கு இருக்கும் இரண்டு பெரிய கெடுதிகளால் அதிக அல்லல்படுகிறோம். அரசாங்கத்திற்கு விரோதமாக நடக்கும் கட்சியினரால்

உண்டாகும் கெடுதி ஒன்று. வெளியே எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் மிக்க வலிவுள்ள விரோதிகள் எங்கள் தேசத்தின்மேல் படையெடுப்பதால் உண்டாகும் கெடுதி இரண்டு.

முதல் கெடுதியைப்பற்றி நான் சொல்லவேண்டியதாவது, சென்ற எழுபது மாதங்களுக்கு மேலாக இந்தத் தேசத்தில் டிரா மெக்சான், ஸ்லா மெக்சான் என்னும் பெயரையுடைய இரண்டு திறத்தார் ஒருவர்க்கொருவர் சண்டை செய்துகொண்டு வருகிறுர்கள். அவ்விருதிறத்தாருக்கும் உள்ள வேறுபாடு யாதெனில், ஒரு திறத்தார் குதிக்கால் வரையில் வரும் காற்ஜோட்டைப் போட்டுக் கொள்வார்கள்; மற்ருெரு திறத்தார் பாதத்திலிருந்து ஏறக்குறைய முழங்காலுக்கு அரைப் பாகம் வரையில் வரும் காற்ஜோட்டைப் போட்டுக் கொள்ளுவார்கள். பண்டைக் காலத்திலிருந்த அரசர்கள் முழங்காலில் ஏறக்குறைய அரைப்பாகம் வரையில் வரும் காற்ஜோட்டைத்தான் போட்டுக் கொள்வது சிறந்தது என்று கூறினுர்கள். அப்படியே குடிகளும் இரண்டாவதுகூறிய காற்ஜோடுகளை உபயோகித்து வந்தார்கள். ஆனல், தற்போது இருக்கும் சக்கரவர்த்தியார் தம் அரசாட்சியில் குதிக்கால் வரையில் வரும் காற்ஜோடுகளைத்தான் உபயோகிக்கவேண்டுமென்று தம் குடிகளுக்கு ஆணையிட்டார்.

இதை ஒப்புக்கொண்டவர்கள் சிலர். ஒப்புக்கொள்ளாதவர்கள் சிலர். ஆக இரண்டுகட்சிகள் தேசத்தில் உண்டாயின. இவ்விரு கட்சியாரும் ஒருவர்மேல் ஒருவருக் குண்டாகும் அருவருப்பினலும், பகைமையாலும் அவர்கள் ஒன்றுசேர்ந்து புசித்தலாவது, பருகுத

லாவது, உரையாடுதலாவது கிடையாது. இத்தகைய தொல்லைகள் பல இங்கே நிறைந்துகிடக்க, பிளிவஸ்கோ என்னும் பெயர் கொண்ட வேறொரு நாட்டின் அரசன் இந்நாட்டின்மேல் படை யெடுப்பதாகப் பயமுறுத்தி யிருக்கிறான். பிளிவஸ்கோ நாடும் இந்த நாட்டைப் போலவே பலவிதப் பெருமையும், வன்மையும் வாய்க் கப் பெற்றதே. கடந்த முப்பத்தாறு மாதங்களாக இந்த இரண்டு நாடுகளும் ஒன்றோடொன்று பலமான பல சண்டைகள் செய்துகொண்டு வருகின்றன.

நான் கீழே கூறும் காரணத்தால்தான் இந்த இரண்டு தேசங்களுக்கும் போர்கள் பல நிகழ்ந்தன. அஃதாவது, பண்டைக்காலத்தில் எங்கள் ஆன்றோர்கள் முட்டைகளைக் குறுக்காக அறுத்துப் புசித்து வந்தார் கள்; அங்ஙனமே, தற்சமயம் லிலிபுட்டுக்கு மன்னனாகி யிருக்கும் அவர் பாட்டனாரும் இளமைப் பருவத்தில் ஒரு முட்டையை அறுத்தபோது தம் விரல்களி லொன்றை அறுத்துக் கொண்டார்.

ஆகையால் அவர் தகப்பனார் தம் குடிகளை யெல் லாம் முட்டைகளை தாங்கள் இனிமேல் நேராகத்தான் அறுத்துப் புசிக்கவேண்டுமென்றும், அவ்வாறு செய் யத் தவறுபவர்கள் பெரிய தண்டனை விதிக்கப்படு வார்க ளென்றும் ஒரு புதிய சட்டம் ஏற்படுத்தினார். குடிகள் இச்சட்டத்தை முற்றிலும் வெறுத்ததாகவும், அவ்வாறு வெறுத்ததினால் ஆறு கலகங்கள் உண்டான தாகவும், அக் கலகங்களுள் ஒன்றில் ஒரு சக்கரவர்த்தி தன் உயிரை இழந்ததாகவும் வேறொன்றில் மற்றொரு சக்கரவர்த்தி தம் ஆட்சியை இழந்ததாகவும் எங்கள் சரித்திரங்கள் கூறுகின்றன.

பிளிவஸ்கோ தேசத்து அரசர்கள் இந்தக் கலகங்களை மிகவும் விரும்பி அவைகளில் சம்பந்தப்பட்ட குடிகளுக் கெல்லாம் அதிக ஊக்கத்தைக்கொடுத்து மேலும் மேலும் அவர்களை அவ்வாறு செய்யும்படி தூண்டினார்கள். இத் தேசத்து அரசர்கள் இவ்விதமான கலகங்கள் செய்வோரை எல்லாம் தகுந்தபடி தண்டித்து அவை நிகழ வொட்டாமல் தடுத்து விட்டார்கள். ஆகையினாலே கலகப்பிரியர்களெல்லாம் லிலிபுட் தேசத்தை விட்டுப் பிளிவஸ்கோ தேசத்திற்குச் சென்று அங்கே குடியேறினார்கள். பல்லாயிர மக்கள் முட்டைகளை நேராக அறுத்துப் புசிக்கச் சம்மதியாமல் தங்கள் உயிர்களைத் தாங்களே இழந்துகொண்டார்களென்று இத் தேசத்துச் சரித்திரத்தில் எழுதப் பட்டுள்ளது. இந்த மக்களுக்கு விருப்பப்பட்டவர்கள் இந்த செய்தியை விரிவாக, நடந்த சம்பவங்கள் ஒன்றையும் விடாமல் புத்தகங்களில் எழுதி வெளிப்படுத்தினார்கள். ஆனால், லிலிபுட் அரசர் இத்தகைய காரியங்கள் ஒன்றும் மறுமுறை நிகழவொட்டாமல் தடுத்துவிட்டார்.

எங்கள் அரசர் ஆணைக்கு மாறாக நடந்தவர்கள் அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவதை இழந்தார்கள்; ஆகையால் அவர்களெல்லாம் பிளிவஸ்கோ தேசம் போய் அத் தேசத்து மக்களுக்குத் தங்களால் ஆன உதவிபுரிந்து வந்தார்கள். இதுவன்றியும் இந்தத் தேசத்திலும் கலகமூட்டிகள் அநேகர் இருக்கின்றமையால் இவ்விரண்டு தேசங்களுக்கும் முப்பத்தாறு மாதங்களாகச் சண்டைகள் நடந்துகொண்டு வருகின்றன. இச்சண்டைகளில் சில காலங்களில் அத் தேசத்தார் வெற்றி பெறுவதும் சில சமயங்களில் இத்தேசத்தார்

வெற்றி பெறுவதுமாக இருக்கிறார்கள்.

இந்தச் சண்டைகளில் நாங்கள் நாற்பது பெரிய சண்டைக் கப்பல்களையும், அதற்கு மேலான தொகையுள்ள சிறிய கப்பல்களையும், முப்பதினாயிரம் போர் வீரர்களையும் இழந்தோம். எங்கள் பகைவர்களான பிளிவஸ்கோ தேசத்தார் எங்களைவிட பேரிழப்புக்கு உள்ளானார்கள் என்று நாங்கள் அறியலானோம்.

இஃது எவ்வாறாயினும் ஆகுக, அவர்கள் இப்பொழுது அநேக சண்டைக் கப்பல்கள் தயார் செய்து கொண்டு எங்கள்மேல் விரைவில் படையெடுக்கப் போவதாக அடிக்கடி வதந்தி வந்துகொண் டிருக்கிறது. ஆதலால் எங்கள் சக்கரவர்த்தி உன் பராக்கிரமத்தையும், வீரத்தையும் நம்பி மேற்கூறியசெய்திகள் அனைத்தையும் உன்னிடம் உரைக்கும்படி எனக்கு ஆணையிட்டார் என்று என்னிடம் மொழிந்தான்.

நான், சக்கரவர்த்திக்கு இத்தகைய நேரத்தில் வேண்டிய உதவிபுரிதல் என் தலைமையான கடமைதான் என்றும், ஆயினும் அந்நியனாகிய நான் இக்காரியங்களில் தலையிடுதல் நியாய விரோதமாயினும் அவர்பொருட்டும் அவருடைய குடிகள் பொருட்டும் என் உயிரையும் கொடுக்கத் தயாராயிருக்கிறேனென்றும் சக்கரவர்த்தியினிடம் கூறும்படி அவரிடம் சொன்னேன்.

பிளிவஸ்கோ இராச்சியம் லிலிபுட் இராச்சியத்திற்கு வடகிழக்கில் உள்ளது. இது 800 கஜ அகலமுள்ள ஒரு கடற் கால்வாயால் லிலிபுட் தேசத்தினின்றும் பிரிக்கப்பட் டிருக்கும் ஒரு தீவு. நான் அதை இதுகாறும் பார்த்ததில்லை. ஏனென்றால் லிலிபுட் தேசத்தின்மேல் பிளிவஸ்கோ தேசத்தார்கள் படையெடுக்கப் போவதாக நான் சில நாட்களுக்கு முன்னமே கேள்விப்பட் டிருந்தமையால் இத் தேசத்துக் கடற்கரையோரம் சென்றால் கப்பல்களி லிருக்கும் பிளிவஸ்கோ தேசத்து மனிதர்களில் சிலர் என்னைக் காணக்கூடும். அதனால் அவர்கள் சில புதிய ஏற்பாடுகள் செய்வார்களென்று பயந்து அத்திசையைக் கண்ணெடுத்தே பார்க்கவில்லை.

அன்றியும் போர்நிகழுங் காலங்களில் அவ்விரு தேசத்திலுமுள்ள குடிகள் ஒருவரும் தம் தேசத்தை விட்டு வெளியேறுதல் கூடாதென்றும், அங்ஙனம் செல்வரேல் மரண தண்டனைக் குள்ளாவார்களென்றும் அவ்விரு தேசத்திலும் சட்டங்கள் ஏற்படுத்தப்பட் டிருந்தன. அவ்வாறே லிலிபுட் அரசர் எந்தக் கப்பல்களும் தம் தேசத்திலிருந்து வெளியே போதலும்

வெளி தேசத்துக் கப்பல்கள் தம் தேசத்திற்குள் வருதலும் கூடா என்று தம் குடிகளுக்கெல்லாம் ஓர் அறிக்கைவிட் டிருந்தார்.

இஃதிப்படி யிருக்க நான் லிலிபுட் சக்கரவர்த்திக் குத் தம் பகையாளியின் சண்டைக் கப்பல்களை யெல் லாம் பிடித்துவிட ஓர் உபாயம் கண்டுபிடித் திருப்ப தாகத் தெரிவித்தேன். பிறகு பிளிவஸ்கோ தேசத்துச் சண்டைக் கப்பல்க ளெல்லாம் துறைமுகத்தில் நிறுத் தப்பட் டிருந்தன வென்றும், சரியான புயல் வந்ததும் அவைக ளெல்லாம் சண்டைக்குப் புறப்படு மென்றும் எங்கள் வேலைக்காரர்களில் சிலர் எங்களிடம் கூறினர் கள். கப்பலோட்டுவதில் மிக்க அனுபவமுடைய சிலரை நான் அக்கடற் கால்வாய் எவ்வளவு ஆழமுடைய தென்று வினவினேன். அவர்கள் அதிக நீர் இருக்கும் பாகம் மாத்திரம் எழுபது கிளம் கனப்சு ஆழ மிருக்கிற தென்றும் ஏனைய பாகங்களெல்லாம் ஐம்பது கிளம் கனப்சுக்கு மேல் ஆழமுடையனவாயில்லை யென்றும் மறுமொழி பகர்ந்தார்கள். (எழுபது கிளம் கனப்சு வென்பது நம் அளவுக்குச் சற்றேறக் குறைய ஆறு அடி யிருக்கும்).

நான் லிலிபுட் தேசத்திற்கு வடபாகத்திற் செல் கையில் அங்கே காணப்பட்ட ஒரு மேடையின்மேல் படுத்துக்கொண்டு என் தொலை நோக்கிக் கண்ணாடியை யெடுத்து பிளிவஸ்கோ தேசத்தின் துறைமுகத்தை அதிக உன்னிப்பாகப் பார்த்தேன். அப்பொழுது அங்கே நான் ஐம்பது பெரிய சண்டைக் கப்பல்களையும் அநேக சிறிய கப்பல்களையும் கண்ணுற்றேன். பிறகு நான் என் வீட்டிற்குத் திரும்பி வந்து, லிலிபுட் அரசரை

என்னிடம் அநேக வலிவான கயிறுகளும் இரும்புக் காருகளும் கொடுக்கும்படி கேட்டேன். கயிறுகள் நாம் மூட்டை கட்டும் கயிறு அளவு கனமும், இரும்புக் காருகள் நமது பின்னலூசி நீளமும் இருந்தன. நான் அக் கயிறுகளை யெல்லாம் மூன்ருக மடித்துத் திரித்து ஒரு வலிவான கயிறு திரித்துக்கொண்டேன்.

அப்படியே இரும்புக் காருகளையும் மும்மூன்றை யொன்ருய்ச் சேர்த்து முறுக்கிப் பல பெரிய் காருகள் செய்து அவற்றின் நுனிகளைத் தூண்டில்களாக வளைத்து வைத்துக்கொண்டேன். பிறகு ஐம்பது கயிறுகளில் ஐம்பது தூண்டில்களை மாட்டி, அவைகளை எடுத்துக்கொண்டு மறுபடியும் சமுத்திரக் கரையோரம் சென்றேன். அவ்விடத்தில் என் மேற்சட்டை, கால் ஜோடு இவைகளைக் கழற்றி வைத்துவிட்டு என் மார்புக் கவசத்தோடு சமுத்திரத்திற்குள் ஏறக்குறைய அரை மணி நேரம் நடந்து சென்றேன். என்ஞல் எவ்வளவு விரைவாகப் போகக் கூடுமோ அவ்வளவு விரைவாக நடந்து போனேன் ; மத்தியில் மாத்திரம் முப்பது கஜ தூரம் நீந்திச் சென்றேன். அரைமணி நேரத்திற்குள் பிளிவஸ்கோ தேசத்துத் துறைமுகத்தை யடைந்தேன். பகைவர்கள் என்னைக் கண்டதும் அதிக நடுக்கமுற்று கப்பல்களிலிருந்து தண்ணீரில் குதித்துக் கரைக்கு நீந்திச் சென்ருர்கள்.

அங்கே முப்பதிஞயிரம் மக்களுக்குக் குறையாமல் இருப்பதை நான் கண்டேன். பிறகு நான் அவர்கள் கப்பல்களின் அருகிற் சென்று ஒவ்வொரு கப்பலுக்கும் முன் பாகத்தில் ஒவ்வொரு துவாரம் செய்து, அத் துவாரங்களில் நான் கொண்டுபோன இரும்புத் தூண்

டில்களை முடுக்கிப் பிறகு கொண்டுவந்த கயிறுகளை யெல்லாம் ஒவ்வொரு தூண்டிலில் ஒவ்வொரு கயிறு கட்டிக் கடைசியில் இக்கயிறுகளை யெல்லாம் சேர்த்து ஒரு பெரிய கயிற்றில் கட்டினேன். நான் இவ்வாறு செய்துகொண் டிருக்கும்பொழுது பகைவர்கள் அநேக ஆயிரம் அம்புகளை என்மேல் விட்டார்கள் ; அவை களில் அநேகம் என் கைகளிலும் முகத்திலும் பட்டன. இவைகள் எனக்கு மிகவும் நோயை யுண்டுபண்ணின. அன்றியும், நான் செய்திருந்த வேலைக்கும் தடங்கல் செய்தனர். என் கண்கள் கெட்டுப்போய் விடுமென்று நான் மிகவும் பயந்தேன். பிறகு, நான் ஒரு யோசனை செய்யாமலிருந்திருந்தால் என் கண்களை இழந்துவிட் டிருப்பேன்.

நான், சக்கரவர்த்தியின் வேலைக்காரர்கள் என்னைச் சோதனை செய்தபோது அவர்களுக்குத் தெரியாமல் ஒரு பையில் எனக்கு அவசியம் வேண்டிய பொருள்களு டன், ஒரு மூக்குக் கண்ணாடியும் வைத்திருந்தேனென்று முன்னமே சொன்னே னல்லவா ? இந்த மூக்குக் கண் ணாடியை நான் பையிலிருந்து எடுத்து என் மூக்கில் மிகவும் வலிவாகப் போட்டுக்கொண்டேன். பகைவர் என்மேல் எய்த அம்புகளை நான் சிறிதுங் கவனியாமல் என்வேலையில் ஊக்கமாகவே யிருந்தேன். அவர்கள் என்மேல் எய்த அம்புகளில் அநேகம் என் மூக்குக் கண்ணாடியின்மேல் பட்டன. இருந்தபோதிலும் அந்த மூக்குக் கண்ணாடியிலிருந்த கண்ணாடிகள் மாத்திரம் கொஞ்சம் அசைந்தனவே யொழிய வேறு எவ்வித மான கெடுதியையும் நான் அடையவில்லை.

பிறகு, நான் எல்லாக் கப்பல்களையும் ஒன்ருய்ச்

சேர்த்துக் கட்டியிருந்த கயிற்றை இழுக்க ஆரம்பித்தேன். ஆனால் ஒரு கப்பலாவது இப்படி அப்படி அசையவில்லை ; ஏனென்றால், அவைகளெல்லாம் நங்கூரங்களில் வலிவாகக் கட்டப்பட் டிருந்தன. ஆகையினால் நான் இதுவரையில் செய்து வந்த வேலைகளைக் காட்டிலும் இனிச் செய்யவேண்டிய வேலைதான் அதிக தைரியத்துடன் செய்யவேண்டிய வேலையாயிருந்தது. நான் உடனே கயிற்றையும், தூண்டில்களையும் அப்படியே விட்டுவிட்டு, நங்கூரங்களில் கட்டப்பட் டிருந்த கயிறுகளை யெல்லாம் என் பேனாக்கத்தியினால் அறுத்தேன். அறுக்கும்பொழுது சுமார் இருநூறு அம்புகள் என் முகத்திலும் கண்களிலும் விடப்பட்டன.

பிறகு, நான் மேற்கூறிய பெரிய கயிற்றின் முனையைக் கையில் பிடித்துக்கொண்டு அவர்களால் மிகப் பெரிதாக நினைக்கப்படும் சண்டைக் கப்பல்களை யெல்லாம் வெகு எளிதாக இழுத்துக்கொண்டு சென்றேன். பிளிவஸ்கோ தேசத்து மக்கள் நான் இனிச் செய்யப் போகும் காரியம் இன்னதென்று சற்றேனும் அறியாததால் முதலில் ஆச்சரியத்தினால் திகைத்திருந்தார்கள். நான் நங்கூரங்களின் கயிறுகளை யெல்லாம் அறுத்ததை அவர்கள் பார்த்த பொழுது நான் அவர்கள் கப்பல்களை யெல்லாம் ஒன்றின்மேல் ஒன்றாக மோத விடுவேனென்று எண்ணினார்கள். ஆனால் அவர்கள், கப்பல்கள் எல்லாம் ஒரே வரிசையாக அசைவதையும் நான் அவைகளை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துக் கட்டியிருக்கும் கயிற்றின் முனையைப் பிடித்திழுப்பதையுங் கண்டு, வருத்தத்தாலும், பயத்தாலும் என்னால் இத் தன்மையதானதென்று சொல்ல முடியாத அளவுக்குப்

பெருங் குழப்பமடைந்து கூக்குரலிட்டார்கள்.

நான் ஆபத்தினின்றும் தப்பித்துக் கொண்ட தும் என் கைகளிலும், முகத்திலும் தைத்திருந்த அம்பு களை யெல்லாம் பிடுங்கி எடுக்கக் கொஞ்சநேரம் ஒன் றும் செய்யாமல் நின்றுகொண் டிருந்தேன். பிறகு, நான் முன் தெரிவித்தபடியே முதலில் லிலிபுட் தேசம் வந்தபோது என்னை அத்தேசத் தரசர் அவ்வூர் பழைய பெரிய கோயிலுக்குக் கொண்டுபோக என் மேல் பூசிய தைலத்தை யெடுத்து எனக்கு எவ்வெவ் விடங்களில் காயம் பட்டிருந்தனவோ அவ்வவ்விடங் களிலெல்லாம் தடவினேன். பிறகு, நான் கண்ணில் போட்டிருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்து விட்டு, ஒருமணி நேரம் காற்றுக் குறையாம லிருந்ததால் இருந்த இடத்திலேயே நின்றுகொண் டிருந்தேன். பிறகு நான் மேலே சொன்ன கப்பல்களை யெல்லாம் இழுத் துக்கொண்டு தண்ணீரில் நடந்து ஒரு கெடுதியுமில்லா மல் லிலிபுட் பட்டணத்துத் துறைமுகம் வந்து சேர்ந் தேன்.

லிலிபுட் சக்கரவர்த்தியும் அவர் ஆட்சியிலுள்ள எல்லா அதிகாரிகளும் என் வரவை எதிர்பார்த்துக் கொண்டு கடலோரத்தில் நின்றிருந்தார்கள். அவர்க ளெல்லாம் ஒரு பாதி சந்திரன் தங்கள் எதிரில் வரு வதைப் போல், நான் இழுத்து வந்த கப்பல்களெல்லாம் இருந்ததாக நினைத்தார்கள். ஆனால் நான் அப்பொழுது மார்பளவு நீரில் வந்துகொண் டிருந்ததால் அவர்கள் என்னை மாத்திரம் பார்க்கவில்லை. நான் கடற்கால் வாயின்நடுவில் வந்துகொண் டிருந்தபொழுது, லிலிபுட் தேசத்துச் சக்கரவர்த்திக்கும், அவர் பரிவாரங்களுக்

கும் கழுத்தளவு நீரில் நான் இருந்தது தோன்ருமையால், தண்ணீரில் முழுகிவிட்டேனென்றும், பிளிவஸ்கோ தேசத்துக் கப்பல்கள் தங்கள்மேல் சண்டைக்கு வருகின்றனவென்றும், தீர்மானங்கொண்டு மிகவும் மனவருத்தத்துடனும், பயத்துடனும் இருந்தார்கள்.

பிறகு, நான் நடந்து வரவர் ஆழம் குறைந்து வந்தபடியால் கொஞ்ச நேரத்திலெல்லாம் அவர்கள் என்னைக் கண்டனர். அன்றியும், நான் பேசிய வார்த்தைகளேயுங் கேட்டார்கள். ஆகையால், அவர்கள் உடனே அளவிலா ஆனந்தம் அடைந்தார்கள். நான் அவர்கள் அருகில் வந்ததும், கப்பல்களை யெல்லாம் ஒன்ருய்ச் சேர்த்துக் கட்டியிருக்கும் கயிற்றின் முனையை உயரத் தூக்கி, "மகா வல்லமை தங்கிய லிலிபுட் தேசத்துச் சக்கரவர்த்தி நெடுங்காலம் வாழ்க" என்று உரக்கச் சொன்னேன். சக்கரவர்த்தி நான் கரைக்கு வந்ததும், எனக்குத் தகுந்த நல்லுரைகள்கூறி, அவ்விடத்திலேயே அவர்களுக்குள் பெரிய கௌரவப் பட்டமாகிய கார்டக் என்னும் பட்டத்தை எனக்குக் கொடுத்தார்.

மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி தன் பகையரசனுடைய மற்றக் கப்பல்களையும் அம்மாதிரியாகவே தம் தேசத்துக்குக் கொண்டுவரும்படி என்னை வேருெரு தந்திரம் செய்யும்படி சொன்னர். அரசர்களின் பேராசை யளவிட முடியாதது. ஆதலால், லிலிபுட் சக்கரவர்த்தி பிளிவஸ்கோ தேசம் முழுமையும் ஒரே மாகாணமாக்கி அதை ஓர் அரசப் பிரதிநிதியைக் கொண்டு தாம் அரசாட்சி செய்யவேண்டு மென்றும், தம் தேசத்திலிருந்து பிளிவஸ்கோ தேசத்துக்கு ஓடிப்

போயிருக்கும் பெரிய மனிதர்களை தாம் நாசமாக்க வேண்டுமென்றும் முட்டைகளை நேராகவே அறுக்கும் படி அவர்களைத் தாம் கட்டாயப்படுத்த வேண்டுமென்றும், தாமே உலகம் முழுமைக்கும் பேரரசராக இருக்க வேண்டுமென்றும் அவர் எண்ணங்கொண்டிருக்கிறாரென்பதை நான் குறிப்பால் அறிந்தேன்.

ஆனால், நான் அவருக்கிருந்த கெட்ட எண்ணங்களை யொழிக்க கீழ்வரும் கருத்தை அவருக்கு உரைத்தேன். அஃதாவது, "இதுகாறும் தம் விருப்பப்படி இருந்த ஒரு தேசத்து மக்களை (மேலும் மிகவும் தைரியமுள்ள மக்களை, வேறொரு தேசத்து மக்களுக்கு அடிமையாக்குவதற்கு உடந்தையாக நான் ஒருக்காலும் இருக்கமாட்டேன்" என்றேன். சக்கரவர்த்தி இதைக் கேட்டதும், என்மேல் கோபமும் மனதில் வருத்தமும் கொண்டாரென்று அறிந்தேன். பிறகு இந்தச் செய்தி சக்கரவர்த்தியின் ஆலோசனை மண்டபத்தில் பேசப்பட்ட போது, புத்திக் கூர்மையுள்ள மந்திரிகள் மாத்திரம் என்மேல் குற்றஞ் சாட்டவில்லை. அரசர் ஏதோ கபட எண்ணங்கொண்டு தம் ஆலோசனை மண்டபத்தில் பேசினார்.

அப்பொழுது அங்கு வந்திருந்த நல்லறிவுடையார் மாத்திரம் தாங்கள் மௌனஞ் சாதித்து அரசர் என்னைக் கேட்டுக் கொண்டபடி நான் ஒப்பமாட்டேனென்று கூறுவது முற்றிலுஞ் சரியே என்று காட்டினர்கள். ஆனால் மற்றவர்களோ என்னுடைய பகைவர்களாதலால் ஏதோ சிலவற்றை எனக்குக் கெடுதியாகச் சொல்லாமலிருக்க அவர்களால் இயலவில்லை. பிறகு, சக்கரவர்த்திக்கும், சில மந்திரிகளுக்கும் என்னைக்

கெடுக்க இரகசியமான உரையாடல்கள் நடந்துவந்தன. அவர்கள் தீர்மானம் இன்னதென்று இரண்டு மாதத்திற்குள் வெளிப்பட்டது. அஃதாவது, அவர்கள் எப்படியாகிலும் என்னைக்கொன்றுவிட வேண்டுமென்பதேயாம். ஆனால் இவைகளெல்லாம் எனக்குப் பின்னர்த் தெரியவந்தன. அப்பொழுதுதான் நான் அரசருக்குச் செய்யும் நன்றியெத்துணைப்பலன் கொடுக்குமென் றறிந்தேன்.

எப்பொழுதாகிலும் அரசர்கள் ஒருவனையேதாகிலும் ஒரு காரியஞ் செய்யச் சொன்னால் அவன் நீதியின் பெயரால், உண்மையின் பெயரால் ஒப்புக்கொள்ள மாட்டேனென்றால், அவனை எப்படியாகிலும் கெடுக்கவேண்டுமென்று எண்ணங்கொள்வது வழக்கந்தானே. ஏறக்குறைய மூன்று வாரங்கள் கழிந்ததும், பிளிவஸ்கோ தேசத்து அரசனிடமிருந்து இந்தச் சக்கரவர்த்திக்கு ஒரு சமாதான கடிதம் வந்தது. உடனே இரு தேசத்தரசர்களும் சமாதானஞ் செய்துகொண்டார்கள். ஆனால் அந்தச் சமாதானத்தில் லிலிபுட் தேசத்து அரசர் தாம் செய்யும் சில ஏற்பாடுகளுக் கெல்லாம் பிளிவஸ்கோ தேசத்தரசரை யொத்துக்கொள்ளும்படி செய்தார். அந்த ஏற்பாடுக ளெல்லாம் லிலிபுட் தேசத்து அரசருக்குத்தான் பெரும்பாலும் அனுகூலமானவை யென்று நான் எழுதுவது அவசியமன்று.

மேற்கூறிய சமாதானஞ் செய்வதற்குப் பிளிவஸ்கோ தேசத்திலிருந்து ஆறு தூதர்கள் ஐந்நூறு வேலைக்காரர்களோடு லிலிபுட் தேசத்துக்கு வந்தார்கள். அவர்கள் தங்களுக்குரிய ஆடம்பரத்துடன் உயர்ந்த உடைகள் உடுத்திக்கொண்டு வந்தார்கள். மேற்கூறிய

ஆறு தூதர்களும் அதிகாரத்திலும், தகுதியிலும் அரச னுக்கு அடுத்தவர்கள். இவர்கள் சமாதானஞ் செய் தானதும் என்னைக் காண வந்தார்கள். ஏனென்றால், பிளிவஸ்கோ தேசத்தரசர் நான் அவருடைய மற்றக் கப்பல்களையும் லிலிபுட் சக்கரவர்த்தியின் விருப்பப்படி அழிக்கமாட்டேனென்று தடுத்துக் கூறியதை அந்தரங் கமாய் அறிந்தார். என்னிடம் வந்த தூதர்கள் ஆறு பேரும், என் ஆற்றலையும், அருங் குணத்தையும் புகழ்ந்து மிகவும் மகிழ்ச்சியுடன் என்னிடம் பேசி னார்கள்.

பிறகு, அவர்கள் நான் தங்கள் தேசத்துக்கு வர வேண்டுமென்றும், வந்து அவ்விடத்திலுள்ள ஆச்சரி யங்களை யெல்லாங் கண்டு மகிழ வேண்டுமென்றும், தங்கள் அரசர் என்னைப் பார்க்க மிக்க விருப்புற்று என்னை அவரிடம் அழைத்துவரும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறாரென்றும் என்னிடம் மிகவும் தாழ் மையாகக் கூறினார்கள். இதுவன்றி, நான் அவர்களுக்கு என்னுடைய ஆற்றலால் அநேக வேடிக்கை யாட்டங் களை தங்கள் தேசத்தில் நடத்திக்காட்ட வேண்டுமென் றும், என்னால் லிலிபுட் நகரத்தில் நடத்திக் காட்டப் பட்ட அநேக விசித்திரமான ஆட்டங்களைப்பற்றி அவர் கள் முன்னரே கேள்விப்பட் டிருப்பதாகவும் சொன்னார் கள். பிறகு, நான் அவர்களுக்கு ஆச்சரியமும், திருப்தி யும் உண்டாகும்படி அவர்களிடம் சிறிதுநேரம் பேசி னேன்.

பிறகு, நான் என் அன்பார்ந்த வாழ்த்துக்களை அவர்கள் அரசருக்குத் தெரிவிக்கும்படியாகவும் பூலோ கம் முழுமையும் தம் நற்குண நற்செய்கைகளை

அறியச் செய்த அவ்வரசருடைய தேசத்தையும், அவரையும் நான் என் ஊருக்குத் திரும்பிப் போவதற்குள் பார்க்கத் தீர்மானஞ் செய்துகொண் டிருப்பதாக அவருக்குத் தெரிவிக்கும் படியாகவும் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். பிறகு, நான் லிலிபுட் சக்கரவர்த்தியை இரண்டாம் முறை பார்த்தபோது, பிளிவஸ்கோ தேசம் போக எனக்கு அனுமதி கொடுக்கும்படி அவரைக் கேட்டேன். அவர் எனக்கு மிகவும் வெறுப்புடன் பதிலளித்தார்.

பிளிம்னுப் துரையும், பொல்கொலம் துரையும் நான் மகிமை தங்கிய ஆறு தூதர்களுடன் பேசியது என்மேல் குற்றம் என்று நினைத்தார்களென்று ஒரு மனிதனால் இரகசியமாக அறிந்தேன். ஆனாலும், இதைப் பற்றி ஒரு குற்றமும் இல்லையென்று நான் உறுதியாகச் சொல்லுவேன். நான் இப்போதுதான் அரசாங்கத்தைப்பற்றியும், அமைச்சர்களைப் பற்றியும் ஒருவித இழிவான அபிப்பிராயம் கொள்ள ஆரம்பித்தேன். நானும், மேற்கூறிய ஆறு தூதர்களும், ஒரு மொழி பெயர்ப்பாளனைக்கொண்டு எங்கள் கருத்துக்களை ஒருவர்க் கொருவர் தெரிவித்துக்கொண்டோம்.

ஏனென்றால், எனக்குப் பிளிவஸ்கோ தேசத்து மொழி பேசவும், எழுதவும், பேசினால் அறியவும் தெரியாது. பிளிவஸ்கோ தேசத்து மொழிக்கும், லிலிபுட் தேசத்து மொழிக்குமுள்ள வேறுபாடு எவ்வாறிருக்குமெனின் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஒரு தேசத்து மொழிக்கும், மற்றொரு தேசத்து மொழிக்கும் இருக்கும் வேறுபாட்டைப்போ லிருக்கும். அவ்விரு தேசத்தாரும் தங்கள் தங்கள் மொழி வெகு காலத்திற்கு முன்னே

யிருந்து வழங்கப்படுவதென்றும், உயர்ந்ததென்றும் சொல்லிக்கொண்டார்கள். மேலும், அவர்கள் தங்கள் மொழிதான் உலகம் முழுமைக்கும் உயர்ந்ததென்று சொல்லிக்கொண்டது மன்றி, மற்றெல்லா மொழிகளை யும் கற்பது தங்கள் நிலைமைக்கு மிகவும் குறைந்த தென்றும் நினைத்தார்கள்.

நான் பிளிவஸ்கோ தேசத்துச் சண்டைக் கப்பல் களில் ஐம்பதை லிலிபுட் துறைமுகம் இழுத்துக் கொண்டு வந்தபடியால் லிலிபுட் சக்கரவர்த்தி, மிகவும் கர்வமடைந்து சமாதானஞ் செய்யும்படி தம் தேசத் துக்கு வந்திருந்த ஆறு தூதர்களையும், அவர்கள் கொண்டு வந்த சமாதானக் கடிதத்தைத் தம்மிடம் கொடுக்கும்படி கட்டளையிட்டு, பிறகு அவர்கள் அபிப் பிராயங்களை யெல்லாம் தம் தேசத்து மொழியிலேயே சொல்லும்படி ஆணை செய்தார். அவர்கள் அதற்கு இணங்கினார்கள். பிறகு இரு தேசத்திற்கும் கீழ்கண்ட வாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டன :—

(1) இரு தேசத்திற்கும் ஓர் இடையூறுமின்றி நல்ல வியாபாரம் நடக்கவேண்டும்.

(2) ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு ஓடிப்போகும் மனிதர்களுக்கு அத்தேசத்து அரசர் எந்தவித நன்மையைச் செய்தலும் அவர்களைப் பல விதமான கெடுதிகள் செய்யும்படி தூண்டிவிடுதலும் கூடாது.

(3) தம்தம் தேசங்களிலுள்ள பெரிய கனவான் களுடைய பிள்ளைகளும் பணக்காரர்களுடைய பிள்ளை களும் அவர்கள் தேசத்தைவிட்டு (லிலிபுட் நாட் டைச் சேர்ந்தவர் பிளிவஸ்கோ தேசமும், பிளிவஸ்கோ

நாட்டைச் சேர்ந்தவர் லிலிபுட் தேசமும்) போய் அத் தேசத்து மொழியையும் மக்களின் குணங்களேயும் செய்கைகளேயும் அறியும்படி இரு அரசர்களும் சம்மதி கொடுத்தல் வேண்டும். நான் பிளிவஸ்கோ தேசத் துக்குச் சென்றபோது அங்கே அநேகமாக பெரிய நிலையினையுடைய மனிதர்களேயும், பெரிய வியாபாரி களேயும், மிக்க திறமையுள்ள கப்பலோட்டிகளேயும் பார்க்கவில்லே. எனக்கு லிலிபுட் தேசத்தில் விரோதி கள் நிறைய இருந்தபோதிலும் நான் பிளிவஸ்கோ தேசஞ் சென்றது மனத்திற்கு அதிகக் களிப்பைக் கொடுத்தது.

லிலிபுட் தேசத்து வழக்கங்களையும், விநோதங்களையும் மற்றொரு புத்தகத்தில் விரித்து எழுத நான் விரும்பிய போதிலும் இதில் அத்தேசத்துப் பொதுச் செய்திகளை மாத்திரம் சொல்லுகின்றேன். லிலிபுட் தேசத்து மக்கள் சாதாரணமாய் ஆறு அங்குல உயரத்திற்கும் குறைந்திருந்தது போல் அத்தேசத்து மிருகங்களும் செடிகளும், மரங்களும் உயரத்தில் மிகக் குறைவாகவே யிருந்தன. அத்தேசத்துப் பெரிய குதிரைகளும், பெரிய எருதுகளும் நான்கு அங்குல உயரத்திலிருந்து ஐந்து அங்குல உயரம் வரையிலும். ஆடுகள் ஒன்றரை அங்குல உயரத்திற்குச் சிறிது உயர்ந்தும், சிறிது தாழ்ந்தும், வாத்துக்கள் ஏறக்குறைய நமது தேசத்து ஊர்க்குருவியின் அளவு பருமனும் இருந்தன.

அப்படியே மற்றெல்லா மிருகங்களும், பறவைகளும் பொருள்களும் அத்தேசத்துக்குத் தக்கபடி உயரமாயிருந்தன. லிலிபுட் நாட்டின் மிகவும் சிறிய பொருள் என் கண்ணுக் கேதெரியாது. அவர்கள் அதிக தூரத்திலிருக்கும் பொருள்களைத் தவிர, மற்றபடி

சாதாரண தூரத்திலிருக்கும் பொருள்களை யெல்லாம் சரியாகப் பார்ப்பார்கள். அருகிலிருக்கும் பொருள்களை அவர்கள் வெகு கூர்மையாகப் பார்க்கிறார்களென்பதற்குக் கீழ்வரும் இரண்டு செய்திகளே தக்க சான்றாகும்.

(1) அத்தேசத்துச் சமையற்காரனொருவன் நமது தேசத்துக் கொசு அளவு பருமன்கூட இல்லாத ஒரு வானம்பாடியை அதன் ஒவ்வொரு பாகத்தையும் வெவ்வேறாக அறுத்துக்கொண்டிருந்ததைக் கண்டேன்.

(1) ஒரு சிறிய பெண் என் கண்ணுக்குத் தெரியாத ஊசியிலே மிகவும் நுண்ணிய பட்டு நூலைக் கோர்த்ததைக் கண்டேன்.

அத்தேசத்தில் மிகவும் பெரிய மரங்கள் ஏறக்குறைய ஏழடி உயரமிருந்தன. இந்த மரங்கள் அரசருடைய நந்தவனத்தில் மாத்திரம் இருந்தன. காய்களும், கனிகளும் அவ்வவைக்குத் தக்கவாறு இருந்தன. இவைகளின் பருமனை இதை வாசிப்பவரே யூகிக்கலாம். (கல்வி எல்லாத் துறைகளிலும் விருத்தி செய்யப்பட்டு வந்தது: அதைப் பற்றி அதிகமாய் விரித்துரைக்க எனக்குத் தற்சமயம் பிரியமில்லை. கீழ்வரும் ஒரு செய்தியே இதை வாசிப்பவருக்குச் சாலுமென்பது என் கருத்து. அஃதாவது அவர்கள் தங்கள் மொழியை யெழுதும் வகை, அஃதெப்படி யென்றால், அவர்கள் ஐரோப்பியர்களைப்போல் இடது பக்கமிருந்து வலதுபக்கம் எழுதாமலும், அரபியர்களைப்போல வலது பக்கமிருந்து இடதுபக்கம் எழுதாமலும், சைனர்களைப் போல மேலேயிருந்து கீழே எழுதாமலும், இங்கிலாந்திலுள்ள பெண்பிள்ளைகளைப்போலக் கடிதத்தின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைப்பக்கம் எழுதாமலும்

விசித்திரமாக ஒருவித சரிவாய் எழுதுவார்கள்.

இது நிற்க, இத்தேசத்துச் சட்டங்களும், வழக்கங்களும் மிகவும் நூதனமானவை. அவைகளில் இரண்டொன்றை இங்கே எழுதுகின்றேன். அரசாங்கத்திற்கு விரோதமான குற்றங்கள் செய்கிறவர்களெல்லாம் மிகவும் கொடூரமான தண்டனை விதிக்கப்படுவார்கள். பிறரால் குற்றஞ் சாட்டப்பட்ட ஒரு மனிதன், நீதிபதி விசாரணையில் குற்றவாளி யல்லவென்று தீர்மானஞ் செய்யப்பட்டால் உடனே அவன்மேல் குற்றஞ் சாட்டினவன் கொலை செய்யப்படுவான். இதுவன்றியும் குற்றஞ் சாட்டப்பட்ட மனிதன், தன் காலம் வீணுக்கப்பட்டதற்கும், தான் ஆபத்துக்குள்ளானதற்கும், சிறைச்சாலையில் வைக்கப்பட்டதற்கும், குற்றவாளி யல்லவென்று நிரூபித்ததற்குத் தான் செலவுசெய்த பணத்திற்கும் குற்றஞ் சாட்டிய மனிதனுடைய சொத்திலிருந்து தான் செலவு செய்த தொகையும், துன்பப்பட்டதற்குத் தகுந்த தொகையும் அடைவான்.

குற்றஞ் சாட்டிய மனிதனுக்குச் சொத்து ஒன்றுமில்லாதிருந்தாலும், அல்லது அந்தச் சொத்து குற்றஞ் சாட்டப்பட்ட மனிதன் அடையவேண்டிய தொகை பெறுமற்போனாலும், அரசன் தன் நிதியிலிருந்து அவன் செலவுத் தொகையை எடுத்துக் கொடுப்பான். இதுவன்றியும், அரசன் பொய்க்குற்றஞ் சாட்டப்பட்ட மனிதனுக்கு ஒரு பட்டப்பெயர் கொடுத்து, தன் பட்டணம் முழுவதும் அவன் குற்றவாளி யல்லவென்று தெரிவிப்பான். அவர்கள் பிறரை வஞ்சனை செய்யுங் குற்றம், களவுசெய்யுங் குற்றத்தைவிட பெரிய குற்றமாகப் பாவிப்பதால் அவ்வஞ்சனை செய்தவனைக்

கொலை செய்யாமல் விடுவது மிகவும் அருமை.

ஏனென்றால், அவர்கள் ஒரு மனிதன் பத்திரமாயிருந்தால் ஒருவனும் அவன் சொத்தைக் களவுசெய்ய முடியாதென்றும், உபாயமாய்ப் பிழைக்காமற்போனால் தொல்லைகள் பல உண்டாவது இயற்கையே யென்றும் கருதி யிருந்தார்கள். இப்பொழுது எனக்கு ஒன்று நினைவிற்கு வருகிறது. அஃதாவது, வேலைக்காரனொருவன் தன் தலைவனுடைய கட்டளையால் அவன் குறிப்பிட்ட ஒரு கனவானிடஞ் சென்று அவரிடமிருந்து ஒரு பெருந்தொகையை வாங்கி அதைக் கொண்டுவந்து கொடுக்காமல் ஓடிப் போய்விட்டான். அதற்காக அவன் குற்றவாளி யாக்கப்பட்டுத் தண்டனை விதிக்கப்படுஞ் சமயம் நான் நீதிமன்றத்தில் இருக்க நேரிட்டது. ஆகவே நான் அவன் குற்றத்தைக் குறைக்கும் பொருட்டு, அவன் செய்த குற்றம் நம்பிக்கைத்துரோகக் குற்றமே யொழிய ஒரு பெருங் குற்றமாகாதென்று அரசரிடம் சொன்னேன். அப்பொழுது அரசர் நான் குற்றவாளி பக்கமாய்ப் பேசியது என் அறியாமை யென நினைத்து, அக்குற்றத்தை இன்னும் பெரிய குற்றமாக்கி அவனை நன்றாய்த் தண்டித்தார். அப்பொழுது நான் அவருக்குப் பதிலுரைக்க ஒன்றும் முடியாமல், 'உலகத்தில் தேசங்களெல்லாம் பல திறப்பட்ட பழக்க வழக்கங்களை யுடையன,' வென்று சாதாரண மனிதர்கள் கூறும் பதிலை யுரைத்தேன்.

உண்மையாகவே, நான் இவ்வாறு செய்தது எனக்கு அதிக வெட்கத்தை யுண்டுபண்ணிற்று. பரிசும், தண்டனையும் எல்லா அரசாங்கத்தையும் திருப்பும் இரண்டு கீல்களென்று சாதாரண மக்கள் சொல்ல

நான் கேட்டிருந்தாலும், இந்த உண்மையை லிலிபுட் தேசத்தார் தவிர மற்றெந்தத் தேசத்தாரும் அனுபவத்திற்குக் கொண்டு வரக் காணவில்லை. எவனுகிலும் ஒருவன் எழுபத்து மூன்று திங்களாக அத் தேசத்தின் சட்டங்களின்படியே நடந்து வந்ததாக அரசனுக்குத் தக்க அத்தாட்சி கொண்டு வந்தால், அவன் தன் குணத்திற்கும், நிலைமைக்கும் தக்கபடி சில சுதந்தரங்களை அரசனிடமிருந்து பெறுவதல்லாமலும் இதற்கென்று வைக்கப்பட் டிருக்கும் பணத்திலிருந்து கொஞ்சம் பணமும் பெறுவான். இத்துடன் அரசன் அவனுக்குச் 'சினில்பால்' என்னும் ஒரு பட்டத்தையுங் கொடுப்பான். ஆயினும் இப்பட்டம் அவன் சந்ததிகளுக்குச் சேராது.

நமது தேசத்துச் சட்டங்க ளெல்லாம் தண்டனை விதிப்பனவே யன்றி யாதொரு பரிசும் கொடுப்பன வல்லவென்று நான் அவர்களுக்குக் கூறியபொழுது, அதற்கு அவர்கள் அது ஒரு பெருந் தவறு என்றே வருத்தத்துடன் கூறினார்கள்.

பிறகு, நீதிமன்றங்கள் ஒவ்வொன்றிலும் கீழுரைக்கப்படும் உருவங்களை அரசன் செய்துவைத்தான். அவைகளெல்லாம் ஒவ்வொன்றும் ஒரு மனிதனைப் போல் மரத்தால் செய்யப்பட்ட உருவையும், தலைகளின் பின் புறத்தில் இரண்டு கண்களையும், வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் ஒவ்வொரு கண்ணையும், வலது கையில் பொன் நாணயங்களுடைய ஒரு பையையும், இடது கையில் அறையை யுடைய ஒரு வாளாயுதத்தையும் உடையவையா யிருந்தன. அரசன் இவ்வாறு அவ் வுருவங்களை நிறுத்திவைத்ததின் கார

ணத்தையும் ஒரு சிறிது விளக்குகின்றேன்.

அரசன் தன் தேசத்தை வெகு கவனமாக, நாலா பக்கங்களிலும் சரியான அதிகாரிகளை வைத்து, குற்றவாளிகளைத் தக்கபடி தண்டனை செய்கிறான் என்பதைக் காண்பிக்க, அப்பதுமைக்கு நாலாப் பக்கங்களிலும் கண்கள் புதைக்கப்பட்டிருந்தன. அல்லாமலும் வலது கையில் பணப் பையையும், இடது கையில் வாளாயுதத்தையும் வைத்திருந்தது. அவ்வரசன் தான் தண்டனை செய்வதைவிட வெகுமானஞ் செய்வதில் அதிகப் பற்று உடையவனென்று காட்டும் பொருட்டாம்.

அரசன், தன் குடிகளில் எவ்வளவு சாமர்த்தியமுடையவர்களாயிருந்தாலும் அதைச் சிறிதுங் கவனியாது அவர்கள் நல்ல குணங்களையே மதித்து, எந்த வேலையிலும் நற்குணம் பொருந்திய குடிகளையே வைப்பது வழக்கம். இதைப்போலவே கடவுள் உண்டென்னும் நம்பிக்கை யில்லாதவன், எந்த உத்தியோகத்தையும் எத்தகைய திறமையானவனாயினும் அடையான். ஏனெனில் அரசர்களே தாங்கள் கடவுளுக்குப் பிரதியாட்களென்று சொல்லிக்கொள்ளுவதால் கடவுளிட மிருந்துவரும் உத்தரவின்படி நடக்கும் அரசனுடைய கட்டளைக்கு மாறுதலாக நடக்கும் மக்கள் பெரிய உத்தியோகங்கள் அடையக்கூடாதென்பது அத்தேசத்து மக்களின் கருத்தாகும்.

நான் மேற்கூறிய சட்டங்களெல்லாம் அவர்களால் தொன்றுதொட்டு அனுசரிக்கப்பட்டு வருகின்றனவேயொழியத் தற்சமயம் இருக்கும் அரசரால் அவைகள் நூதனமாக ஏற்படுத்தப்பட்டனவல்ல. ஏனென்றால்,

பெரிய உத்தியோகங்களை யடையவேண்டுவோர் கயிறு களின்மீது நாட்டியஞ் செய்யவேண்டு மென்னும் வழக் கமும், அரசரிடமிருந்து நற்கீர்த்தி யடையவேண்டு வோர், தடிகளைக் குதித்து தாண்டியும், கீழே தவழ்ந்தும் செல்லுகிற வழக்கமும், தற்காலம் ஆட்சி செய்யும் அரசரின் பாட்டனாரால் ஏற்படுத்தப்பட்டனவேயாம். ஆனால் அவைகள், இப்பொழுது நாளாவட்டமாக பல வேறுபட்ட கட்சிக்காரர்களாலும், கலகங்களாலும் இவ் வளவு உயர்ந்த நிலைமைக்கு வந்திருக்கின்றன.

செய்ந்நன்றி மறத்தல் அவர்களுக்குள் எல்லாவற் றிற்கும் பெரியகுற்றமாக எண்ணப்படுகிறது. ஏனென் றால் அவர்கள் அதற்குக் கீழ் வருமாறு காரணங் கூறு கிறார்கள். அஃதாவது, தனக்கு நன்றி செய்த ஒரு வனுக்கு எவனொருவன் கெடுதி செய்கிறானோ அவன் தனக்கு ஒரு நன்றியும் செய்யாத மற்றவர்களிடத்தில் சாதாரணமாய்ப் பகைமை பாராட்டுவான். ஆகை யினால் அம்மனிதன் உயிருடன் இருப்பதற்குத் தகுதி யற்றவனாகின்றான்.

தாய் தந்தையர் கடமைகள், மைந்தரின் கடமைகள் இவைகள் அனைத்தும் நமது தேசத்துக்கு முற்றிலும் மாறாக விருந்தன. தாய் தந்தையர்கள் தங்கள் பிள்ளை களுக்கும் பெண்களுக்கும் கல்வி கற்றுக் கொடுப்பார்க ளென்பதில் அத்தேசத்து அரசனுக்குச் சிறிதும் நம் பிக்கைக் கிடையாது. ஆகையினால் அவ்வரசர் ஒவ் வொரு பட்டணத்திலும் ஒவ்வொரு விடுதி ஏற்படுத்தி யிருந்தார். அவ்வரசர் குடிசையில் வசிப்பவர்களும், தாழ்ந்த வேலைக்காரர்களும் தவிர, மற்றெல்லாத் தாய் தந்தையர்களும் தங்கள் ஆண் குழந்தைகளையும் பெண்

குழந்தைகளையும் மேற்கூறிய விடுதிகளுக்கு அனுப்பும் படி செய்வார். அங்கே அக் குழந்தைகள் தக்க வயது வருமளவும் நன்றாகப் பாதுகாக்கப்பட்டுக் கல்வியும் கற்பிக்கப்பட்டு வரும். அத்தேசத்திலே இவ்விதமான பாடசாலைகள் அநேகம் வெவ்வேறு விதமாக விருந்தன. அப்பாடசாலைகளில் சிறு பிள்ளைகளும் சிறு பெண்களும் தங்கள் தங்கள் தாய் தந்தையர்க்கேற்ற தகுதி வருவதற்கும், தாய் தந்தையர் விருப்பப்படி அவர்களைத் திருப்பிக்கொண்டு வருவதற்கும் தக்க திறமையுள்ள சில பேராசிரியர்கள் அப் பாடசாலைகளில் நியமிக்கப்பட் டிருந்தார்கள்.

நான் முதலில் ஆண் பிள்ளைகள் விடுதிகளைப் பற்றிச் சிறிது கூறிப், பிறகு பெண் பிள்ளைகள் விடுதிகளைப் பற்றிக் கூறுகின்றேன்.

உயர்ந்த குடியிற் பிறந்த பிள்ளைகளுக்கென்று ஏற்படுத்தப்பட் டிருக்கும் விடுதிகளில், நன்றாய் வாசித்த ஆழ்ந்த கருத்துள்ள ஆசிரியர்கள் அநேகர் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். இச்சிறு பிள்ளைகள் சாதாரண உடையும், இலேசான உணவும் கொடுக்கப்பட்டு வருகிறார்கள். இவர்கள் வளர்க்கப்படும்போது மரியாதை, நியாயம், தைரியம், நன்னடக்கை, தயை, மதப்பற்று, நாட்டுப்பற்று முதலியவைகளெல்லாம் நன்றாகக் கற்பிக்கப்பட்டு வருகிறார்கள். உண்பதற்கும் உறங்குவதற்கும் ஏற்பட்டிருக்கும் காலங்களிலும், விளையாடுவதற்கும், தேகப் பயிற்சிக்கும் ஏற்பட்டிருக்கும் இரண்டு மணி நேரங்களிலும் தவிர மற்றக் காலங்களிலெல்லாம், அவர்கள் ஆசிரியர்களால்கொடுக்கப்படும் வேலைகளைச் செய்து வருகிறார்கள்.

ஆசிரியர்கள் இவர்களுக்கு ஒரு நிமிட ஓய்வும் கொடுப்பதில்லை. இவர்கள் நான்கு வயது வரையில் வேலைக்காரர்களால் ஆடை உடுத்தப்படுவார்கள். அதற்கு மேல் அவர்கள் எவ்வளவு பெரிய தனவந்தர் களுடைய குமாரர்களாயிருந்தபோதிலும் தாங்களே ஆடையை யுடுத்திக்கொள்ள வேண்டும். உணவு விடுதி களிலுள்ள வேலைக்காரர்கள் மிகவும் தாழ்ந்த வேலை களைத்தான் செய்வார்கள். அந்தப் பிள்ளைகளை, அவர் கள் தாய் தந்தையர்களாவது மற்றச் சுற்றத்தார் களாவது பார்க்க வேண்டுமானால் ஆண்டிற்கு ஒரு முறைதான் பார்க்கக்கூடும். அப்பொழுதும் அங்கே தாய் தந்தையர்கள் ஒரு மணி நேரத்திற்கு மேல் இருக்கக் கூடாது. அவர்கள் குழந்தைகளை முதலில் சந்திக்கும்போதும், பிறகு விட்டுப் பிரியும்போதும் மாத்திரம் அக் குழந்தைகளை முத்தமிட அவர்கள் அனுமதி பெற்றிருக்கிறார்கள். ஆனால் அச் சமயங் களில் அவர்கள் பக்கத்தில் ஓராசிரியர் நின்றுகொண் டிருப்பார். தாய் தந்தையர்கள் தங்கள் குழந்தைக ளிடம் இரகசியமாய்ப் பேசுதலும், அவர்களிடம் பட்சமான வார்த்தைகளைச் சொல்லுதலும், விளை யாட்டுப் பொம்மைகள், தின்பண்டங்கள் முதலியன கொடுத்தலும் கூடாதென்று தடுத்து விடுவார்.

எவனொருவன் தன் குழந்தைக்குக் கல்வி கற்பிப்ப தற்கும், உணவு கொடுப்பதற்கும், அவ்வுணவு விடுதிக் குக் கொடுக்கவேண்டிய தொகையை மாதந்தோறும் குறிப்பிட்ட நாளில் செலுத்தத் தவறுகிறானோ, அவனுக் குச் சக்கரவர்த்தி அபராதம் போட்டு அவ்வபராதத் தொகையை உணவு விடுதிக்குக் கொடுத்துவிடுவார்.

சாதாரண தகுதியுடைவர்கள், வியாபாரிகள், கைத்தொழிலாளிகள் முதலியோர் குழந்தைகளுக்கு ஏற்பட் டிருக்கும் விடுதிகளும் ஏறக்குறைய இம்மாதிரியாகவே நடைபெறும். ஆனல் வியாபாரஞ் செய்ய வேண்டிய பிள்ளைகள், பதினொன்ருவது வயதிலேயே வேலைகளின் நுட்பத்தை யறிந்துகொள்ளும் பொருட்டுத் தங்கள் வீட்டிற்கு அனுப்பப்படுவார்கள். மற்றப் பிள்ளைக ளெல்லாம் பதினைந்தாவது வயது வரையில் அவ்விடத்திலேயே இருப்பார்கள். ஆயினும், பன்னிரெண்டாவது வயதிலிருந்து படிப்படியாகத் தங்கள் விருப்பப்படி எக்காரியமுஞ் செய்ய அனுமதி பெறுவார்கள்.

பெண்களின் விடுதிகளில் நல்ல தகுதியுடையவர் பெண்களும், பெரிய செல்வருடைய ஆண்பிள்ளைகளைப் போலவே ஒழுங்கான வேலைக்காரிகளாய் உடையுடுத்தப்படுவார்கள். இவ்வேலைக்காரிகள் அவர்களுக்கு உடுப்புத் தரிக்கும்பொழுது ஆசிரியைகள் அவர்கள் எதிரில் அவசியம் இருப்பர். அச்சிறு பெண்கள் தாங்களாகவே உடை யுடுத்திக்கொள்ளும் வரையில் அவர்களுக்கு வேலைக்காரிகள் உடை யுடுத்துவார்கள். இப்பெண்கள் தாங்களே உடையுடுத்திக்கொள்ள ஐந்து வயதில் தயாராவார்கள். இந்த விடுதிகளில் இருக்கும் பணிப்பெண்கள் சிறு பெண்களுக்குப் பயங்கரமான கதைகளும், பேதைமையான கதைகளும் சொல்லுதல் கூடாது. தவறிச்சொல்லிவிட்டார்களானல் இதைக் கண்டுபிடிக்க ஏற்படுத்தப்பட் டிருக்கும் மனிதர்கள் அவர்களைப் பிடித்து அத்தேசத்து அரசனிடம்ஒப்பித்து விடுவார்கள். அரசர் அப்பெண் பிள்ளைகளைத் தன்

பட்டணத்தைச் சுற்றி மூன்றுமுறை சவுக்கால் அடித்துக்கொண்டே போகும்படி தன் வேலைக்காரர்களுக்கு உத்தரவு செய்வார். பிறகு, சிறைச்சாலையில் அவர்களை ஓராண்டு அடைத்து வைப்பார்.

இஃதன்றியும், அவ்வரசர் அவர்களை இறக்குமளவும் தங்கள் பட்டணத்துக்கப்பால் வெகு தூரத்தில் வசிக்கும்படி யாருமில்லாத ஓரிடத்தில் கொண்டுபோய் விட்டுவிடும்படி செய்வார். ஆகையினாலேதான் அத்தேசத்துச் சிறு பெண்களும் நமது தேசத்து ஆண் பிள்ளைகளைப் போல் பயமுள்ளவராயும் பேதையராயும் இருக்க ஏதுவில்லாதிருந்தது. மேலும் அவர்கள் தேகத்தில் பலவித விசித்திர உடைகள் அணிந்து அலங்கரித்துக்கொள்வது அவசியமல்லவென்றும் ஒழுக்கம், சுத்தம் இவை மாத்திரம் இன்றியமையாதவை என்றும் நினைத்திருந்தார்கள்.

ஆண் பிள்ளைகள் விடுதிக்கும் பெண் பிள்ளைகள் விடுதிக்கும் உள்ள வேறுபாடுகளைக் கீழே குறிப்பிடுகிறேன். பெண் பிள்ளைகள் ஆண் பிள்ளைகளைப் போல் அவ்வளவு வலிவாக தேகப்பயிற்சி செய்வதற்குச் சட்டங் கிடையாது. அன்றியும் வீட்டிற்குரிய காரியங்கள் ஒழுங்காகச் செய்யும்பொருட்டுப் பெண் விடுதிகளில் சில நூதனமான சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கும். சிறு பெண்பிள்ளைகள் அச்சட்டங்களைத் தழுவி நடக்கவேண்டும். அவற்றையெல்லாம் ஈண்டுரைப்பது அவசியமன்று. சிறு பெண்கள் வீட்டிற்குரிய காரியங்களை எவ்வாறு செய்ய வேண்டுமென்று கற்பிக்கப்படுவதன்றியும் சிறிது கல்வியும் கற்பிக்கப்படுவார்கள். பெண்களுக்குப் பன்னிரெண்டு வயதான

தும் அவர்கள் தாய் தந்தையர்கள் தங்கள் பெண்களுக்குப் பலவித நன்மைகள் செய்த ஆசிரியர்களுக்குச் சொல்லிவிட்டுப் பிறகு அப்பெண்களைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போவார்கள். அச் சமயம் பெண்பிள்ளைகள் தங்கள் தோழிகளை விட்டுப் பிரிய மனமில்லாதவர்களாய் அழுத கண்ணுடன் விடுதிகளை விட்டுப் பிரிந்து, தங்கள் தாய் தந்தையர்களுடன் வீடுபோய்ச் சேர்வார்கள்.

அத்தேசத்துப் பெண் பிள்ளைகளுக்குப் பன்னிரெண்டாவது வயதில் விவாகம் நடக்கும். இனி நல்ல தகுதி இல்லாத மக்கள் தங்கள் குழந்தைகளை யனுப்ப வேண்டிய விடுதிகளைப் பற்றிச் சிறிது கூறுகின்றேன். அவ்விடத்தில் சிறு பெண்பிள்ளைகள் அவரவர் தாய் தந்தையர்கள் தகுதிக்குத் தக்கபடி பெண்களுக்குரிய பலவிதமான வேலைகள் கற்பிக்கப்படுவார்கள். வேலையில் பழகவேண்டிய பெண்கள் ஏழாவது வயதிலும், மற்றப் பெண்கள் பதினொன்றுவது வயதிலும் தங்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள். குடிசைகளில் வசிக்கும் மனிதர்களும், கைத்தொழில் செய்யும் மனிதர்களும் மாத்திரமே, தங்கள் ஆண் பிள்ளைகளையும் பெண்பிள்ளைகளையும் தங்கள் வீடுகளிலேயே வைத்துக்கொள்ளலாம். ஏனென்றால், அவர்கள் பிள்ளைகள் நிலத்தை யுழுது பயிரிடவேண்டியவர்க ளாதலால் அப்பிள்ளைகளின் கல்வி தேசத்திற்கு ஒரு நன்மையையுந் தராது.

அவர்களில் நோயாளிகளுக்கும் வயது சென்றவர்களுக்கும் தனியாகத் தர்மசாலைகளும், வைத்தியசாலைகளும் அநேகம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏனெ

னில் ஒருவரும் இந்தத் தேசத்தில் பிச்சை யெடுத்தல் கூடாது.

இனிமேல், நான் இந்தத் தேசத்தில் ஒன்பது மாதமும் மூன்று நாளும் எவ்வாறு காலத்தைக் கழித்தேனென்பதையும், என் வீட்டிலிருந்த வேலைக்காரர்களைப் பற்றிய சில செய்திகளையும் சிறிது கூறுகின்றேன்.

எனக்கு ஒரு நாற்காலியும் ஒரு மேசையும் அவசியமா யிருந்ததால், அரசர் நந்தவனத்திலிருந்த பெரிய மரங்களினால் எனக்குச் சௌகரியமான ஒரு நாற்காலியும் ஒரு மேசையும் நானே செய்துகொண்டேன். எனக்கு உட்சட்டைகள் தைப்பதற்கும், என் படுக்கைக்கும் மேசைக்கும் போடுவதற்கு இரத்தினக் கம்பளிகளினால் துணிகள் தைப்பதற்கும் இருநூறு தையற்காரர்கள் லிலிபுட் அரசரால் நியமிக்கப்பட்டார்கள்.

நான் கீழே படுத்துக்கொண்டிருந்தபொழுது மேற்கூறிய தையற்காரர்களில் ஒருவன் என் கழுத்தின் அருகிலும், மற்றொருவன் என் வயிற்றின் அருகிலும் நின்றுகொண்டு ஒரு வலிவான கயிற்றைப் பிடித்துக் கொண்டார்கள். வேறொருவன் அந்தக் கயிற்றின் நீளத்தை ஒரு அங்குல நீளமுள்ள அளவு தடியால் அளந்தான். பிறகு அவர்கள் என் வலது கையின் பெருவிரலை அளவெடுத்தார்கள். அவர்கள் இந்த அளவுகள் தவிர வேறெந்த அளவும் எடுக்கவில்லை. ஏனென்றால், அவர்கள் கணிதத்தில் மிக்க வல்லவர்களென்று நான் முன்னமே சொன்னேனல்லவா ? ஆதலால் என் பெருவிரலை இருமுறை சுற்றிய அளவு என் மணிக்கட்டை ஒரு முறை சுற்றிய அளவாகும் என்

பதை அவர்கள் அறிந்து என்கழுத்து, இடுப்பு முதலிய வற்றின் அளவுகளை எடுக்காமலேயே அவற்றைத் தங் கள் மதி நுட்பத்தால் அறிந்தார்கள்.

அவ்வாறே அவர்கள் எனக்கு உட்சட்டை தைக்க அளவெடுத்துக் கொண்டார்கள். இதற்காக முந்நூறு தையற்காரர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள். என் உடுப்பு கள் தைக்கப்பட்டானதும் அவைகளைப் பார்த்தபோது அவைகள் இங்கிலாந்திலுள்ள பெண்பிள்ளைகள் ஒட்டுப் போட்டுத் தைக்கும் சட்டைகள்போ லிருந்தன. ஆனால் இவ்விரண்டிற்கும் ஒரே வித்தியாசமுண்டு. அஃதாவது ஒட்டுப்போட்டுத் தைக்கப்படும் சட்டைகள் பலவித நிறங்களோடு கூடியிருக்கும். என் உடுப்புகளோ ஒரே வித நிறமுடையனவாய் இருந்தன. என் உடுப்புக ளெல்லாம் என் வீட்டிலேயே தைக்கப்பட்டன. ஏனென் றால் அவைகளைத் தையற்காரர்கள் தங்கள் வீடுகளிலா வது கடைகளிலாவது தைக்க முடியாது.

எனக்குச் சமையல் செய்ய வேலைக்காரர்கள் முன் னூறு பேர் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள், என் வீட்டைச் சுற்றிலும் குடிசைகளில் தங்கள் குடும்பத் துடன் தங்கியிருந்தார்கள். அவர்களில் இருபது பேரை நான் என் கையில் எடுத்து என் மேசையின்மேல் வைப் பேன். நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் என் மேசையின் கீழ் மாமிசத் தட்டுகளையும் தோள்களில் குடிவகை நிறைந்த பீப்பாய்களையும் வைத்துக்கொண்டு நிற்பார் கள். இந்த மாமிசத் தட்டுகளும் பீப்பாய்களும் மேசை யின் கீழிருப்பவர்களிடமிருந்து, மேசையின்மே லிருப் பவர்கள் (நான் அவர்களைச் செய்யும்படி சொன்ன தந்திரத்தின் உதவியால்) அங்கிருந்தபடியே கயிற்

ளிடம் வரப்பெறுவார்கள்.

நான் அவர்களுக்குரைத்த தந்திரத்தைக் கீழே காட்டுகின்றேன். நான் அவர்களைச் சில கயிறுகள் கொண்டுவரச்சொல்லி, பலநாடுகளில் மக்கள் கிணற்றிலிருந்து ஒரு "பக்கெட்டை" இழுப்பது போல் மேசையின் மேலிருந்தவர்களை அத் தட்டுகளையும், பீப்பாய்களையும் நான் காட்டிய உபாயப்படி ஒவ்வொன்ருக இழுக்கும்படி சொன்னேன்.

அவர்களுடைய ஒரு தட்டில் இருந்த மாமிசம் என் ஒரு வாய்க்கு வந்தது. அவர்களுடைய ஒரு பீப்பாய் நீர் என் ஒரு விழுங்குக்கு ஆயிற்று. அத்தேசத்து ஆட்டு மாமிசம் உருசியில் நமது தேசத்து ஆட்டு மாமிசத்தைப் போலவே யிருந்தது. ஆனல் அத்தேசத்து மாட்டுமாமிசம் மாத்திரம் நமது தேசத்து மாட்டு மாமிசத்தைவிட அதிக உருசியாயிருந்தது. நான் அத்தேசத்து வாத்துக்களையும், வான்கோழிகளையும் முழுது முழுதாக ஒரே வாயில் மிகவும் சுலபமாய்ச் சாப்பிட்டுவிட்டேன். அத்தேசத்து வாத்துக்கள் நமது தேசத்து வாத்துக்களைவிட உருசியில் அதிகரித்திருந்தன. நான் அத்தேசத்துக் கோழிகளில் இருபது முப்பதை யொன்ருய் என் பேனைக் கத்தியின் நுனியில் எடுத்து ஒரே வாயில் சாப்பிட்டேன்.

சக்கரவர்த்தி, நான் சாப்பிடும் விதத்தைக் கேள்விப்பட்டு மிகவும்வியந்து, தாமும், தம்மனைவியும் தமது குமாரர்களுடனும், குமாரத்திகளுடனும் என் வீட்டிற்கு வந்து என்னுடன் ஒரு நாள் விருந்துண்ணுவதாக எனக்குத் தெரிவித்தார். நான் அதற்கு மிகவும் மனமகிழ்ந்து அவரை அவ்வாறே செய்யும்படிவேண்டிக்

கொண்டேன். பிறகு ஒரு நாள் அரசரும் அரசியும், அரச குமாரர்களும், அரச குமாரத்திகளும் ஒருங்கு சேர்ந்து என் வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் அங்கேயிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்து சிறிது நேரமானதும் நான் அவர்களையெல்லாம் நாற்காலியிலிருந்தபடியே தூக்கி என் மேசையின் மேல் வைத்தேன். அவர்கள் பாதுகாப்புக்காக வந்திருந்த வேலைக்காரர்களையும் அந்த மேசையின் மேலேயே நான் தூக்கி வைத்தேன். நிதி காப்பாளராகிய பிளிம்னுப் துரையும் தம் வெள்ளித் தடியுடன் அவர்களுடன் வந்திருந்தார். அவர் என்னை அருவருப்புடன் பன்முறை பார்த்தார். ஆனாலும் அதை நான் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

பிறகு, நடந்த விருந்தில் நான் வழக்கமாய்ச் சாப்பிடும் உணவுக்கு அதிகமாய்ச் சாப்பிட்டேன். அன்று நான் அதிகமாக உணவு உண்டது அரசவையிலிருக்கும் அதிகாரிகளையெல்லாம் வியக்கச் செய்யும் பொருட்டேயாகும். என்னைக் காண்பதற்கு அநேக பெரிய அதிகாரிகளும், பெரிய தனவந்தர் மனைவி மக்களும் என் வீட்டிற்கு அடிக்கடி வருவது வழக்கம். அரண்மனையிலிருக்கும் பெண் பிள்ளைகள் மாத்திரம் என்னைக் காண வரும்போது நான்கு சக்கரக் குதிரை வண்டிகளில் ஏறி வருவார்கள். அக்காலங்களில் என் வேலைக்காரனொருவன் அவர்கள் வருகையை எனக்கு முன்னதாகவே அறிவிப்பான். அப்பொழுது நான் என் வீட்டு வாயிற்படியண்டை வந்து அவர்களுக்குத் தகுந்த மரியாதை செய்து அவர்கள் குதிரை வண்டியை குதிரைகளோடு எடுத்துக்கொண்டு போய் என் மேசையின்மேல் வெகு

பத்திரமாக வைப்பேன். பின்னர், அவர்களுக்கு எத் தகைய கெடுதியும் வராமற்படி பார்த்துக்கொள்வேன்.

நிற்க, என் வீட்டிற்கு ஆறு குதிரைகள் பூட்டிய நான்கு சக்கர வண்டி வருமாயின் நான் அவ்வண்டியை யும் இரண்டு குதிரைகளையும் மாத்திரம் மேற்கூறிய வாறே செய்வேன். ஏனென்றால் ஏனைய நான்கு குதிரை களுக்கும் கடிவாளம் போட்டிராது. நான்கு குதிரை வண்டிகள் வந்தால்தான் என்னிடம் போதுமான மக் கள் பேச வந்திருக்கிறார்க ளென்று எண்ணுவேன். ஆகையால் குதிரை வண்டிகள் நான்கு ஒன்றாய்ச் சேர்ந் தால்தான் வண்டிகளிலிருப்பவரிடம் பேசத் தொடங்கு வேன். அந்நான்கு வண்டி மக்களையும் வண்டிகளி லிருந்தபடியே தூக்கி என் மேசையின்மேல்வைப்பேன்.

பிறகு நான் அவைகளில் ஒரு குதிரை வண்டியி லிருக்கும் மக்கள் பக்கமாய் என் முகத்தைச் சாய்த்து அவர்களுடன் உரையாடுவேன். அப்போது மற்றக் குதிரை வண்டிகள் மூன்றும் என் மேசையைச் சுற்றி மெதுவாகப் போய்க்கொண்டிருக்கும். இவ்வித உரை யாடல்கள் மூலம் நான் என் மாலைவேளைகளை யெல்லாம் மிக மகிழ்ச்சியுடன் கழித்துவந்தேன்.

நான் லிலிபுட் தேசத்தை விட்டுச் சென்ற செய்தியைச் சொல்லுவதற்கு முன்னே இரண்டு மாதங்களாக என்னைக் கொல்லுவதற்காக இரகசியமாய் நடந்துவந்த சில ஏற்பாடுகளைச் சொல்லுகின்றேன். அத்தேசத்து மக்கள் என்னை மிகவும் தாழ்ந்தவனாக மதித்து நான் அவர்கள் பெரிய மாளிகைகளுக்குச் செல்லத் தகுதியற்றவனென்று கூறினமையால், நான் இதுகாறும் பெரிய தனவந்தர்கள் விடுகளுக்குச் செல்லவில்லை. உண்மையாகவே, நான் பெரிய அரசர்களின் குணத்தையும், பெரிய மந்திரிகளின் குணத்தையும் நன்றாகப் படித்தும் கேட்டும் இருக்கின்றேன். ஐரோப்பாக் கண்டத்திலுள்ள சட்டங்களுக்கு முற்றிலும் வேறுபாடான சட்டங்களை வெகு தூரத்திலிருக்கும் லிலிபுட் தேசம் கொண்டிருக்குமென்று நான் கனவிலும் நினைத்ததில்லை. நான் பிளிவஸ்கோ தேசம் போக என் மனதைத் திடஞ் செய்துகொண்டிருந்தபோது, ஒருநாளிரவு, ஒரு மனிதன் யாருமறியாமல் என் வீட்டிற்கு வந்தான். பிறகு, அவன் தன் பெயரைத் தெரிவிக்

காமல் தன்னை உள்ளே விடும்படி என்னைக் கேட்டுக் கொண்டான்.

நான் அவனை உள்ளே வரும்படி சொல்லவே, அவன் நான் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்தான். நான் அவனை யெடுத்து என் மேற்சட்டைப் பையில் போட்டுக் கொண்டேன். அதன் பிறகு, நான் ஒரு நம்பிக்கையுள்ள வேலைக்காரனை யழைத்து, அப்போது என்னைக் காண யார் வந்தபோதிலும், நான் உடல்நலக் குறைவாயிருப்பதால் உறங்குகிறேனென்று சொல்லும் படி அவனுக்குக் கட்டளையிட்டு, அவனைத் தெருவாயிற் படிப்பண்டையே உட்கார்ந்திருக்கும்படி சொன்னேன். பிறகு என் வீட்டின் கதவை மூடிவிட்டு உள்ளே வந்து, என்னிடம் வந்த மனிதனை வழக்கப்படி என் மேசையின் மேல் உட்காரவைத்து அவனை நோக்கினேன். நாங்கள் ஒருவருக்கொருவர் வந்தனஞ் செய்தானதும் அவன் முகக்குறிப்பால் என்னிடம் ஏதோ முக்கியமான செய்தி களைத்தான் பேச வந்திருக்கிறனென்று அறிந்து கொண்டேன்.

பின்னர், அவன் அந்த நள்ளிரவில் வரவேண்டிய காரணம் என்னவென்று அவனை வினவினேன். அதன் மேல் அவன் என் உயிரும், மானமும் பற்றிய ஒரு முக்கியமான செய்திகளைத் தான் சொல்லப் போவ தாகவும், அதைத் தான் சொல்லி முடிக்கிற வரையில் நான் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருக்கவேண்டு மென்றும் என்னிடம் தாழ்மையாகச் சொன்னன். நான் அதைக் கேட்டு வியந்து அவ்வாறே செய்வதற்கு உடன் பட்டேன். பிறகு அவன் பின்வருமாறு என்னிடம் சொன்னன்.

அநேக பெருமக்களும் பிரபுக்களும், அமைச்சர் களும், அதிகாரிகளும், தங்கள்பொருட்டு, வெகு இரகசியமாகச் சில நாட்களுக்கு முன்னர் இத்தேசத்துச் சக்கரவர்த்தியால் அவர் அவைக்கு வரவழைக்கப்பட்டார்களென்று தாங்கள் அறியவேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் சக்கரவர்த்தி ஒரு தீர்மானஞ் செய்துவிட்டார். கப்பற்படைத் தலைவராகிய ஸ்கைரஷ் பொல் கொலம் தாங்கள் இத்தேசம் வந்ததுமுதல் தங்களுக்குப் பெரும் பகைவரா யிருந்து வருகிறுரென்பதைச் சாலவும் அறிவீர்கள். இந்தப் பிரபுவும் நிதி காப்பாளரான பிளிம்னுப் பிரபுவும் இன்னுஞ் சில பிரபுக்களும் தாங்கள் அரசத் துரோகியென்றும், அநேக குற்றங்கள் செய்திருக்கிறீர்களென்றும், தங்கள்மேல் குற்றஞ் சாட்டி யிருக்கிருர்கள். தாங்கள் எனக்குச் செய்த நன்மைகளை யெண்ணித் தங்களுக்கு கைம்மாறு செய்யவேண்டுமென்று கருதித் தற்காலம் அரசாங்கத்தில் தங்கள் நிமித்தம் நடந்துவரும் காரியங்களையெல்லாம் தக்க மனிதர்களைக் கொண்டு அறியலானேன். தங்கள்மேல் அவர்கள் என்னென்ன குற்றங்கள் சாட்டினுர்களோ அவையெல்லாம் நான் ஒரு கடிதத்தில் எழுதி இதோ கொண்டு வந்திருக்கிறேன். இதை நான் தங்களுக்குச் சொல்லுவது என் உயிருக்கே ஆபத்தை விளைவிப்பதா யிருந்தாலும் தாங்கள் எனக்குச் செய்த நன்மைகளைக் கருதி இவ்வாறு செய்யத் துணிந்தேன்.

இதோ நான் கடிதத்தில் எழுதினதை வாசிக்கின்றேன். தங்களைக் கவனமாய்க்கேட்கும்படி வேண்டிக்கொள்கின்றேன்.

## மலைமனிதன்மேல் சாற்றப்பட்ட குற்றங்கள்

1. குயின் பஸ்பிளஸ் டிரின் என்னும் மலைமனிதன் பிளிவஸ்கோ தேசத்துச் சக்கரவர்த்தியின் சண்டைக் கப்பல்களில் சிலவற்றை லிலிபுட் துறைமுகப் பட்டணம் கொண்டுவந்து சேர்த்ததும், லிலிபுட் அரசர் அவனை மற்றக் கப்பல்களையும் அவ்வாறே செய்யும்படி கேட்டுக்கொண்ட பொழுது அவன் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. அன்றியும் லிலிபுட் சக்காவர்த்திதாம் பிளிவஸ்கோ தேசம் முழுவதையும் ஒரு மாகாணமாக்கிப் பிறகு தன் தேசத்திலிருந்து ஒரு பிரதிநிதியை அங்கே யனுப்பி அப்பிரதிநிதியைக் கொண்டு அதைத் தான் ஆளவேண்டுமென்று மேற்கூறிய மலைமனிதனிடம் சொன்னபோது அதற்கும் அம்மலைமனிதன் குற்றமற்ற மக்களுக்குக் கெடுதி செய்தலும், அவர்களை அடிமையாக்குதலும், தனக்கு விருப்பமில்லை யென்று கூறி, அவர் கருத்துக்கு மாருக நடந்தான்.

2. பிளிவஸ்கோ தேசத்திலிருந்து லிலிபுட் தேசத்துக்குச் சமாதானஞ் செய்துகொள்ள வந்த தூதர்களை மேற்கூறிய மலைமனிதனாகிய பிளஸ்டிரின் அன்புடன் உபசரித்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து சில அருமையான வேடிக்கைகளுஞ் செய்து காட்டி அத்தூதர்களை மனங் களிக்கச் செய்தான். மேலும் அத் தூதர்கள் அரசராகிய பிளிவஸ்கோ தேசத்தரசர் இத்தேசத்து அரசருக்குச் சின்னுட்களுக்கு முன்பு யாவருமறிந்த கொடிய பகைவரா யிருந்தாரென்பது அம் மலைமனிதன் அறியாத செய்தியன்று. இதை யறிந்திருந்தும் அவன் மேற்கூறியபடி செய்தது

பெரியதோர் அரசத் துரோகமாம்.

2. மேற்கூறிய மலைமனிதன் நன்றி பாராட்டுங் குடிமகனு யிராமல் இத்தேசத்துப் பேரரசனிட மிருந்து ஏதோ வாய்மொழியாக ஒரு சுதந்தரம் பெற்றுக் கொண்டு பிளிவஸ்கோ தேசத்தையும், அத்தேசத்துச் சக்கரவர்த்தியையும் போய்ப் பார்ப்பதற்குத் தயாராக இருக்கிறுன். அவன் வாய்மொழியாகக் கிடைத்த இச் சுதந்தரத்தையே ஒரு சாதனமாகக் கொண்டு. இத் தேசத்துச் சக்கரவர்த்திக்குச் சில காலத்துக்கு முன் வெளிப்படையான விரோதியாகவிருந்த பிளிவஸ்கோ தேசத்துச் சக்கரவர்த்திக்குப் பலவித நன்மைகள் புரிந்து, அச்சக்கரவர்த்தி சிந்தை களிக்க அவர் முன்னிலையில் பலவித ஆட்டங்களும் செய்து காண்பிக்கச் சித்தமாயிருக்கிறுன்.

இவை யல்லாமல் இன்னுஞ் சில குற்றங்கள் தங்கள்மேல் சாட்டப்பட் டிருக்கின்றன. இருப்பினும், நான் வாசித்த குற்றங்களே அவைகளுள் முக்கியமானவைகளாம். நிற்க, அவ்விதக் குற்றங்களை நிலைநாட்ட அநேகக் கூட்டங்கள் அரசன் ஆலோசனை மண்டபத்தில் அந்தரங்கமாகக் கூட்டப்பட்டன. அக்கூட்டங்களிலெல்லாம் இத்தேசத்துச் சக்கரவர்த்தி தாங்கள் அவருக்குச் செய்த நன்மைகளை எண்ணி மௌனஞ் சாதித்தார். ஆனுல், நிதிகாப்பாளரும், கப்பற் படைத் தலைவரும் மாத்திரம் தங்கள் வீட்டை இரவில் கொளுத்தித் தங்களை இழிவும், வருத்தமுமுள்ள மரணத்திற்குள்ளாக்க வேண்டுமென்று பிடிவாதமாகக் கூறினுர்கள்; ஆகையால் கப்பற் படைத் தலைவர் நஞ்சு பூசிய அம்புகளை யுடைய இருபதினுயிரம் மனிதருடன்

தங்கள் முகத்திலும், கைகளிலும் அம்புகளை எய்யத் தங்கள் வீட்டிற்கு வரப்போகிருர்.

அன்றியும், தங்கள் வேலைக்காரர்களில் சிலர் தங்களுக்குத் தெரியாமல் தங்கள் உட்சட்டைகளிலும், துப்பட்டிகளிலும் நஞ்சு கலந்த சாற்றைத் தெளிக்க அரசருடைய அதிகாரிகளால் அறிவிக்கப்படுவார்கள். அவர்கள் நஞ்சு உள்ள சாற்றை மேற் சொன்னபடி தெளித்தால் தேகத்திலுள்ள மாமிசங்களெல்லாம் பீறிக் கொண்டு வெளியே வந்துவிடுமாம். அப்பொழுது தாங்கள் மிகவும் வருத்தமான மரணத்தை யடைவீர்களாம். ஆயினும் சக்கரவர்த்தி மாத்திரம் தம்மால் கூடுமானுல் தங்கள் உயிரைக் காப்பாற்ற உறுதியுடன் இருக்கிருர்.

நிற்க, தங்களுக்கு உண்மையான நண்பரென்று தாமே சொல்லிக்கொள்பவரும், அரசன் அந்தரங்க காரியங்களுக்கெல்லாம் முதற் காரியதரிசியுமான ரெல்டிரசல் துரை மேற்கூறிய செய்தி பற்றிப் பேசிய பொழுது தம் கருத்தைக் கீழ் வருமாறு வெளியிட்டார்.

'' சக்கரவர்த்திக்கு மலைமனிதனைக் கொல்லக்கூடாதென்று எண்ணம் இருக்குமானுல, அவன் இரு கண்களை மாத்திரம் குருடாக்கிவிட ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதால் அவனுக்குக் கண்கள் போனுலும் வலிவு குறையாது. ஆகையால், அவன் எப்பொழுதும் நமது சக்கரவர்த்திக்குப் பேருதவியாயிருக்கக்கூடும்.

இதைக் கேட்டு நிதி காப்பாளர் அவருரைத்ததைத் தடுத்துத் தங்களை ஒரே முடிவாய்க் கொலையேதான் செய்துவிட வேண்டுமென்று வெளிப்படையாய்ச்

சொன்னார். அவர் தம் முடிவிற்குக் கீழ்வருமாறு சமாதானங்கள் கூறலானார்.

"மலைமனிதன் சாப்பாட்டிற்கு அதிகப் பணம் வேண்டியதா யிருக்கிறதென்றும், ஆகையால் நமது அரசர் பணம் முழுமையும் விரைவில் ஒன்றுமில்லாமல் ஒழிந்துவிடுமென்றும், அரசர் அந்தரங்க முதற் காரியதரிசியவர்களே எண்ணப்படுகிறார்; அன்றியும், சில கோழிகளின் கண்கள் ஏதோ காரணத்தால் குருடாக்கப் பட்டால் அவைகள் முன் தின்றுகொண் டிருந்த ஆகாரத்தைவிட அதிகமாய்த் தின்று அதிசீக்கிரத்தில் கொழுத்து விடுவதைப்போல மலைமனிதன் கண்கள் பாழாக்கப்பட்டால் அவன் இப்பொழுது உண்ணும் உணவைக் காட்டிலும் மிகுதியாய் உண்ணுவான். அப்பொழுது நமது சக்கரவர்த்தியின் பணம் இன்னும் விரைவில் ஒழிந்துவிடும்."

ஆனால், சக்கரவர்த்தி, தங்களைக் கொல்லக் கூடாதென்று உறுதியாகச் சொன்னதாலும், ஆலோசனைக் குழுவினர், தங்கள் கண்களைக் குருடாக்கி விடுவது மிகச் சிறிய தண்டனையென்று கூறினமையாலும், அரசர் எல்லோரையும் மறுமுறை வேறு விதமான தண்டனை யேதேனும் யோசிக்கும்படி கட்டளையிட்டார். அப்பொழுது தங்கள் அருமை நண்பர், அரசருடைய அந்தரங்க முதற்காரியதரிசி, தன் இருக்கையினின் றெழுந்திருந்து தாம் உரைக்கப் போவதை எல்லோரும் இறுதிவரையில் பொறுமையுடன் மிகக் கவனமாய்க் கேட்கும்படி கூறினார். பிறகு அவர் கீழ்வருமாறு மொழியலானார்.

'நான் முன் கூறியதை நிதி காப்பாளர் தடுத்

துரைத்தமையால் இப்பொழுது சொல்லுவ தென்ன வென்ருல், நமது அரசருடைய அந்தரங்கக் காரியங் களை யெல்லாம் நான் பார்த்து வருகின்றமையால் மலை மனிதனுடைய உணவைச் சிறிது சிறிதாக நாளுக்கு நாள் குறைத்துக் கொண்டே வருகிறேன். அவ்வாறு செய்வதால் அவன் பலம் சிறிது சிறிதாகக் குறைந்து தேகம் மெலிந்து தன் பசியைக் கொஞ்சங் கொஞ்ச மாக இழந்து சில மாதங்களுக்குள் இறந்துவிடுவான். உண்மைதான், இவ்வளவு பெரியமனிதனுடைய பிணம் நமது குடிகளுக்கு அதிக துர்நாற்றத்தைக் கொடுக் காதா என்று கேட்பீராஞல் அதற்குச் சிறிதுங் காரண மில்லை ; ஏனென்ருல், அவன் இறக்குந் தருணத்தில் அவன்தேகம் அரைப்பாகத்துக்குமேல் குறைந்துவிடும். அப்போது ஐந்நூறு அறுநூறு ஆட்களைக் கொண்டு அவன் மாமிசங்களை யெல்லாம் இரண்டு மூன்று நாட் களில் அறுத்துவிடும்படி செய்யவேண்டும். பிறகு அம் மாமிசங்களை யெல்லாம் மேற்கூறிய ஆட்கள், சுமை வண்டிகளிலேற்றிப் பட்டணத்திற்குத் தொலைதூரத் தில் கொண்டுபோய் பெரிய பள்ளங்கள் வெட்டி அவைகளில் புதைத்துவிடும்படி செய்தல் வேண்டும். பிற்பாடு, மலைமனிதனுடைய எலும்புக் கூட்டை மாத் திரம் நமக்குப் பின்வரும் சந்ததிகள் கண்டுகளிக்க நமது பட்டணத்தில் ஒரு கோரியாக நிறுத்தி வைத்தல் வேண்டும்.''

இதைக் கேட்டு ஆலோசனைக் குழுவினரில் ஒருவர் தவிர மற்றெல்லோரும் இவர் புத்தி நுட்பத்தைப் புகழ்ந்து அவ்வாறே செய்தல் வேண்டுமென்று கூறி னார்கள். அவ் வொருவர் யார் என்ருல் பொல்கொலம்

என்னும் துரையவர்களேயாவர். இவர் மாத்திரம் மேற் கூறிய ஏற்பாடுகளுக்குச் சிறிதும் இசையவே இல்லை. ஆயினும் அவற்றைத் தடுத்தவர் இவரொருவரே யாத லால் இவர் எண்ணம் ஒன்றும் ஓங்கவில்லை. மேற் கூறிய காரியதரிசியும், மற்றையோரும் மலைமனிதன் உணவை நாளுக்கு நாள் குறைத்துவரும் தகவலை ஒருவரும் அறிதல் கூடாதென்று மொழிந்தார்கள். இந்த ஏற்பாட்டுக்கு சக்கரவர்த்தியும் மனமிசைந்தார். நிற்க, தங்கள் கண்களைக் குருடாக்கிவிடும் செய்தியை மாத்திரம் தங்களுக்கு அறிவிப்பார்கள். இன்றைக்கு மூன்றும்நாள் தங்கள் நண்பராகிய அரசருடைய அந்த ரங்க காரியதரிசி, தங்கள் வீட்டிற்கு வந்து தங்கள் முன் கிழ்வரும் ஏற்பாட்டை வாசிப்பார்.

சக்கரவர்த்தியும், ஆலோசனைக் குழுவினரும் உன் மேல் வைத்திருக்கும் அன்பினால் உன்னைக் கொலை செய்யாமல் கண்களை மாத்திரம் குருடாக்கி விட தண்டனை விதித்திருக்கிறார்கள். இருப்பினும் நீ செய்த குற்றங்களுக்கு இது மிகச் சிறிய தண்டனையேயாகும். ஆகையால், இத் தண்டனைக்குத் தடை செய்யாமல் மரியாதையுடன் உடன்படுவாயென்று சக்கரவர்த்தி உறுதியாக வெண்ணுகிறார்.''

நிற்க, கண்களைக் குருடுபடுத்த சக்கரவர்த்தியின் வேலைக்காரர்கள் வரும்போது அவருடைய மிகத்திறமை வாய்ந்த வைத்தியர்களும் அவைகள் சரியாகக் கெடுக்கப் பட்டனவா வென்றறிய அவ் வேலைக்காரர்களுடன் வரு வார்கள். அவ்வேலைக்காரர்கள் தங்கள் கண்களைக் கீழ் வருமாறு குருடுபடுத்துவார்கள்.

தங்களைத் தரையில் படுத்துக்கொள்ளும்படி

சொல்லி, அவ் வேலைக்காரர்கள் தங்கள் கண்ணின் மணிகளில் வெகு கூர்மையான அம்புகளை எய்து குருடாக்குவார்கள். தாங்கள் இதற்குத் தகுந்த முயற்சிகள் செய்ய தங்கள் நுண்ணறிவைப் பயன்படுத்தல் வேண்டும். என்மேல் ஒருவரும் ஐயங் கொள்ளாமலிருக்க நான் இப்போதே யாருமறியாமல் என் வீடு போய்ச் சேரவேண்டும் என்றிவ்வாறு என் நண்பன் என்னிடங் கூறித் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தான். அவன் சென்றதும் என் மனதில் உண்டாகிய சந்தேகங்களும் வருத்தங்களும் இத்தன்மையதென என்னால் சொல்ல முடியாது. கடைசியாக நான் ஒரே தீர்மானஞ் செய்துகொண்டேன். அஃதாவது அவர்கள் குறித்த மூன்று நாளாவதற்கு முன்னரே அரசரின் அந்தரங்க காரியதரிசியா யிருப்பவர்க்கு ஒரு கடிதம் எழுதி விடுப்பதே. அக்கடிதத்தில் நான் மறுநாட்காலை பிளிவஸ்கோ தேசம் போவதாய் எழுதியிருந்தேன்.

இக் கடிதத்திற்கு அவர் எழுதும் பதிலையும் எதிர்பாராமல் நான் லிலிபுட் தேசத்துச் சண்டைக் கப்பல்கள் இருக்கும் துறைமுகத்தை யடைந்தேன், அங்கே சண்டைக் கப்பல்களில் பெரியது ஒன்றைப் பிடித்து அதன் முன்பாகத்தில் ஒரு கயிறு கட்டினேன். பிறகு நான் அக் கப்பல் நங்கூரத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றை யறுத்தேன். அறுத்தானதும் நான் உடுத்திருந்த உடைகளை யெல்லாம் கழற்றி அந்தக் கப்பலில் வைத்தேன். பிறகு நான் அக்கப்பலை என் பின்னே இழுத்துக்கொண்டு, ஆழமில்லாத இடங்களில் நடந்தும், ஆழமுள்ள இடங்களில் நீந்தியும் பிளிவஸ்கோ தேசத்தின் துறைமுகத்தை யடைந்தேன்.

அங்கே, அநேக மக்கள் என்னைக் கண்டு அதிக மகிழ்ச்சி யடைந்தார்கள். பின்பு அந்த மக்கள் நான் பிளிவஸ்கோ தலைமைப் பட்டணம் போக எனக்கு வழி காட்டும் கருவிகள் இரண்டு கொடுத்தார்கள். அவை களை நான் பிளிவஸ்கோ பட்டணத்திற்கு இருநூறு கஜதூரம் போகும்வரையில் என் கையில் வைத்திருந் தேன். பிறகு அவ்விடத்தில் நின்று, அத் தேசத்துக் காரியதரிசிகளில் ஒருவருக்கு நான் அவர்கள் பட்ட ணத்திற்கு இருநூறு கஜ தூரத்தில் வந்திருப்பதாக வும், பிளிவஸ்கோ சக்கரவர்த்தி கட்டளைகளுக்குக் காத்துக்கொண் டிருப்பதாகவும், அறிவிக்கும்படி என் னோடு வந்த மக்களில் சிலரைக் கேட்டுக்கொண்டேன். உடனே அவர்களில் ஒருவன் அவ்வாறே பிளிவஸ்கோ தேசத்தின் முதற் காரியதரிசிக்கு அறிவித்தான்.

பிறகு, அவன் என்னை விட்டுச் சென்ற ஒருமணி நேரத்திற்குள் அத்தேசத்துச் சக்கரவர்த்தி தன் அருமை மனைவி மக்களோடும் பெரியவர்களோடும் என்னைக் காண வருவதாகவும், நான் அவர் தேசத்துக் குப் போவது தாம் செய்த பெரும் பாக்கியமென்றும், ஒரு கடிதம் எழுதி ஒரு தூதனிடம் எனக்குக் கொடுத் தனுப்பினார். அதைக் கண்டு நான் அகமகிழ்ந்து அவ் விடத்தை விட்டுப் புறப்பட்டு பட்டணத்துத் திசையை நோக்கிச் சென்றுகொண் டிருந்தேன். அப்பொழுது வழியில் நான் அச் சக்கரவர்த்தியும் அவர் மனைவி மக் களும் மிக ஆடம்பரத்துடன் என்னெதிரில் வந்து கொண்டிருந்ததைக் கண்டேன். சக்கரவர்த்தியும்பெரிய உத்தியோகஸ்தர்களும் குதிரைகளின் மேலேறிக் கொண்டு வந்தார்கள். சக்கரவர்த்தினியும் உயர்ந்த

மங்கையரும் வெகு நேர்த்தியான நான்கு சக்கரக் குதிரை வண்டிகளில் வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் என்னைக்கண்டு எள்ளளவும் பயமின்றி மகிழ்வுடன் கீழே இறங்கினார்கள். உடனே நான் தரையில் விழுந்து சக்கரவர்த்தியின் கரங்களிலும் சக்கரவர்த்தினியின் கரங்களிலும் முத்தமிட்டேன். பிறகு, சக்கரவர்த்தியினிடம் நான் அவருக்கு முன் வாக்குத் தத்தஞ் செய்தபடி பிளிவஸ்கோ பட்டணம் வந்தேனென்றும், வருவதற்கு லிலிபுட் அரசரிடம் உத்தரவு பெற்றேனென்றும், என்னால் கூடிய நன்மைகளை அச் சக்கரவர்த்திக்குச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேனென்றும் கூறினேன்.

லிலிபுட் அரசராலும் மற்றும் சில பிரபுக்களாலும் எனக்குண்டான அவமானத்தைப்பற்றி நான் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. ஏனென்றால் லிலிபுட் அரசர், தாம் என் கண்களைக் குருடாக்க யோசித்திருந்த செய்தியை எனக்கு இதுகாறும் அறிவிக்காததாலும் அவர் எண்ணங்களையெல்லாம் என் அன்பிற்குரிய நண்பனால்தான் அந்தரங்கமாய் நான் அறிந்தேனாதலாலும் துன்பத்தை விளைவிக்கும் இச் செய்தியை ஒன்றும் நான் அறியாதவனைப் போல் நடித்துக் கொண்டேன்.

ஐயோ பாவம்! லிலிபுட் சக்கரவர்த்தியும் அவர் ஆலோசனை சங்கத்தாரும் என் கண்களில் மண்ணைப் போடலாமென்று எண்ணியிருந்தார்கள்; ஆனால் நான் அவர்களுக்கு ஒரு பெரிய ஏமாற்ற மளிக்கக் கருதியிருந்தேனென்பதை யறியாமற் போனார்கள். அன்றியும் அவர்கள் சாமர்த்தியங்கள் செயல்படாதென்றும்

நினையாமலிருந்தார்கள்

நிற்க, பிளிவஸ்கோ சக்கரவர்த்தி எனக்கு எவ்வளவு உபசரணைகள் செய்தாரென்பதையும் மற்றும் அத்தேசத்துப் பெரிய பிரபுக்களெல்லாம் என்னிடம் எவ்வளவு அன்பு பாராட்டினார்களென்பதையும், நான் வாசிப்பவருக்கு மிகுதியாகச் சொல்ல வேண்டியதோர் அவசியமில்லை. பெருஞ் சிறப்பினை வாய்க்கப்பெற்ற அவ்வரசர் தம் மேலான குணத்துக்குத் தக்கவாறு என்னை யுபசரித்தாரென்பதையே இதை வாசிப்பவர் உணரவேண்டும். நான் பிளிவஸ்கோ தேசத்தில் படுக்கை யில்லாமல் பட்ட பாட்டையும் மற்றும் சில காரணங்களால் அனுபவித்த துன்பங்களையும் இப் புத்தகத்தில் விரிவாகக் கூற எனக்குப் பிரியமில்லை.

## பயிற்சி வினாக்கள்

கீழ்க்காணும் தலைப்புக்களில் கட்டுரைகள் எழுதிப் பயிற்சி பெறுக.

1. கலிவரின் இளமைவாழ்வும் பயணமும்
2. லிலிபுட் தீவில் கலிவர்
3. லிலிபுட் தீவில் கலிவர் கண்ட காட்சிகள்
4. லிலிபுட் தீவின் பேரரசர் பெருமைகள்
5. லிலிபுட் தீவின் பழக்க வழக்கங்கள்
6. லிலிபுட் தீவில் நடைபெற்ற ஆட்டங்கள்
7. கலிவரை விடுதலைசெய்ய விதிக்கப்பட்ட நிபந்தனை
8. பிளிவஸ்கோ மன்னனும் கலிவரும்
9. லிலிபுட் மன்னரின் அன்பிற்கு உரியவரானது
10. லிலிபுட் அரசரும் அமைச்சரும்
11. மலைமனிதனின் சாதனைகள்
12. அரசரைப் பற்றிய கலிவரின் கருத்து
13. மன்னன் வேண்டுகோளும் மலைமனிதன் செயலும்
14. லிலிபுட் மக்களின் அறவுத் திறமை
15. லிலிபுட் பயணத்தினால் நாம் அறிபவை.